
GOKULAM

கோகுலம்

பிப்ரவரி '94 ரூ. 3.00



டீ.வி.: நண்பனா? எதிரியா?



1994
பிப்ரவரி மாத இதழ்
மலர் : 12 இதழ் 1

கோகுலம்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

வணக்கம். புத்தாண்டு இதழைப் பாராட்டி ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன. வீரச் சிறுமி அம்பிகாவைப் போல் நெருக்கடியான நேரத்தில் துணிச்சலைக் கைவிடாது மெச்சத் தகுந்த விதத்தில் நடந்து கொண்டு முன் உதாரணமாகத் திகழும் சிறுவர் எங்கள் ஊரிலும் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றியெல்லாம் எழுதினால் வெளியிடுவீர்களா என்று பலர் கேட்டிருக்கிறார்கள். அம்பிகாவைப் போல் நெருக்கடி நேரத்தில் துணிச்சலாக நடந்து கொண்ட சிறுவரைப் பற்றி மட்டும் அல்ல, கலை, கைத்திறனில் சாதனை படைத்து மாநில அளவில் புகழ்பெற்றுள்ளவர்களைப் பற்றியும் முழு விவரங்களுடன் எங்களுக்கு எழுதுங்கள். தகுதி இருப்பின் அவர்களையும் கோகுலத்தில் இடம்பெறச் செய்கிறோம்.

பள்ளி இறுதி வகுப்பில் தமிழ் படித்த சிறுவர் எல்லாம் மாணவர் மன்றத்தைப் பற்றி அறிந்திருப்பார்கள். அதை நன்கு வளர்த்த பெருமைக்கு உரியவரும், சிறுவர் இலக்கியம் செழிக்கப் பாடுபட்டவருமான அமரர் தணிகை உலகநாதன் அவர்களுடைய பெருமையை விளக்கும் கட்டுரை ஒன்று இந்த இதழில் வெளியாகிறது.

''அபிராமியின் அட்டிகை''யில் பரபரப்பான புதியதொரு திருப்பம் இந்த இதழில் இருக்கிறது. இது தொடர்கதைக்கு மேலும் சுவையூட்டும்.

முல்லாவைப் போல் சிங்கப்பூரில் பிரபலமாக விளங்கும் ''புயா'' இந்த இதழில் அறிமுகம் ஆகிறார். இனி அடிக்கடி புயா உங்களை மகிழ்விப்பார்.

இந்த இதழில் உங்கள் கோகுலம் பன்னிரண்டாது வயதில் அடி எடுத்து வைக்கிறது. கோகுலம் பெற்றுள்ள பெருமைக்கு அதன் ஆயிரக்கணக்கான வாசக அன்பர்களின் அன்பும் ஆதரவுமே காரணம். ஆசிரியப் பெருமக்களின் ஆதரவும் குறிப்பிடத்தக்கது. இந்த நல்ல நேரத்தில் இவர்களுக்கெல்லாம் தனது அன்பான நன்றியை கோகுலம் தெரிவித்துக் கொள்கிறது.

கோகுலத்தை உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி, காசு கொடுத்து வாங்கிப் படிக்க வையுங்கள். கோகுலத்திற்கு சந்தா கட்டி நண்பர்கள், உறவினர்களுக்கு பிறந்த நாள் பரிசாக அனுப்பி வையுங்கள். மிகக் குறைந்த செலவில் இதைவிடப் பயன்தரும்; மகிழ்ச்சி தரும் பரிசு வேறு என்ன இருக்க முடியும்?



அன்புடன்,

ரேவதி


(கௌரவ ஆசிரியர்)


உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேணும். பாரதியார்

கோகுலம்

1994 பிப்ரவரி: இந்த இதழில்

✱ பேரழகி பத்மினி - பக்கம் 41





பரம்பரைக் கதைகளான தெனாலி ராமன் கதைகள், பீர்பால் கதைகள், விக்கிரமாதித்தன் கதைகள், மரியாதை ராமன் கதைகள், சாலமன் - ஷிபா கதைகள், நாவா பட்டணவில் கதைகள் என்று பலவற்றை நீங்கள் கேட்டிருப்பீர்கள். இவைகளில் பல கதைகள் ஒரே மாதிரியாக இருக்கும் அதிசயத்தையும் நீங்கள் கண்டுபிடித்திருப்பீர்கள். இதே போல் அண்மைக் காலத்தில் பிரபலமாகி விட்ட முல்லா கதைகள் என்ற ஷோஜா கதைகளையும் படித்திருப்பீர்கள்.

சிங்கப்பூரில் முல்லாவைப் போலவே ஒரு கற்பனைப் பாத்திரத்தை மக்கள் படைத்திருக்கிறார்கள். புத்திசாலித்தனத்தைவிட நகைச்சுவை உணர்வே இதில் அதிகம். மாணவர்கள் ஆசிரியரைக் கேலி செய்யவும், ஆசிரியர்கள் மாணவரைக் கேலி செய்யவும், முதலாளி வேலை செய்யாத தொழிலாளியைக் கிண்டல் பண்ணவும், தொழிலாளி முதலாளியைக் கிண்டல் பண்ணவும் இந்தப் பாத்திரத்தைப் பயன்படுத்துகிறார்கள். இந்தக் கற்பனைப் பாத்திரத்தின் பெயர் புயா. பாத்திரம் எப்படிக் கற்பனையானதோ அப்படியே இந்த புயாவின் உருவமும் கற்பனையானது.



மனித உடை தரித்த திருவாளர் முதலையார்தான் இந்த புயா! இவரது பேச்சில் வஞ்சம், தந்திரம், கிண்டல், அறிவுத் திறமை எல்லாம் இருக்கும். பெரும்பாலானவை பெரியவர்கள் மட்டுமே சுவைக்கக் கூடியவை. ஆனால், பள்ளிப் பிள்ளைகள் புயாவைத் தங்கள் மனங்கவர்ந்த ஒரு தோழனாக எண்ணி விட்டதால், தங்களுக்கு ஏற்ப பல கற்பனைகளை ஏற்றி, புயாவை பெருமை மிக்க, கண்ணியமான கதாநாயகனாகவும் படைத்து பிரபலப்படுத்தி வருகிறார்கள். இவற்றில் பல, முல்லா கதைகளில் வருபவையே. இன்னும் சில இலங்கை தெனாலி ராமனின் கதைகளில் வருபவை. இவைகளில் புதிதாகக் கூறுபவை மட்டும் இங்கு கற்பனைப் பசையுடன் தரப்படுகிறது. இவைகளை ஏற்கெனவே நீங்கள் எங்கேயாவது கேட்டிருந்தால் ஆசிரியர் பொறுப்பாளி அல்ல. இந்தக் கதைகளில் சிங்கப்பூருக்குப் பெருமைதரும் கட்டுப்பாடு, தூய்மை, நாட்டுப் பற்று ஆகியவைற்றைக் காணலாம்.


சிங்கப்பூரில் வானை முட்டும் பல மாடிக் கட்டடங்களே அதிகம். பார்க்கும் போதே, ஏதோ நியூயார்க் நகரில் இருப்பது போன்ற ஒரு பிரமை ஏற்படும். இந்தப் பல மாடிக் கட்டிடங்களுள் 60 மாடிக் கட்டிடம் ஒன்றும் நகரின் மையப் பகுதியில் இருக்கிறது. இந்தக் கட்டிடத்தின் சிறப்பு என்னவென்றால் இதன் மேல் தளத்தில் மிக அருமையான ஓர் ஓட்டல் இருக்கிறது. ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட இந்த ஓட்டலில் உலகத்தின் எல்லாவகைச் சிற்றுண்டிகளும் கிடைக்கும். மிக உயரமான கட்டிடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஓட்டல் என்ற சாதனைப் பெருமையும் இதற்கு உண்டு.

இந்த அற்புதமான ஓட்டலில் யார் வேண்டுமானாலும் போய்ச் சாப்பிட முடியாது. பூட்ஸ் அணியாது வருபவர்களுக்கு இந்த ஓட்டலில் அனுமதி இல்லை.

புயாவுக்கு இந்த ஓட்டலில் போய் ஒருமுறையாவது சாப்பிட வேண்டும் என்று தணியாத ஆசை. அவரிடம் பூட்ஸ் இல்லை. அதற்காக, ஒருவேளை சாப்பாட்டைச் சாப்பிடுவதற்காகப் பணத்தைக் கொட்டி பூட்ஸ் வாங்க அவர் மனம் ஒப்பவில்லை. அவர் பூட்ஸை தினமும் உபயோகிப்பவர் அல்ல. அதனால், ஓட்டலில் சாப்பிட்ட பிறகு அது மூலையில்தானே தூங்கப் போகிறது?

அதனால், புயா தனது நண்பர்களிடம் பூட்ஸ் இரவல் கேட்டுப் பார்த்தார். எல்லோரும் கைவிரித்தனர்.

அடுத்த நாள், புயா அந்த இரண்டு வலதுகால் பூட்ஸ்களையும் எப்படிப் போட்டுக் கொண்டு வந்து சாப்பிடுகிறார் என்பதைக் காண, காமிராவுடன் நண்பர்கள் அற்புத ஓட்டலுக்குச் சென்றனர். அவர்கள் போன போது, முன்னால் இருந்த மேஜையில் புயா சாப்பிட்டுக் கொண்டிருந்தார்!



ஒரு குறும்புக்கார நண்பன், "புயா, எங்க வீட்டில் எங்க அண்ணனின் பூட்ஸ் இருக்கு. வந்து பார்," என்று நம்பிக் கைக் குரல் கொடுத்தான்.

புயா மகிழ்ச்சியோடு உடனே கிளம்பினார்.

"புயா, நீங்கள் மட்டும் இந்த பூட்சை அணிந்து கொண்டு, அந்த அற்புத ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு வந்தால் ஐம்பது டாலர் பரிசு தருகிறேன்" என்று நண்பன் சவால் விட்டான்.

"சவாலை ஏற்றுக் கொண்டேன்" என்றார் புயா.

நண்பன் புயாவைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று பூட்ஸைக் காட்டினான். பூட்ஸ் புயாவின் காலுக்குச் சரியாக இருந்தது. ஆனால் இரண்டுமே வலதுகால் பூட்ஸ்கள்!

"நண்பரே! நான் பந்தயத்தில் இருந்து பின்வாங்குவேன் என்று எண்ண வேண்டாம்" என்று இரண்டு பூட்ஸ்களையும் எடுத்துக் கொண்டு கிளம்பினார் புயா.

"இடது காலுக்கு என்ன பண்ணினீங்க புயா?" என்று திகைப்புடன் கேட்டார் நண்பர்.

"இடது காலுக்கு பூட்ஸ் போட அவசியம் இல்லாமல் அதை உள்ளே மடக்கிக் கட்டிக் கொண்டு, முடமானவனைப் போல் நடித்துக் காட்டிவந்துவிட்டேன். வலது காலில் மட்டுமே பூட்ஸ் அணிந்திருக்கிறேன்" என்றார் புயா அமைதியாக.

"ஓட்டல் நிர்வாகத்தினர் மறுக்கவில்லையா?"

"எப்படி மறுக்க முடியும்? பூட்ஸ் அணிந்தவர்கள் மட்டுமே வரலாம் என்பது தானே நிர்வாகம் போட்டுள்ள நிபந்தனை? கால் முடமானவர்கள் வரக் கூடாது என்பதை அவர்கள் விதிகளில் சேர்க்கவில்லையே?"

"பந்தயத்தில் வெற்றியடைய புயாவுக்கு பூட்கம் உதவும்" என்று சிரித்துக் கொண்டே கூறிய நண்பர், ஓர் ஐம்பது டாலர் நோட்டை எடுத்துக் கொடுத்தார்.

– ரே

டீ.வி.: நண்பனா? எதிரியா?



அறிவியல் சாதனைகளைக் காண நமக்கு டீ.வி. வேண்டாமா? - மங்கையர்க்கரசி.

20-ஆம் நூற்றாண்டின் மிகவும் சக்திமிக்க; மக்களின் மனம் கவர்ந்த கண்டுபிடிப்பு டீ.வி. இதற்கு வயது வரம்பே கிடையாது. இரண்டு வயதுக் குழந்தையில் இருந்து குடுகுடு கிழவர் வரை டீ.வி. பார்க்க விரும்புகிறார்கள். குறிப்பாக, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் இப்பொழுது புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள அலைவரிசைகள் கிராம மக்களின் கவனத்தையும் ஈர்க்கத் தொடங்கியுள்ளன. இதில் உள்ள பொழுதுபோக்கு அம்சங்கள் படிக்கும் மாணவர்களையும் கவர்ந்து, அவர்களது படிக்கும் நேரத்தை எடுத்துக் கொண்டு படிக்க விடாது அடிமைப் படுத்துகின்றன என்று பெற்றோரும், பெருமளவுக்குப் பள்ளி ஆசிரியர்களும் தொடர்ந்து கோகுலத்திற்கு எழுதி வருகிறார்கள். இதன் நன்மை தீமைகளை அலசி விண்டு வைப்பது மாணவர் குலத்திற்குப் பெரிதும் நன்மை தரும் என்று எண்ணினோம். இதுபற்றி முத்துராமலிங்கபுரத்தில் உள்ள கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்களில் சிலர் தங்கள் எண்ணங்களை உங்களோடு பகிர்ந்து கொள்கிறார்கள். இதை நீங்கள் அவசியம் படிக்க வேண்டும். இவர்கள் தெரிவித்துள்ளது போலவே திட்டமிட்டு நிகழ்ச்சிகளைப் புறக்கணிக்கவோ, காணவோ பழகிக் கொண்டு, முன்னேற்றப் பாதையை அமைத்துக் கொள்ளுங்கள்!

எந்தப் பொழுதுபோக்குமே அளவுக்கு மீறினால் ஆபத்துதான். டீவியை மட்டும் ஏன் குறைகூற வேண்டும்? - தி. கோபி.



எல்லா வேலைகளையும் ஒத்திப் போட்டு விடுகிறார்கள் - தமிழ் அழகன்.

மாரியம்மாள் : டீ.வி.யைத் தொலைக்காட்சி என்கிறோம். உண்மையில் அது தொல்லைக் காட்சியாகத்தான் இருக்கிறது. ''குணம் நாடி குற்றம் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்கக் கொளல்'' என்கிறார் திருவள்ளுவர். நன்மை தீமைகளை ஆராய்ந்து அறிந்தபின் முடிவெடுப்பதே அறிவுள்ளோர் செய்யும் செயல். இதன்படி பார்த்தால் தொலைக்காட்சியால் பெறும் நன்மைகளைவிட, தீமைகளே அதிகம். பெரியவர்களைப் பற்றிக் கவலை இல்லை. பள்ளியில் படிக்கும் நம் போன்ற மாணவர்களை எடுத்துக் கொள்ளுங்கள். விதம்விதமான பெயர்களில், தலைப்புகளில் சினிமாப் பாடல் நிகழ்ச்சிகளே ஆக்கிரமித்துக் கொள்கின்றன. நாடகங்கள் விளம்பரங்கள் பலவும் மாணவர்களின் அறிவை பாதிக்கக்கூடியவையாயிருக்கின்றன. போதாக் குறைக்கு இப்பொழுது ஸ்டார் டீவி. என்று ஒன்று ஊருக்கு ஊர் வந்துள்ளது. இதிலாவது படிக்கும் மாணவர்களுக்குப் பயனளிக்கக் கூடியதாக ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால், எப்படி எதுவுமே இல்லை. புதிய கோணங்களில் அதே சினிமா தொகுப்பு! முன்பெல்லாம் படிக்க விரும்பாத மாணவர்கள் பள்ளிக்கு மட்டமடித்துவிட்டு, பகல் காட்சி சினிமாவுக்குப் போவார்கள். இப்பொழுது அப்படி இல்லை. மட்டம் அடித்துவிட்டு, ஸ்டார் டீவி. பார்க்கிறார்கள். படிக்கும் திறமையுள்ள, நல்ல மாணவர்களைக் கூட சபலத்திற்கு ஆளாக்கி படிக்கும் வழக்கத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது இந்த டீ.வி. பள்ளி





★ புதிய கோணங்களில் அதே சினிமா தொகுப்பு
- மரியம்மாள்.

நேரம் போக மீதி நேரத்தில் பெற்றோரின் பணிகளில் தோள் கொடுக்கும் வழக்க முடைய பொறுப்புமிக்க மாணவர்கள் கூட, இந்த டீவியால் கவரப்பட்டு, சாக்குப்போக்குச் சொல்லித் தட்டிக் கழிக்கிறார்கள். இந்த நிலை நீடித்தால் மாணவர்களின் எதிர்காலம் பெரிதும் பாதிக்கப்படும் என்பது நம் கண் முன்னே காணப்படும் காட்சி.

மங்கையர்க்கரசி: உணவு, உடை, உறைவிடம் போல் மனிதர்களுக்கு செய்தித் தொடர்பு என்பது இன்று ஓர் அத்தியாவசிய மானதாகி விட்டது. இதற்கு செய்தித் தாள்களும், வானொலியும், தொலைக் காட்சியும் பெருந்துணை புரிகின்றன. உலகத்தின் எங்கேயோ ஓர் நாட்டில் நடைபெறும் கிரிக்கெட் மேட்சை, இருதய அறுவை சிகிச்சையை நாம் நமது


★ உங்க வீட்டில் டீ.வி. பார்க்க வந்திருக்கிறோம் என்று கூசாமல் கேட்கும் நிலை வந்திருக்கிறது.
- எஸ். பூங்கோதை



வீட்டில் இருந்து பார்க்க முடிகிறதே? விண்வெளியில் இறங்கி, நிலாவின் தரையில் மனிதன் நடந்ததை டீ.வி.யில் கண்டோம். இந்த அறிவியல் சாதனைகளைக் காண நமக்கு டீ.வி. வேண்டாமா? டீ.வி. நமக்கு உற்ற நண்பன். இதில் சந்தேகமே இல்லை.

தமிழ் அழகன் : தொலைக்காட்சி, முதல் இரண்டாவது அலைவரிசைகளைத் தாண்டி இப்பொழுது பல அலைவரிசைகளில் ஒளிபரப்பாகிறது. இதன் பிடியில் இப்பொழுது சிக்கியிருப்பவர்கள் பள்ளி பயிலும் மாணவர்களே! இந்தப் புதிய அலைவரிசைகளின் நோக்கம் மக்களுக்கு அறிவூட்டுவதோ, உழைக்க ஊக்கமளிப்பதோ, புதிய நம்பிக்கை அளிப்பதோ அல்ல. கோடிக்கணக்கான மக்களைக் கவர்ந்திழுத்து, அதைக் காரணமாக வைத்து விளம்பரதாரர்களிடம் பணம் பறிப்பதே. பெரியவர்களே கண்களை மூடிக் கொள்ளும் நிகழ்ச்சிகள் கூட இதில் ஒளிபரப்பாகின்றன. இந்த அலைவரிசை ஒளிபரப்பாகும் நேரத்தில் தெருவில் ஈகாக்காய் இருக்காது. பஸ்ஸில் கூட்டம் இருக்காது. அங்காடிகளில் நெரிசல் இருக்காது. அத்தனை பேரும் தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னால் இருப்பார்கள். இரண்டு மணி நேரம் இந்த அலைவரிசை ஒளிபரப்பாகும் போது மின்சாரம் நின்று விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்; இவர்கள் தவிக்கிற தவிப்பைப் பார்க்க வேண்டுமே! ஆலைகளில் உற்பத்தி குறைந்து பொருளாதாரம் பாதிக்கப்படுமே என்று எவரும் கவலைப்பட மாட்டார்கள். இப்படி மின்சாரம் தடைப்பட்டு ஒளி பரப்பைப் பார்க்க முடியாது பண்ணி விட்டார்களே என்றுதான் தவிப்பார்கள். துவைப்பது, குளிப்பது, கடைக்குப் போவது போன்ற எல்லா வேலைகளையும் இந்த அலைவரிசையின் ஒளிபரப்பு நேரத்திற்கு ஏற்ப உடனுக்குடன் செய்தோ, அல்லது ஒத்திப் போட்டோ விடுகிறார்கள். இந்த மிகை ஆர்வம், திட்டமிடல், தேர்வுக்கு ஏற்ப படிப்பதில் இல்லையே! இந்த நிலை நீடித்தால் மாணவர்களுடைய எதிர்காலம் எப்படிப் இருக்குமோ என்று பயமாக இருக்கிறது. போதைப் பொருள்களுக்குக் கூட இத்தனை வலிமை இருக்காது. ஒருநாள் இந்த அலைவரிசையில் சினிமா நிகழ்ச்சிகளைப் பார்த்து விட்டால் போதும், மறுநாள் அதே நேரத்தில் பார்க்கப் போகும் ஆர்வத்தை தூண்டுகிறது. இது தொலைக்காட்சிக்கு வெற்றியாக இருக்கலாம். ஆனால் மாணவ சமுதாயத்தைப் படுகுழியில் வீழ்த்தும் செயலல்லவா?

★ எதிரி என்பவர்கள் திட்டமிட்டு எதையும் செய்ய முடியாதவர்கள் - மு. பாலசுப்ரமணி.



தி. கோபி : தினமும் பல் விளக்கிய பிறகே உணவை உண்ண வேண்டும் என்பது நமக்கு முதல் வகுப்பிலிருந்தே கற்றுக் கொடுக்கப்படும் சுகாதார விதி. இப்படிச் செய்யாது இருந்தால் என்னவாகும் என்பதை நாம் பெரியவர்களிடமோ இல்லை மற்றவர்களிடமோ கேட்டால், வாயில் இரவில் பற்களுக்கு இடையே தங்கியுள்ள துண்டு துணுக்குகள் கெட்டாகி இருக்கும். அவை உள்ளே போய் பல நோய்களைப் பரப்பும் என்று பொதுவாகக் கூறுகிறார்கள். இதையே டீ.வி.யில் ஒரு பல் மருத்துவரை பேட்டி கண்ட போது, இதற்குப்


செவ்வகங்களைச் சேருங்கள் - போட்டி முடிவு

இதில் 18 துண்டுகள் கொடுக்கப்பட்டன. 17 துண்டுகளே 3 செவ்வகங்களைச் சேர்க்கப் போதுமானவை. வேண்டுமென்றே ஒரு துண்டு தேவையில்லாமல் தரப்பட்டது. இதைக் கண்டுபிடித்து எழுதுவதுதான் போட்டியின் நோக்கம். இதைச் சிறப்பா கச் செய்துள்ளவர்கள் ஏழு பேர்களே! ரூபாய் இருபத்தைந்து பரிசு பெறுவோர் :

1. பி. ஜாவஹிரானி, திருச்சி; 2. ஆர். கோபிநாத், ஆரணி; 3. எம். கோதை, காஞ்சிபுரம்; 4. கே. முருகு தன், திருநெல்வேலி; 5. எஸ். ஏ. ரேவதி, திருவெண்ணெய்நல்லூர்; 6. P. ஜமுனா, கடலூர் O. T.; 7. என். தமிழ்ச்செல்வி, சீர்க்கொண்டயம்பேட்டை.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

சரியான விடை :



பத்து நிமிடங்கள் விளக்கம் தந்து தெளிவுபடுத்தினார். அதோடு பற்களை எப்படித் தேய்க்க வேண்டும், எப்படிப்பட்ட பற்பசைகளைப் பயன்படுத்த வேண்டும் என்றெல்லாம் புரியும்படி விளக்கினார். இது ஒரு உதாரணத்திற்கு. இப்படி எத்தனையோ சொல்லிக் கொண்டே போகலாம். அறிவியல் கண்டுபிடிப்புகளின் பயனை, அறியாமையின் தீமைகளை நன்கு விளங்க வைக்கிறது டீ.வி. இதைப் போய் எதிரி என்று அழைக்க எனக்கு மனம் வரவில்லை. படிக்கும் நேரம் குறைகிறது என்றால், மாணவர்க்கான நிகழ்ச்சி என்றால், அவர்கள் சினிமா தொடர்பான நிகழ்ச்சிகளைப் போடுகிறார்கள்? அதெல்லாம் பொழுது போக்கு. எந்தப் பொழுதுபோக்குமே அளவுக்கு மீறினால் ஆபத்துதான். டீவியை மட்டுமே ஏன் குறைகூற வேண் டும்?


பூங்கோதை : ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிதனைக் கடிக்க வந்த கதையாக, நகர மக்களை அடிமைப்படுத்தி வந்த தொலைக்காட்சி புதிய அலைவரிசையில் இப்பொழுது கிராமங்களுக்குப் படையெடுத்து விட்டது. கிராமங்களில்தான் விட்டுக் கொடுக்கும் பண்பு, உழைப்பு எல்லாம் இருந்தது. இந்தப் புதிய அலைவரிசை இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து விடும் அபாயத்தை ஏற்படுத்தி இருக்கிறது. கேட்பதை விடப் பார்ப்பதற்கு அதிக வலிமை இருக்கும் என்கிறார்கள். இது உண்மைதான். ஆனால், என்ன பார்க்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சினிமா தொடர்பானவைதான் இவர்கள் விதம்விதமாகத் தருகிறார்கள். அடுத்த நாள் என்ன ஒளிபரப்பாகப் போகிறது என்பதை முன்னாலேயே அறிவித்து விடுகிறார்கள். படிக்கும் மாணவர்கள் கூடிப் பேசும் போது, இன்று பார்த்ததையும் நாளை பார்க்கப் போவதையும் பற்றித்தான் பேசுகிறார்கள். அந்த அளவுக்கு அவர்களுடைய கவனத்தை டீ.வி. நிகழ்ச்சிகள் ஈர்த்து விடுகின்றன. முன்பெல்லாம் சாதம் வடிக்க அரிசி இல்லை என்றால், அரிசி கடன் வாங்கக் கூச்சப்பட்டு, இருக்கின்ற அரிசியை உடைத்து கஞ்சி வைத்துக் குடித்து தன்மானத்தோடு வாழத் தூண்டும் மனப்பக்குவம் இருந்தது. இப்பொழுது, அந்தத் தன்மானமெல்லாம் பறந்து விட்டது. தன் வீட்டில் டீ.வி. இல்லையென்றாலும், அந்த நிகழ்ச்சி ஒளிபரப்பாகும் நேரத்தில், மற்றவர் வீட்டில் சென்று, "உங்க வீட்டில் டீ.வி. பார்க்க வந்திருக்கிறோம்!" என்று கூசாமல் கூறுகிறார்கள். மாணவர்களின் நிலையைக் கூறவே வேண்டாம். நண்பர் வீடுகளுக்குப் போய் விடுகிறார்கள். நம் நாட்டில் உழைக்கும் நேரம் குறைவு என்று அறிவியலார் ஏற்கெனவே கூறுகிறார்கள். புதிய அலைவரிசையால் இது இன்னமும் குறையப் போகின்ற அபாயம் ஏற்பட்டுள்ளது. மேல்நாடுகளில் இப்படி இல்லையா

என்று கேட்கிறார்கள். அங்கெல்லாம் ஒவ்வொரு வகை நிகழ்ச்சிகளுக்கும் தனி அலை வரிசைகள் உள்ளன. இப்படி ஒரே அலைவரிசையை வைத்துக் கொண்டு சினிமாவையே புதுப்புது வடிவத்தில் தொகுத்து பள்ளி மாணவர்களின் பயனுள்ள நேரத்தைப் பாழாக்கும் பாதிப்பு இல்லை. அரசுக்கு வருமானம் வேண்டுமென்றால் வேறு எத்தனையோ வழிவகைகள் உள்ளன. மாணவர் சமுதாயத்தை சோம்பேறிகளாக்கும் நிலையைக் கைவிட வேண்டும். அல்லது உண்மையாகவே மாணவர்க்குப் பயன்தரும் நிகழ்ச்சிகளைத் தர வேண்டும்.

மு. பாலசுப்ரமணி : 21-ஆம் நூற்றாண்டின் நுழைவாயிலில் நாம் இருக்கிறோம். மக்களின் மனம் கவர்ந்த சக்திமிக்க சாதனம் டீ.வி. இது வந்த பிறகு, மக்களிடையே வெட்டிப் பேச்சுப் பேசுவது குறைந்திருக்கிறது. மருத்துவ, விஞ்ஞான வளர்ச்சியில் என்னவற்றையெல்லாம் பயன்படுத்திக் கொண்டால் பொருளாதார வளர்ச்சியில் முன்னேறலாம் என்பதை உணரவைக்க இது பெரிதும் பயன்படுகிறது. வேலைக்கு விண்ணப்பிக்கும் போது படிவத்தை எப்படிப் பூர்த்தி செய்ய வேண்டும், நுழைவுத் தேர்வுக்கு என்னவெல்லாம் படிக்க வேண்டும், பொதுத் தேர்வில் சாதனைபுரிந்த மாணவமணிகள் எப்படி உழைத்துப் படித்து அந்தச் சாதனைகளை நிகழ்த்தினார்கள் என்பனவற்றையெல்லாம் வீட்டில் இருந்தே காண முடிகிறது. பெரிய படித்த குடும்பங்களுக்கு மட்டுமே உரியதாக இருந்த சிக்கலான பல முன்னேற்றப் படிகள், இன்று கிராமத்தில் உள்ள மாணவர்களுக்கும் டீ.வி. வாயிலாக தெளிவாக்கப்பட்டு அவர்கள் முன்னேற உதவி வருகிறது. சாதனைகள் நிகழ்த்தப்படும் போது அவை எத்தகைய உழைப்பின் அடிப்படையில் செய்யப்பட்டன என்ற தகவலை பேட்டிகள் மூலம் ஒளிபரப்பி, புதிய நம்பிக்கையையும் விழிப்புணர்வையும் டீ.வி. ஏற்படுத்துகிறது மாணவர்களின் படிக்கும் பழக்கத்தைக் குறைக்க டீ.வி. ஒன்று தானா இருக்கிறது? காலை நேர, பகல் நேர சினிமாக் காட்சிகள் இல்லையா? அப்படிப் போகின்றவர்களை யாரால் தடுக்க முடியும்? ஒரு வாரத்து நிகழ்ச்சிகளை முன்பே தந்து விடுகிறார்களே? சில பத்திரிகைகளில் நிகழ்ச்சிகளின் சுருக்கமே தரப்படுகிறது. இதில் சினிமா தொடர்பானவையே அதிகம் என்பதை யாரும் மறுக்க முடியாது. நிகழ்ச்சிகளில் எது நமக்குப் பயன்படும் என்பதை முன்னேறத் துடிக்கும் மாணவன் புரிந்து கொண்டு அதற்கு மட்டும் நேரத்தை ஒதுக்குவான். இப்படிச் செய்யாது, டீ.வி.யை ஒட்டு மொத்தமாக ஒரு எதிரி என்பவர்களை, திட்டமிட்டு எதையும் செய்ய முடியாதவர்கள் என்றே நான் கூறுவேன்.

அட்டையில் : காயத்ரி, ஸ்ரீராம்.

வண்ணப்படம் : கோபிநாத்



நான் எதுக்கு?

அன்று ஞாயிற்றுக் கிழமை.

கோபு தன் புது சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே புறப்பட்டான். அந்த நேரத்தில் எதிர்வீட்டு வாசு வெளியே நின்று கொண்டிருந்தான்.

கோபு தன் புது சைக்கிளுடன் அவனிடம் போனான்.

''வாசு, எங்கப்பா நேத்து இந்த புது சைக்கிளை வாங்கிக் குடுத்தாரு. ரொம்ப உசத்திடா. எப்படி இருக்குடா?''

கோபு ஆவலோடு கேட்டான். வாசு சைக்கிளை வேண்டா வெறுப்புடன் பார்த்தான்.

''இதைவிட நல்ல சைக்கிளெல்லாம் இருக்கு. இது ஒண்ணும் ரொம்ப உசத்தி சைக்கிள் இல்லே. கொஞ்சம் சுமாராத்தான் இருக்கு.''

வாசு வேண்டுமென்றே சொல்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட கோபு மேற்கொண்டு எதுவும் அவனுடன் பேசாது விடைபெற்றுப் புறப்பட்டான்.

வாசுவிற்கு கோபுவின் மேல் பொறாமை. வாசு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். கோபு வசதியானவன். கோபு எப்போதும் அழகழகான புது டிசைன் துணிகளை அணிவான். நன்றாகவும் படிப்பான். இதன் காரணமாகவே வாசுவிற்கு கோபுவின் மீது ஒருவிதப் பொறாமை.

அடுத்த நாள் காலை கோபு தன் புது சைக்கிளில் பள்ளிக்குப் புறப்பட்டான். வழியில் வாசு நடந்து சென்று கொண்டிருப்பதைப் பார்த்ததும் தன் சைக்கிளை நிறுத்தினான். நேற்று அவன் நடந்து கொண்டதை அவன் மறந்து விட்டான்.

''வா வாசு. கேரியர்லே உட்காரு. ரெண்டு பேரும் ஒண்ணா ஸ்கூலுக்குப் போகலாம்.''

''நான் வரலே. நீ போடா. உன் சைக்கிள்ல நான் எதுக்கு? நடந்தே வர்றேன்.''

வாசு பதிலில் ஒருவித வெறுப்பு இருந்ததை உணர்ந்த கோபு வேறெதும் பேசாமல் சென்று விட்டான்.

ஒரு வாரம் சென்றது. கோபுவின் அப்பா கோபுவைக் கூப்பிட்டார்.

''ஏண்டா கோபு, எதிர்வீட்டு வாசுவையும் உன் கூடவே சைக்கிள்லே அழைச்சிக்கிட்டுப் போயேன். பாவம். அவன் தனியா நடந்து போறதை ரெண்டு மூணு நாள் பார்த்தேன்.''


''இல்லேப்பா. வாசுவைக் கூப்பிட்டேன். ஆனா அவன் வர மாட்டேன்னு முகத்துல அறையாத குறையா சொல்லிட்டான். நான் சைக்கிள் வாங்கிட்டேன்னு அவனுக்குப் பொறாமைப்பா.''

அடுத்த வாரத்தில் ஒருநாள்..

கோபு தன் அம்மாவுடன் ஊருக்குப் புறப்பட்டதைப் பார்த்தான் வாசு. கோபுவின் அப்பா மட்டுமே வீட்டில் தனியாக டி.வி. பார்த்துக் கொண்டிருந்தார். இதைத் தெரிந்து கொண்ட வாசு மெதுவாகக் கோபுவின் வீட்டிற்கு ஒரு கூரிய கம்பி ஆணியுடன் போனான். கோபுவின் சைக்கிளின் பின்பக்க டயரில் ஆணியை நாலு இடத்தில் குத்தி டயரைப் பஞ்ச ராக்கி விட்டுத் திரும்பியவன் அதிர்ந் தான். காரணம், கோபுவின் அப்பா வெளியே வந்து அமைதியாக நின்று அவன் செய்ததைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர் தன்னை என்ன செய்யப் போகிறாரோ என்று நினைத்து பயந்து போன வாசு நாக்கு உலர்ந்து போய் நின்றான். ஆனால், கோபுவின் அப்பா வாசுவின் தோள் மீது கை போட்டு நட்புணர்வுடன் தன் வீட்டிற்குள் அழைத்துச் சென்றார்.

''வாக, உன்னை ரொம்ப நல்ல பையன்னு நினைச்சிக்கிட்டிருந்தேன். ஆனா உனக்கு கோபு மேலே இந்த அளவுக்குப் பொறாமை இருக்கும்னு நான் நினைக்கக் கூடப் பார்க்கலை. நான்



பிறந்த போதே பணக்காரன் இல்லே. உன்னை மாதிரி சின்னப் பையனா இருந்தப்போ சாப்பாட்டுக்கே ரொம்பக் கஷ்டப்பட்டேன். சிரமப்பட்டுப் படிச்சேன். ஒரே ஒரு கிழிஞ்சி போன யூனிஃபார்ம்தான் இருந்துச்சி. வாழ்க்கையிலே முன்னுக்கு வரணும்ற வெறியோட படிச்சேன். முதல் மாணவனா வந்தேன். நல்ல வேலை கிடைச்சது. நீ அடுத்தவங்களைப் பார்த்து வெறுமே பொறாமைப்படறதுலே ஒரு பயனும் இல்லே. நாமும் நல்லாப் படிச்சு உயரணும்னு உனக்கு ஒரு எழுச்சி வரணும். அப்படி இல்லாம, சும்மா வெறுமே மத்தவங்களைப் பார்த்துப் பொறாமைப்படறதில் அர்த்தமே இல்லே. அவங்களோட பொருள்களைப் பாழ் பண்றதினாலும் பயன் இல்லே. திருடனா இருந்தா சைக்கிளைத் திருடியிருப்பான். அவனுக்காவது பயன்பட்டிருக்கும். ஆனால், நீ சைக்கிளைப் பாழ்படுத்திட்டே! உனக்கும் இதனால் பயன் இல்லே. உன் பொறாமையின் வேகம் தணிஞ்சிருக்கும். அவ்வளவுதான். உனக்கும் திருடனுக்கும் என்ன வித்தியாசம்? இன்னையோட பொறாமை குணத்தை விட்டுட்டு, நாமும் நல்லா படிச்சு உயரணும்கற வேகத்தை ஏற்படுத்திக்க. நல்ல நண்பர்கள் உதவ வந்தா அதை ஏத்துக்கிட்டு உயரத் துடிக்கணும். அதுல தப்பில்லே. உன்னை ஏளனமா நினைக்கிறவங்களிடம் உதவி வாங்கிக்கிறதுதான் தப்பு. அது தன்மானத்தைப் பாதிக்கும். கோபுவையே எடுத்துக்க. அவன் உனக்கு உதவணும்னு துடிக்கிறான். நட்புக் கரத்தை நீட்டறான். நீதான் பொறாமைக் கண்ணோடு உதறித் தள்ளறே. உண்மையான நட்பு என்ன தெரியுமா? ஏழையான நண்பனை உயர வைப்பதுதான். அப்படி உயர முயற்சிக்காம, அவனுடைய நட்பையும் உதறித்



வாழைப் பழத்தை விரும்பாதவர்கள் உண்டா? வாழைப்பழத்தை விரும்பி உண்ணும் நமக்கு அதைப் பற்றிய எத்தனையோ விஷயங்கள் தெரியாது. மா, பலா, வாழை என்று மூன்று வகைக் கனிகளுள் ஒன்றாக

முக்கனியில் மூன்றாவது!

வைத்துப் போற்றப்படும் இதில் இருநூறு வகைகள் உள்ளன.

விரல் பருமனே உள்ள பழத்தில் இருந்து ஓர் அடி வரை நீளமுள்ள பழங்கள் பயிராக்கப்படுகின்றன.

வாழைப் பழத்தை உலகில் உள்ள எல்லா மக்களும் விரும்பி உண்கின்றனர். உடலுக்குத் தேவையான சத்துக்கள் இதில் நிரம்பி உள்ளன. அதோடு இது எளிதில் ஜீரணமாகக் கூடியது. எந்த வயதினராலும் விரும்பி உண்ணப்படுவது. தீங்கு இழைக்காதது.

வாழைப் பழத்தில் அதிக அளவு நீர்ச்சத்தும், சர்க்கரை, புரதம், கொழுப்பு ஆகிய சத்துக்களும் உள்ளன. அதோடு சோடியம், இரும்பு, கந்தகம், மக்னீஷியம் மற்றும் விட்டமின் ஏ,சி,பி, பி2 ஆகியவையும் உள்ளன.

ஒரு வாழைப் பழம் இரண்டு ரொட்டிகளுக்குச் சமமானது.

மடகாஸ்கர் தீவில் உள்ள வாழை இனம் ஒன்று தன் பூவில் ஏராளமான நீரைச் சேர்த்து வைக்கும். தாகம் எடுத்த வழிப்போக்கர்கள் கத்தியால் பூவைக் குத்தி இனிய நீரைக் குடிப்பார்கள்.

தமிழ்நாட்டில் மலைச் சரிவுகளில் பயிராகும் தனியான இனம் மலை வாழை. கேரளத்தின் நேந்திரன் வாழை பெருமைமிக்கது. இது கேரளத்தில் குழந்தை உணவாகவும் பயன்படுகிறது. மற்றபடி பூவன், மொந்தன், ரஸ்தாளி, பச்சை நாடான், பேயன், செவ்வாழை, கூழை வாழை, சர்க்கரைக் கேளி ஆகியவை இந்திய வாழை இனங்களில் குறிப்பிடத் தக்கவை. நம்முடைய பூவன் வாழையும் ரஸ்தாளியும் அதிக அளவில் ரஷ்யாவுக்கு ஏற்றுமதி ஆகின்றன.

– வேணு சீனுவாசன்

தள்ளிட்டு இப்படிப் பொறாமைப்பட்டு அசட்டுத்தனமான காரியங்களைச் செய்யறது அழகில்லே. கடுமையா உழைக்கணும்கற உன்னுடைய வேகம் நட்பைப் பாதிக்கக் கூடாது. என்ன செய்வியா?''

வாசுவின் கண்களில் நீர் படர்ந்தது.

''இனி யார் மேலும் பொறாமைப்பட மாட்டேன் சார். கடுமையாப் படிச்சு உழைச்சு உயருவேன்'' - கோபுவின் அப்பாவிடம் உறுதியளித்து விட்டு உற்சாகமாய்ப் புறப்பட்டான் வாசு.

அடுத்த நாள் கோபு சைக்கிளில் பள்ளிக்குக் கிளம்பிய போது வாசு தானே வந்து, ''நானும் இனிமே உன்னோட சைக்கிளில் வரேன்டா கோபு'' என்று சொன்ன போது கோபுவுக்குத் திகைப்பாக இருந்தது.

– ஆர். வி. பதி

அற்புதம்!



சீடன் ஒருவன்தான் கல்வி கற்ற குருவைக் கண்டு வணங்குவதற்காகக் காணிக்கைப் பொருளுடன் சென்று கொண்டிருந்தான்.


குருவின் மீது அந்த ஊரில் இருந்த முனிவருக்கு ஏகப் பொறாமை. சீடன் குருவிடம் செல்கிறான் என்பதை அறிந்து கொண்ட முனிவர் சீடனை வழி மறித்தார். ''உன் குருவிற்கு எதுவும் தெரியாது. அவன் ஒரு முட்டாள். நீ அவனை விடப் பெரிய முட்டாள். அதனால்தான் நீ அவனைக் குருவாக ஏற்றுக் கொண் டிருக்கிறாய். உன் குருவால் என்னைப் போல் அற்புதம் ஏதேனும் நிகழ்த்த முடி யுமா? வானத்திலே பறக்க முடியுமா? பூமியில் புதைந்து கிடைக்க முடியுமா? அவனால் எதுவுமே முடியாது. இப்படிப்பட்ட குருவிடம் ஏன் உனக்கு இத்தனை குருபக்தி?'' என்று தற்பெருமையுடன் கேட்டார்.

அதற்கு சீடன், ''நான் அவரைக் குருவாக ஏன் ஏற்றுக் கொண்டிருக் கிறேன் தெரியுமா? அவர் ஒருபோதும் பிறரைக் குறை சொல்ல மாட்டார். இதைத்தான் அற்புதங்களில் எல்லாம் மிகச் சிறந்த அற்புதம் என்று நான் மதிக்கிறேன். அதனால் அவரை வணங்கச் சென்று கொண்டிருக்கிறேன்'' என்றான்.

முனிவர் தலைகுனிந்தபடி சென்று விட்டார்.

– பா. ஜெயக்குமார், வந்தவாசி.

பூனைக்கு நடந்த இரங்கல் கூட்டம்!



காலை நேரம். குடும்பத் தலைவர் சாப்பிட உட்கார்ந்து விட்டார். இரண்டு தட்டுகள் வைக்கப்பட்டிருந்தன. ஒன்று பெரியது. மற்றொன்று சிறியது. பெரிய தட்டில் குடும்பத் தலைவர் வந்து அமர்ந்து கொண்டதும், சாதம் போட வந்தனர்.

குடும்பத் தலைவர், பக்கத்துத் தட்டு காலியாக இருப்பதைக் கவனித்தார்.

''என்ன ஆச்சு? எங்கே காணோம்?''

''பக்கத்து வீட்டுக் குழந்தை விளையாடத் தூக்கிக் கொண்டு போயிருக்கிறது. இதோ வந்து விடும். நீங்க சாப்பிடுங்க.''

''இருக்கட்டும். அது வரும்வரை காத்திருக்கிறேன். அது சாப்பிடாமல் எனக்குச் சாப்பாடு இல்லை.''

குடும்பத் தலைவரின் பிள்ளைகளில் ஒருவர் விடுவிடுவென்று போய் அந்தச் சிறப்பு விருந்தினரை அழைத்து வருகிறார். சிறிய தட்டில் உட்கார வைக்கிறார். சாதம் போடுகிறார்கள். அந்த விருந்தாளி சாப்பிடுகிறார். பிறகே குடும்பத் தலைவர் தனது பிள்ளைகளுடன் சாப்பிடுகிறார்!

இத்தனை சிறப்புப் பெற்ற அந்தச் சின்னத் தட்டுக்கு உரிய விருந்தாளி யார் தெரியுமா? ஒரு மியாவ் பூனையார்!

ஆமாம். சைவப் பெரியாரான அந்தக் குடும்பத் தலைவர் தனது பூனை சாப்பிடாமல் உணவருந்த மாட்டார்! சைவர் வீட்டில் பூனை என்ன சாப்பிடும் என்று நீங்கள் யோசிப்பது புரிகிறது. அதுவும் அவரைப் போலவே சைவ சாப்பாடுதான் சாப்பிடும். அதுவும் கூட அவரைப் போலவே கடுமையான ஒரு சைவம்!

குழந்தைகளை நேசித்த அந்தத் தலைவர், குழந்தைகள் விரும்பும் பூனையை நேசித்து அன்பு காட்டியதில் வியப்பில்லை. ஆனால், அந்த அன்புப் பூனை சாப்பிடாமல் தான் சாப்பிட முடியாத அளவுக்கு உயர்ந்திருந்ததுதான் அதிசயம்.

குழந்தை உள்ளம் கொண்ட அந்தப் பெரியவரின் வீட்டில் குழந்தைகள் கூடுவார்கள். முழு நிலா நாட்களில் ஆடிப் பாடுவார்கள். அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள், தங்கள் குழந்தைகளோடு கண்டு மகிழ வருவார்கள். இவர்களோடு, இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் கண்டுகளிக்க அந்தச் செல்லப் பூனையாரும் கூடவே வருவார். அமைதியாக அமர்ந்திருந்து நிகழ்ச்சிகளை ரசிப்பார்.

குழந்தைகளோடு குழந்தையாக அந்த வீட்டில் அருமையாக வளர்ந்த அந்த அன்புப் பூனையார் ஒருநாள் இறந்து விட்டார். குழந்தைகள் கலங்கினர். பெரியவரும் கலங்கிப் போனார். குழந்தைகள் ஒன்று கூடி, அன்புப் பூனையின் மறைவுக்கு ஒரு இரங்கல் கூட்டம் நடத்தி, தீர்மானமும் போட்டனர்!


அவர் வீட்டிற்கு என்ன பெயர் தெரியுமா? குருவிக் குடில்! அவர் வீட்டுக்குக் குருவிகள் ஏராளமாக வரும். ஒருமுறை அவரது தலையணையில் ஒரு கிழிசல் இருந்தது. குருவிகள் வந்து அது வழியாகப் பஞ்சைக் கொத்திக் கூடு கட்ட எடுத்துச் சென்றன. ''கிழிசலைத் தைக்க வேண்டாம். குருவிகள் கூடு கட்டப் பயன்படட்டும் எடுக்காதீர்கள்'' என்று சொல்லி விட்டார்!

அவர் வீட்டிலேயே ஒரு சிறுவர் சங்கம் நடந்தது. அதற்குப் பெயரே 'குருவிக் குடில்'. குழந்தைகள் பேசவும், பாடவும், நடிக்கவும் அங்கே கூடினர். குழந்தைகளுக்காக அவர் நாடகங்களையும் கதைகளையும், பாடல்களையும் எழுதித்தாலே தயாரித்தார். இவரது சிறுவர் இலக்கியத் தொண்டினைப் பாராட்டி குழந்தைக் கவிஞர் தலைமையில் நடந்த குழந்தை எழுத்தாளர் சங்கம் தனது கோவை மாநாட்டில் இவருக்குக் கேடயம் வழங்கிச் சிறப்புச் செய்தது.

தனது குருநாதரிடம் அளவிட முடியாத அளவுக்கு பக்தியும், அன்பும் கொண்ட இவர், குருநாதர் பேணி வளர்த்த 'மாணவர் மன்றத்தை' கட்டிக் காத்து உயர்த்தினார். இத்தனை சிறப்புகள் பெற்ற இவர்தான் 'தணிகையார்' என்று செல்லமாக அழைக்கப்பட்ட அமரராகிவிட்ட 'தணிகை உலகநாதன் அவர்கள்!

– மயிலை முத்தெழிலன்





வீட்டில் வண்ண மீன்களை வளர்ப்பது எப்படி?, மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு, பக். 136, ரூ. 19/- மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை - 17.

மீன்களை வீட்டில் அழகுக்காக வளர்ப்பது ஓர் பாரம்பரிக்க கலை. மீன்களைப் பற்றி எத்தனையோ உண்மைகளை அனுபவ வாயிலாக அறியலாம்! மீன் வளர்க்க ஆர்வமிருந்தாலும், நல்ல மீன்களை எப்படித் தேர்ந்தெடுப்பது, சுத்திகரிக்க உணவை எப்படி அளிப்பது, தண்ணீரை மாற்றுவது எப்படி, மீன்களுக்கு நோய் வரும் போது எப்படிச் சிகிச்சை தருவது போன்றவை தெரியாததால் பெரும்பாலானவர்கள் இதற்குத் துணிவதில்லை. இவர்களுக்கான வழி காட்டி நூல்கள் பலவும் ஆங்கிலத்தில்தான் உள்ளன. அவையும் இந்திய நாட்டின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப எழுதப்படவில்லை. இக் குறைகளை இந்தப் புத்தகம் போக்கி விடுகிறது. இத்தனை பாரம்பரிக்க தகவல்களுடன் இந்த நூலைத் தந்துள்ள பதிப்பாளர்களை நன்கு பாராட்டலாம். மீன்களை வளர்த்து வருவோரும், வளர்க்க ஆர்வமுள்ளவர்களும் அவசியம் வைத்திருக்க வேண்டிய நூல்.

ஒரு மரத்துப் பறவைகள், பூவை அமுதன், பக். 160, ரூ 20- ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், 2, முத்து கிருஷ்ணன் தெரு, தி.நகர்., சென்னை - 600 017.

கோகுலத்தைத் தொடர்ந்து படித்து வருபவர்கள் "ஒரு மரத்துப் பறவைகள்" தொடர்கதையை மறந்திருக்க மாட்டார்கள். செல்வத்தில் புரளும் துடுக்குச் சிறுமி பவித்ரா, அவளுடைய சிநேகிதி ஏழை மீனா, ஆகியோருக்கிடையே மலர்ந்து நின்ற நட்பையும், பள்ளியில் நடக்கும் நேர்மை யற்ற செயல்களைக் களையெடுக்க நாயின் எதிர்ப்பையும் மீறி பவித்ரா புரியும் துணிவான நடவடிக்கைகளும், படிப்போரைப் பரிவில் திருத்தி வைக்க விடாது. தொடர்கதையாக வெளிவந்தபோதே பலராலும் பாராட்டப் பட்டது. இப்பொழுது அழகிய நூல் வடிவத்தில் வெளிவந்துள்ளது. ஆசிரியருக்குப் பெருமை தரும் படைப்பு.

வால் நட்சத்திரங்களைப் பற்றிய சுவையான செய்திகள், மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு, பக் 124, ரூ 17.50 - மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, தி.நகர்., சென்னை - 17.

தமிழில் வால் நட்சத்திரங்களைப் பற்றி ஒரு சில நூல்களே வந்துள்ளன. அவற்றுள் சிறப்பான இடத்தைப் பெறுகிறது இந்த நூல். காரணம் மேலோட்டமான தகவல்களை மட்டும் அளிக்காது. இதுவரை நாம் அறியாத கோமா, நியூக்ளியஸ், வால் என்று வால் நட்சத்திரங்களின் பாகங்களைப் பற்றியும் கூறுகிறது. இந்த வால் நட்சத்திரங்கள் எப்படி ஒவ்வொரு கோளிடமிருந்தும் மோதாது தப்புகின்றன என்பது சுவையான செய்தி. கூடவே 42 வால் நட்சத்திரங்களைப் பற்றியும் தகவல்கள் தரப்பட்டுள்ளன. அறிவியலில், வான வெளித் தகவல்களில் நாட்டம் உள்ளவர்களுக்கு இது ஒரு பால் பாயசம்!

வாய்மையே வெல்லும், டாக்டர். என். ஸ்ரீதரன், பக். 140, ரூ. 18/- கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளன் தெரு, தி. நகர்., சென்னை - 17.

இந்த ஆசிரியர் ஏற்கெனவே கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர். அறிவியல் உண்மைகளைக் கதை வாயிலாக விளக்கும் சிறு கதைகள் இதில் உள்ளன. இவற்றுள் பல கதைகள் கோகுலத்தில் வெளியாகி வாசகர்களின் பாராட்டைப் பெற்றவை. குறிப்பாக 'வென்று முடி' என்ற கதை வாசகர்களின் பெருத்த வரவேற்பைப் பெற்றது. இவை எல்லாம் இதில் தொகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கதையின் முடிவிலும் ஆசிரியர் விளக்கம் தந்துள்ளது படிப்பவர்களுக்கு மேலும் தகவல்களைத் தெளிவாக்க உதவுபவை. அருமையான பயனுள்ள படைப்பு.

உலகப் பழமொழிகள், பாகம் 2, மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு, பக். 172 ரூ. 24/- மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை - 600 017.

உலகம் முழுக்க பழமொழிகள் உள்ளன. இவை எல்லாமே சுவையானவை. இப்படி 27 நாடுகளில் வழங்கும் பழமொழிகள் இதில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. பொறாமை, சமயம், பெருமை, நட்பு, இரக்கம், கல்வி போன்றவை குறித்து எப்படி எல்லா நாட்டுப் பழமொழிகளும் ஒரே கருத்தைக் கூறுகின்றன என்பது வியப்பூட்டுகிறது! பேச்சாளர்களிடமும், எழுத்தாளர்களிடமும் அவசியம் இருக்க வேண்டிய புத்தகம்.

மர்ம பங்களா - பி.எஸ்.மணி, பக். 90 ரூ 12/- கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி.நகர்., சென்னை - 17.

கல்வியில் நீண்ட காலமாகத் துணை ஆசிரியராக இருந்த ஆசிரியரின் ஏழு நாடகங்கள் இதில் உள்ளன. நாடகங்கள் படிக்கச் சுவையாக உள்ளன. இளைஞர்களுக்கு ஏற்றவை.

உங்கள் நூலகம் பகுதியில் சிறுவர் நூல்களும், அறிவியல் பொது நூல்களும் மட்டுமே மதிப்புரை செய்யப்படும். வேறு நூல்களை அனுப்ப வேண்டாம். கட்டணம் இல்லை. இரண்டு பிரதிகளை ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

மறந்து விடாதே!



சுகுமாரன்

காலை நேரம். சுரேஷுக்கு அவனுடைய அப்பா பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்பாவின் நண்பர் ரகுராமன் வந்தார்.

''வணக்கம் மாமா'' என்றான் சுரேஷ்.

''வணக்கம் சுரேஷ்....'' என்ற அவர், ''பாரதியாரின் அறிவுரைப்படி காலையில் படிக்கிறே! நல்லது. பாராட்டறேன்'' என்று உற்சாகப்படுத்தினார்.

சுரேஷ் புன்னகைத்தான்.

''என்ன விஷயம் ரகு?'' என்றார் சுரேஷின் அப்பா.

''உனக்கு ஒரு நல்ல வேலை வாய்ப்பு. இந்த விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து இன்றே அனுப்பு'' என்றார் ரகுராமன்.

சுரேஷின் அப்பா விண்ணப்பத்தைப் படித்தார். ''நாளைதான் கடைசி நாள். இன்றைக்குத் தருகிறாயே?'' என்று கேட்டார்.

''இன்றைக்குக் கண்டிப்பாக அனுப்பினால் நாளைக்கு அவர்களுக்குக் கிடைத்து விடுமே? கவலை எதற்கு? அனுப்பு'' என்று விடைபெற்றார் ரகுராமன்.

அப்பா உடனடியாக விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து உறையிலிட்டு அஞ்சல் தலையை ஒட்டி சுரேஷிடம் கொடுத்தார்.

''சுரேஷ், பள்ளிக்கு அருகில் உள்ள அஞ்சலகத்தில் போடு. மறந்துடாதே.''

சுரேஷ் அதை வாங்கிப் புத்தகப் பைக்குள் வைத்துக் கொண்டான்.

'நினைவாக அஞ்சல் பெட்டிக்குள் போட வேண்டும். அப்பாவுக்கு நிரந்தரமான வேலை இல்லை. இந்த வேலை கிடைத்தால் நன்றாக இருக்கும். என் கையால் விண்ணப்பத்தைத் தபாலில் சேர்க்கிறேன். சாமி நல்லது நடக்கணும்' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான் சுரேஷ்.

அன்றிரவு. மீண்டும் அப்பாவுடைய நண்பர் வந்தார். 'விண்ணப்பம் அனுப்பினியா?' என்று அப்பாவைக் கேட்டார்.

அப்பா சுரேஷைப் பார்த்தார். சுரேஷ் பாம்பை மிதித்தது போல் திடுக்கிட்டான். ஐயையோ விண்ணப்பத்தைப் போட மறந்து விட்டேனே...! என்ன சொல்ல? சுரேஷ் மனத்திற்குள் அலறினான். அவனையும் மீறி வார்த்தைகள் வெளிவந்தன.

''அப்பா, காலையிலேயே தபாலில் சேர்த்திட்டேன்...''

பொய் சொன்ன பிறகு மனம் அதிகமாக 'திக்...திக்...' என்று அடித்தது.


''நிச்சயம் அந்த வேலை உனக்குக் கிடைக்கும். அந்த வேலைக்கான தகுதி உனக்கு இருக்கிறது'' என்று உரக்கப் பேசி அப்பாவுக்கு நம்பிக்கையும் மகிழ்ச்சியும் ஊட்டிக் கொண்டிருந்தார் ரகுராமன்.

அதைக் கேட்கக் கேட்க சுரேஷின் மனம் படாதபாடுபட்டது. தவித்தான்.

விண்ணப்பம் பைக்குள் இருப்பதை நினைத்து பயந்தான். வெடிக்கப் போகும் குண்டை வைத்திருப்பது போலிருந்தது! திடீரென்று பை கனமாகக் கனப்பது போல் ஓர் உணர்வு!

விண்ணப்பம் இனிமேல் நம் பையில் இருக்கக் கூடாது. கூறிவிட்ட பொய்க்கு ஏற்றபடி முதலில் அதைத் தூக்கி எறிய வேண்டும் என்று முடிவு செய்தான். எல்லோரும் தூங்கிய பிறகு அதைத் தூக்கிக் குப்பைத் தொட்டியில் போடுவதற்காக வெளியே வந்தான்.

குப்பைத் தொட்டிக்கு அருகில் வந்ததும் துணிவு போய் விட்டது. சரியான வருமானமில்லாது குடும்பத்தை நடத்தும் துயரம் கப்பிய அப்பாவின் முகம்



நினைவுக்கு வந்தது. ''செய்த தவறை நியாயப்படுத்திக் கொள்ள, தபால் பெட்டியில் போடக் கொடுத்ததைக் குப்பைத் தொட்டியில் போடுகிறாயா மகனே...?'' என்று அப்பா கேட்பது போலிருந்தது.

அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. விண்ணப்பத்தை நேரடியாகவே சென்று கொடுத்து விட்டால் என்ன? தாமதத்தையும் தவிர்த்தது போல் இருக்கும். நிச்சயம் சேர்ந்து விட்டது என்றும் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். அப்படியே செய்வது என்று முடிவு செய்து கொண்டான்.

அடுத்த நாள் காலை. அம்மாவிடம் புதிய நோட்டு வாங்க வேண்டும் என்று பொய் சொல்லி மூன்று ரூபாய் வாங்கிக் கொண்டான். விண்ணப்பம் சேர வேண்டிய அலுவலகம் அண்ணாசாலையில்தான் இருந்தது. திருவொற்றியூர் நேரடி நிறுத்தத்தில் அண்ணா சாலைக்குப் போகும்



பஸ்ஸுக்காகக் காத்திருந்தான். அப்பாவின் நண்பர், அதே ரகுராமன் அங்கு வருவது தெரிந்தது. சுரேஷ் சட்டென்று ஒளிந்து கொண்டான். ரகுராமன் தன்னைக் கவனித்திருக்க முடியாது என்று அவன் மனம் நம்பிக்கை கொண்டது.

உண்மையில் ரகுராமன் அவனைப் பார்த்து விட்டார். ஆனால், அவனைக் கவனித்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. பக்கத்திலிருந்த ஓட்டலுக்குள் நின்று கொண்டு அவனையே கவனித்தார்.

அண்ணாசாலைக்குப் போகும் பஸ் வந்தது. சுரேஷ் ஓடிப் போய் ஏறினான். ஏறும் போது பின்னாலிருந்து ஒரு கை அவன் முதுகைத் தொட்டது. திரும்பிப் பார்த்தான். ரகுராமன்!

சுரேஷ் பஸ்ஸில் ஏறாமல் இறங்கி விட்டான். 'எங்கேடா போறே...?' என்றார் ரகுராமன்.

சுரேஷ் திணறினான். உளறினான். 'நண்பன் வீட்டுக்கு...' என்றான்.

'பள்ளிக்கூடம் இருக்கு... பையையும் தூக்கிட்டுப் போற....? டேய், நீ நல்ல பையன். வழி தப்பி விடாதே. உண்மையைச் சொல்' என்று ரகுராமன் அதட்டியதும் சுரேஷிடமிருந்து அழுகை பீறிட்டது. ரகுராமன் அவனை ஓட்டலுக்குள் அழைத்துச் சென்றார்.


அவன் கேவிக் கேவி அழுதான். அழுதுகொண்டே உண்மையைக் கூறினான்.

''சரி, அழாதே... நீ நல்லவன். மறந்து போயிட்டே. அப்பாவுக்கு வேலை கிடைக்கணும்னு விண்ணப்பத்தை நேரிலேயே கொடுக்கப் புறப்பட்டுட்டே. நல்ல குணம். பொய் சொன்னதுதான் தவறு. ஒரு பொய்யை மறைக்க எத்தனை பொய்கள் பார்த்தியா? 'பொய் சொல்லக் கூடாது பாப்பா'ன்னு' பாரதியும் 'மெய் சொல்லல் நல்லதப்பா தம்பி'ன்னு பாரதிதாசனும் பாடியிருப்பதைப் படித்திருக்கிறாய் இல்லையா? இனியாவது மெய்தான் பேச வேண்டும்னு உறுதியா இரு. பள்ளிக்குப் போ. கவனமா படி. விண்ணப்பத்தை நானே நேரில் போய்க் கொடுத்து விடுகிறேன்'' என்றார் ரகுராமன்.


சுரேஷ் கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். மனச் சுமை குறைந்த மகிழ்ச்சியுடன் பள்ளிக்குச் சென்றான். மாலையில் அப்பா அம்மாவிடம் உண்மையைக் கூறினான். மூன்று ரூபாயை அம்மாவிடம் திருப்பிக் கொடுத்தான்.

பத்து நாட்கள் கழித்து வீட்டுக்கு வந்த தபாலை அப்பா பிரித்து விட்டு சுரேஷிடம் கொடுத்தார். அது அப்பாவுக்கு வேலைக்கான உத்திரவு! அப்பாவை விட அதிகம் மகிழ்ந்தவன் சுரேஷ்தான்!

மகிழ்ச்சியான செய்தியைச் சொல்ல ரகுராமன் வீட்டுக்கு உடனே கிளம்பினான்.



உலகம் அழிந்துவிடுமா?



'ஸ்விஃப்ட் டட்டில்'

மார்க்கெட்டில் புதுசா வந்திருக்கிற சோப்பா, சொட்டு நீலமா என்று கேட்டு விடாதீர்கள்.

உலக மக்களைக் கலங்க வைக்க வந்து கொண்டிருக்கும் வால் நட்சத்திரம்தான் இது! 5 கி.மீ. அகலமுள்ள பிரும்மாண்டமான பனிப்பாறையைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். இதுதான் ஸ்விஃப்ட் டட்டில் வால் நட்சத்திரம். இதைக் கண்டு உலகம் ஏன் கலங்க வேண்டும்? நொடிக்கு 60 கி.மீ. வேகத்தில் பயணம் செய்யும் இந்த தூமகேது 'தொப்'பென்று பூமியின் மீது விழுந்தால், (விழும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். விழக்கூடிய நாளைக் கூடக் குறித்தாயிற்று. ஆகஸ்ட் 14, 2116.) பத்து இலட்சம் அணுகுண்டுகளின் ஆற்றலை வெளிப்படுத்தும்! இந்த நட்சத்திரம் வெடிக்கும் போது உலகமே பேரழிவுக்கு உட்பட்டு, பெரும்பாலான ஜீவராசிகளும் அழிந்து போகும் என்று விஞ்ஞானிகள் அஞ்சுகிறார்கள்!

இது எப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டது?


அமெரிக்க இந்தியனாபொலிஸ் நகருக்கு 16 கி.மீ. தொலைவில், நோபிஸ்வில்லியிலுள்ள தனது வீட்டு முற்றத்தில் நின்று கொண்டிருந்தார் விஞ்ஞானி ப்ராடிஸ் பால்டிங். அவருடைய ரூடிய கை அளவேயான ஓர் எரி நட்சத்திரம் 1.5 மீட்டர் அருகாமையில் மண்ணை நோக்கிப் பாய்வதைக் கண்டார். அன்று 1991, ஆகஸ்ட் 31.

ஆராய்ச்சிகள் தொடர்ந்தன.

அடுத்து நட்சத்திரம் போன்ற ஒன்று. சுமார் 10 கஜ கனபரிமாணமுள்ள பொருள், பறந்து சென்றிருக்கிறதை இவரே கண்டார். அன்று 1991 டிசம்பர் 5. இப்படி இனங்காணப்பட்டதுதான் ''ஸ்விஃப்ட் டட்டில்''

தற்போது ஸ்விஃப்ட் டட்டில் பூமியில் வந்து மோதுகிற வாய்ப்பைத் தரும் பாதையில் உலக விஞ்ஞானிகளுக்கு ஒரு சவாலாகப் பயணிக்கிறது. இவர்கள் பயப்படும் அந்த மோதல் மட்டும் உண்மையாகவே ஏற்பட்டால், அது உலகின் இருண்ட காலத் துவக்கமாகி விடும் என்று அறிவியலார் கருதுகிறார்கள்.





விவசாயம் நின்று போகும். நாகரீகம் நசிந்து விடும். டினோஸார்கள் ஒரேயடியாக அழிந்த மாதிரி உயிரினங்கள் சுத்தமாகத் துடைத்தெறியப் படும் என்று அவர்கள் கவலைப்படுகிறார்கள். கேட்கவே பீதியாக இருக்கிறது இல்லையா?

அழிவு ஏற்படக்கூடிய நாள் ஆகஸ்டு 14, 2116 என்றும் விஞ்ஞானிகள் கணித்திருக்கிறார்கள். அதாவது நாம், நம்முடைய பிள்ளைகள், பேரன் பேத்திகள் வரை பத்திரம். கொள்ளுப் பேரர்களின் பத்திரத்துக்கு உத்திரவாதமில்லை!

சர்வதேச வானஇயல் அமைப்பைச் சேர்ந்த விஞ்ஞானிகள். இந்த வால் நட்சத்திரத்தின் இயக்கத்தை முறைப்படி உறுதிசெய்ய அக்டோபர் 15, 1992ல் கண்டறிந்தார்கள். முதலில் 1862லும், இப்போது செப்டம்பர் 1993லும் 'ஸ்விஃப்ட் டட்டில்' காணப்பட்டிருக்கிறது. இது பூமியின் மேல் மோதக்கூடிய வாய்ப்பு எப்படி ஏற்படும்? சூரியனைச் சுற்றி வரும் அதன் பாதை 2116ல் மாறி விடும் அபாயம் உள்ளது. இதன் காரணமாக இது பாதை மாறி பூமியை நோக்கி வரும். பூமியில் மோதும் என்கிறார்கள்.

செவ்வாய் - வியாழ கிரகங்கள் இடையே ஆயிரக்கணக்கான (ஏன் லட்சக்கணக்கான என்றே சொல்லலாம்) குட்டி நட்சத்திரங்கள் வளைவுப் பாதையில் (Orbit) சுற்றிக் கொண்டிருக்கின்றன. ஆனால் இவற்றுள் 3000 ஸ்திரமற்ற எரிநட்சத்திரங்கள் மட்டுமே பூமியின் சுற்றுப் பாதையில் குறுக்கிடுமென்றும், அவற்றுள் கூட 184 தான் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் வானவியலார் தெரிவிக்கிறார்கள். இவை தவிர, மாதம் இரண்டு வீதம் புதிதாக எரிநட்சத்திரங்கள் கண்டறியப் படுகின்றன. பல எரிநட்சத்திரங்களின் சுழற்சிப் பாதை (orbit) நிலையற்றதாகையால் அவை சூரிய அமைப்புக்குள் இழுபடுகின்றன. வியாழன் மற்றும் உள்ளடங்கிய கிரகங்களின் ஈர்ப்பு சக்தி அவற்றை பூமிக்குப் பக்கமாய்க் கொண்டு செல்கின்றன. இப்படித்தான் அவை பூமியுடன் மோதும் வாய்ப்பு ஏற்படுகிறது.


நிலவுப் பிரதேசத்தில் உள்ள குழிகளை (creaters)யும், பூமியில் விழும் எரிநட்சத்திரங்களையும் ஆராய்ந்த வல்லுநர்கள் 3 லட்சத்திலிருந்து 10 லட்சம் ஆண்டுகளுக்கு ஒருமுறை பெரிதான ஒன்று பூமியில் பலத்த வேகத்துடனும் சப்தத்துடனும் விழுகின்றது என்கிறார்கள். இதன் பொருள், அடுத்த 50 வரு

தேவராஜ்

ஷங்களுக்குள் 6000ல் ஒரு வாய்ப்பும், 20,000ல் ஒரு வாய்ப்பும் பிரளயம் (cataclysm) ஏற்படுத்துகிற தாக்குதலாக பூமிக்கு அமையும் என்ப தாம்.

இதுவரை இப்படிப் பட்ட மோதல்கள் ஏற்பட்டிருக்கிறதா?

1908- ஜூன் 30 காலை 7.17க்கு ஒரு பெரிய நெருப்புப் பந்து வான மண்டலத்தின் தென் கிழக்கிலிருந்து. வட மேற்கு திக்காக பலத்த சப்தத்துடன், புழுதி மேகம் போல் ஓடியிருக்கிறது. 'சைபீரியாவிலுள்ள பைகால் ஏரி சமீபம், டாங்குகா ஆற்றுப் பிரதேச மக்கள் இதைப் பார்த்தனர். 1000 மைல் தொலைவில் உள்ளவர்களுக்கும் அந்த பேரொலி கேட்டது. நெருப்புப் பந்து 12 கி.மீ. உயரத்துக்கு ஓங்கி எரிந்ததை 400 கி.மீ. தொலைவில் உள்ளவர்களும் கண்டிருக்கிறார்கள்.



இந்த நூற்றாண்டில் பதிவு செய்யப் பட்ட மிகப்பெரிய வெடிச்சத்தம் சைபீரியாவில் ஏற்பட்டதுதான். 20 மெகா டன் ஹைட்ரஜன் குண்டு வெடிப்பிற்கு சமம் இது என்கிறார்கள்.

சரி, இது போல் அதிர்வெடிச் சம்பவம் வேறு எங்கும் நிகழ்ந்திருக்கிறதா? நிகழ்ந்திருக்கிறது.

அமெரிக்க அரிஸோனா மாவட்டத்தில் 30,000 வருஷங்கள் முன் 80,000 டன் எடையுள்ள எரிகல் ஒன்று விழுந்து பள்ளம் பறித்திருக்கிறது. அந்தக் குழி 170 மீட்டர் ஆழமும், 1.2 கி.மீ. குறுக்களவும் கொண்டதாக இன்றைக்கும் உள்ளது.

கொஞ்சம் கூட சிதறாமல் விழுந்து, முழுதாகவே கிடக்கிற எரிகல் ஒன்றும் நம்பியாவில் உள்ளது. அது நிக்கல் - இரும்பு கலவையாய், 55,000 கிலோ எடையுடன் காணப்படுகிறது.

நம் நாட்டிலேயே மகாராஷ்டிராவிலுள்ள லோனார் கிராமத்தில் இத்தகைய ஓர் பள்ளம் உள்ளது. 1.8 கி.மீ. குறுக் களவும், 150 மீட்டர் ஆழமும் கொண்ட இது 20,000 ஆண்டுகளுக்கு முன் விழுந்த எரிகல்லின் விளைவாக ஏற்பட்ட பள்ளமே என்கிறார்கள் விஞ்ஞானிகள். எரிமலையோ அல்லது எரி நட்சத்திரமோ எப்படி ஒரு பள்ளத்தை ஏற்படுத் தக்கூடும் என்பதை, அங்கு கிடைக்கும் இரிடியத்தின் (Iridium) அளவைக் கொண்டு கண்டுபிடிக்கிறார்கள்.

பெரும்பாலான வால் நட்சத்திரங்களை அமெச்சூர் விஞ்ஞானிகள் தான் கண்டறிந்து வருகின்றனர். தொழில்ரீதியான வானியலாளர்கள் (professional astronomers) தங்களுடைய தொலை நோக்காடியைக் (Telescope) குறிப்பிட்ட நிகழ்ச்சிகளுக்காக, குறிப்பிட்ட பாதையில் மட்டுமே பயன்படுத்துவார்கள். ஆனால், அமெச்சூர்களோ வானத்தின் ஒவ்வொரு பகுதியையும் ஆர்வமுடன் அலசிக் கொண்டிருப்பார்கள். இந்த நிலையில்தான் எதிர்பாராத பல கண்டு பிடிப்புகளுக்கு அவர்கள் தங்களை அறியாது காரணமாகி விடுகிறார்கள்.

சரி, பிரச்னைக்கு வருவோம். ஸ்விஃப்ட் டட்டில் பூமியில் மோதுவதைத் தவிர்க்க முடியாதா? விஞ்ஞானி

கள் இதுபற்றி ஏற்கெனவே ஆராயத் தொடங்கி விட்டனர். ஸ்விஃப்ட் டட்டிலை எப்படி அழிக்கலாம் என்று பல ஆலோசனைகள் கூறப்படுகின்றன.

இதை 1. அழிக்கலாம் அல்லது திசைமாற்றலாம். 2. பூமியின் சுழற்சிப் பாதைக்குள் நகர்த்தி, புதைக்கலாம். 3. சந்திரனின் சுழற்சிப் பாதைக்கு நகர்த்தி, வரிசைப்படுத்தி விடலாம். 4. ஓர் இயந்திரத்தை அந்த வால் நட்சத்திரத்தின் மீது இறக்கி, அதன் இயக்கத்தின் மூலம், பாதையிலிருந்து விலகச் செய்யலாம்.

1991-ல் நாஸா (NASA) அமைப்பு ஓர் கண்காணிப்புக் குழுவை அமைத்தது. வானமண்டல சீரழிவுகளைப் (Space Debris) பற்றி ஆராய்வதே அதன் பணி. அந்தக் குழுவின் சிபாரிசு என்ன தெரியுமா? அணு ஆயுதங்களை ஏவி இடையறாது சுற்றி வரச் செய்வதும், பூமி, நிலவு மண்டலங்களில் லேஸர் துப்பாக்கிகளை அடுக்கடுக்காக இயங்கச் செய்வதும் ஆகும். இப்படிச் செய்வதும் 'ஸ்விஃப்ட் டட்டிலைத் திசை திருப்பலாம் என்கிறார்கள். எல்லாமே "லாம்" என்ற முடிவாக இருக்கிறதே தவிர, உறுதியளிக்கக்கூடியதாக இல்லை என்பது கவலை தரும் உண்மை!

'ஓர் அப்பாடா' செய்தி :

ஸ்விஃப்ட் டட்டிலின் வெளிப்புறமாக எழும் சக்திகள் அதன் பாதையை தானாகவே மாற்றி விடக்கூடும். சூரியனை நெருங்கும் போது அச் சக்திகள் அதிகமாகி இயற்கையாகவே ஓர் உந்துதல் ஏற்படக் கூடும் என்றும் இப்பொழுது அறிவியலார் கருதுகிறார்கள். மேலும், ஈர்ப்பற்ற சக்திகள், அதாவது அந்த நட்சத்திரத்தின் வால் பகுதியில் செயல்படும் வாயு காரணமாக அது தன் இலக்கையே (பூமி) தவற விட்டு விட்டுப் பாதை மாறி விடவும் கூடும். ஆனால், இவையும் வாய்ப்பே தவிர உறுதி இல்லை!

உலகத்தை, அழிவு மோதலில் இருந்து தடுக்க என்ன செய்யப் போகிறார்கள் என்பதை விஞ்ஞான உலகம் தான் முடிவு செய்ய வேண்டும்.

"எப்ப நம்ம கல்யாணம்?"

"வெயிலும் மழையும் சேர்ந்து அடிக்கிறப்பதான். அப்பதானே நரிக் குக் கல்யாணம் பாங்க!"





"புலி இருக்கிறப்போ இவ்வளவு கிட்டத்திலே போறோமே! ஆபத்தில்லையா.....?"

"புலி பசிச்சாலும் "Bull" ஐத் தின்னாதுன்னு கேள்விப் பட்டதில்லையா?"

"என்னடா, எலிப் பசங்களா, சாப்பாட்டை எங்கிட்ட வைக்கிறீங்க! ஏதும் விசேஷமா...?"

"இன்னிக்கு சாப்பாட்டுல யாரோ எலி பாஷாணத்தைக் கலந்துட்டதா புரளி. உண்மையாங்கிறதை தெரிஞ்சுக்கத்தான்....!"



தேடி வந்த தெய்வம்!

ஆசிரியரின் பேச்சுப் போட்டி அறிவிப்பைக் கேட்டதும், 'டக்'கென்று எழுந்து நின்றவன் தங்கவேலு ஒருவன் தான். அவனது அவசரத்தைப் பார்த்துக் கடைசி வரிசை பெஞ்சிலிருந்து ஏளனம் கலந்த ஒரு நமட்டுச் சிரிப்பு எழுந்தது. தொடர்ந்து 'கசமுச'வென்று கிளம்பிய பேச்சொலி வகுப்பறைக்குள் சிறியதொரு கலகலப்பைத் தோற்றுவித்தது.

''பத்துப் பேருக்கு முன்னாடி வந்து நாலு வார்த்தை பேசறதுக்கு நடுங்கிச் சாவீங்க! அவனைப் பாத்தா எளக்காரமா இருக்கோ? உதவாக்கரைப் பசங்களா!'' - அதட்டல் மூலம் வகுப்பை அடக்கிய ஆசிரியர், ''நீ உக்காருப்பா தங்கவேலு. நாளக்கி நம்ம ஸ்கூல் 'லெவல்'லே ஆயத்தப் போட்டி நடத்தி, பைனலுக்காக செலக்ட் பண்ணுறாங்க. நீ தயார் பண்ணிட்டு வந்திடு'' என்று கூறி, அவன் பெயரைக் குறித்து அனுப்பி விட்டுப் பாடத்தை ஆரம்பித்தார்.

அந்தப் பாடவேளை முடிந்ததுமே பத்து நிமிடம் குறுகிய இடைவேளை வந்தது. கடைசி பெஞ்ச் கருணாகரனும் அவனது ஏழெட்டு நண்பர்களும் தங்கவேலுவை ஒரு மாதிரியாகப் பார்த்துக் கொண்டு வெளியே கிளம்பினார்கள். ஆனால், கபடமில்லாத அவனோ அவர்களைக் கண்டுகொள்ளவில்லை.

தங்கவேலு பக்கத்துக் குக்கிராமத்துப் பையன். தினசரி ஐந்து கிலோ மீட்டர் நடந்து வந்து அந்த நகரத்துப் பள்ளியில் படித்து விட்டுப் போகிறான். வசதி குறைந்த ஏழைக் குடும்பம். ஆனால், படிப்பில் படு கெட்டிக்காரன். அதைப் போலவே பள்ளி சார்ந்த மற்ற அம்சங்களிலும் ஆர்வமும் அக்கறையும் அதிகம் காட்டக்கூடியவன். பரிசு கிடைக்கிறதோ இல்லையோ, எதற்கும் கூசாமல் நான் என்று முதலில் எழுந்து பெயர் கொடுப்பான். அதனால், வகுப்பில் பாதி மாணவர்களுக்கு அவன் மீது ஒரு பொறாமை கலந்த போட்டி மனப்பான்மை.

மாலை பள்ளி முடிந்ததும் பள்ளி நூலகத்திற்குள் நுழைந்தான் தங்கவேலு. பொறுப்பாளரிடம் பேச்சுப் போட்டி பற்றிய விவரத்தைக் கூறி, அது சம்பந்தமான புத்தகம் வேண்டும் என்று விண்ணப்பித்தான்.

ஆர்வத்தோடு வந்து கேட்கும் அவனை அன்போடு நோக்கிய பொறுப்பாளர், ''ஏந்தம்பி, கொஞ்சம் முந்தி வந்திருக்கக் கூடாதா? இன்டர்வெல் டைம்லே உங்க வகுப்பைச் சேர்ந்த அந்தப் பெரிய பையன் கருணாகரன், மூர்த்தி, இன்னும் ஏழெட்டுப் பேர் வந்தாங்க. விவேகானந்தர் சம்பந்தமான எல்லாப் புத்தகங்களையும் ஒண்ணு விடாமே தேடி எடுத்து வாங்கிட்டுப் போயிட்டாங்களே! இந்தா பாரு ரிஜிஸ்டரை...'' என்று கூறிப் பதிவேட்டைப் புரட்டி அவனிடம் நீட்டினார்.

தங்கவேலுவால் ஒன்றும் பேச முடியவில்லை. போட்டிக்குப் பெயரே கொடுக்காத இவர்கள் ஏன் எல்லாப்

புத்தகங்களையும் எடுத்துப் போனார்கள் என்று குழம்பிப் போய் நின்ற தங்கவேலுவைப் பார்த்து இரக்கப்பட்ட பொறுப்பாளர், ''சரி தம்பி, கவலைப் படாதே. நம்ம ஊர் கிளை நூலகத்தில் நிச்சயம் அவை கிடைக்கும். இந்தா என்னோட சொந்த டோக்கன். இத வச்சிப் புத்தகம் எடுத்துத் தயார் பண்ணிட்டு டோக்கனைப் பத்திரமா எனக்குத் திருப்பிக் கொடுத்துடு!'' என்று மேஜை டிராயரிலிருந்து நூலக அடையாள அட்டையொன்றை எடுத்து அவனிடம் நீட்டினார்.

தாங்க முடியாத மகிழ்ச்சியால் தங்கவேலுவுக்குத் தலைகால் தெரிய

குரு.சீனிவாசன்

வில்லை. உள்ளூர் நூலகக் கிளைக்கு ஓடினான்.

''அடடா, நீ கேக்குற புக்ஸ் எல்லாம் பத்து நிமிஷத்துக்கு முந்தித் தானே வெளியே போகுது! ஓங்க ஸ்கூல்ல ஒம்பதாம் வகுப்பு படிக்கிறாங்களாமே யாரோ கருணாகரன், மூர்த்தி, சுரேஷ், ஜமால், சாலமன். இப்படி ஏழெட்டுப் பேரு யார் யார்கிட்டேயோ இரவல் டோக்கன்கள் வாங்கிட்டு வந்து, விவேகானந்தர் பத்தின அத்தினி புத்தகங்களையும்





பொறுக்கிட்டுப் போயிட்டாங்களேப்பா! ஏதோ பேச்சுப் போட்டின்னு சொன்னாங்களே?'' என்று விளக்கிய நூலகர், தங்கவேலுவை மிகவும் பரிதாபமாக ஏற இறங்கப் பார்த் தார்.

ஏமாற்றம் கப்பிய மனத்தோடு எதுவும் பேச முடியாமல் வெளியே வந்தான் தங்கவேலு. அவனது உள்ளம் உடைந்து உருக்குலைந்து போனது போலிருந்தது.

'சந்தேகமில்லை; இது கருணாகரனின் சதித் திட்டமேதான்! எனக்கு வெற்றி கிட்டாமல் தடுக்கத் தன் கூட்டாளிகளோடு சேர்ந்து அவன் செய்யும் ஆயத்தங்கள்தான் இந்தத் திட்டமிட்ட சதிச் செயல்கள்!' - என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான் தங்கவேலு. அதற்கான காரணமும் இப்போதுதான் அவனுக்கு நினைவுக்கு வரத் தொடங்கியது. ஒரு வாரத்துக்கு முந்தி நடந்த நிகழ்ச்சி அது.

அன்று கருணாகரன் வீட்டுக் கணக்கு போட்டுக் கொண்டு வரவில்லை. கணித ஆசிரியர் வெளியே விரட்டி விட்டார் அவனை. காலை முதல் நண்பகல் வரை கால் கடுக்க வெளியில் நின்ற கருணாகரன், மதிய உணவுக்கான இடைவேளையின் போது தங்கவேலுவின் தயவை நாடினான். அவன்தான் கணக்கில் புலியாயிற்றே! அரைமணி நேரத்திற்குள் வீட்டுக் கணக்குகளை எழுதிக் கொண்டு திருப்பிக் கொடுப்பதாகத் தங்க வேலுவின் கணக்கு நோட்டைக் கேட்டான்.

அவனது நிலைகண்டு தங்கவேலு மெத்தவும் இரக்கப்பட்டாலும் அவனைப் பார்த்து, ''கருணாகரா! மத்த பாடம்னா பார்த்து எழுதிப் படிச்சிடலாம். ஆனா, கணக்கு அப்படி இல்லே. அதை நல்லா விளங்கிக்கிட்டு, அதுக்கப்புறம் நாமே செய்யறதுதான் நல்லது. இப்போ வீட்டுக் கணக்கைக் காப்பியடிச்சி எழுதி ஆசிரியர்கிட்டே காட்டிடுவே. நாளைக்குப் பரீட்சையிலே என்னப்பா செய்வே? இன்னியிலிருந்து ஸ்கூல் முடிஞ்சப்புறம் தினசரி அரை மணி நேரம் நானே ஒனக்குக் கணக்கு சொல்லித் தாரேன். நீ சுலபமாப் புரிஞ்சிக்கிவே...!'' என்று நல்லதைத் தான் நயமாக எடுத்துச் சொன்னான் தங்கவேலு.

''போதுண்டா மேதாவி. ஒனக்கு எத்தினி திமிர் இருந்தா ஒங்கிட்ட வந்து என்னைக் கத்துக்கச் சொல்லுவே? உன்ன மாதிரி நான் வக்கத்தவன் இல்லே. வாத்தியாரை வீட்டுக்கே வரவழைச்சு டியூஷன் படிச்சிக்க எனக்கு வசதி இருக்கு'' என்று சூடாகப் பேசிவிட்டுப் போனவன்தான் அப்புறம் ஐந்தாறு கூட்டாளிகளைச் சேர்த்துக் கொண்டு தங்கவேலுவைப் பார்க்கும் போதெல்லாம் சாடை மாடையாகக் கிண்டல் கேலி பண்ணுவதில் இறங்கி விட்டான்.

ஆனால் கருணாகரனின் அந்தக் குரூரம் வளர்ந்து பெருகி, தனக்கு எதிராக இவ் வளவு தூரம் சதி செய்யும் வரைக்கும் போகுமென்று தங்கவேலு சற்றும் எதிர் பார்க்கவில்லை.

நடந்து கொண்டே யோசித்தான் தங்கவேலு. அவனது தன்மான உணர்ச்சி தலைதூக்கியது.

'இவ்வளவு தூரம் போனப்புறம் இனி நாம் சோர்வடையவே கூடாது. எப்படியும் இந்தப் போட்டியில் முதற் பரிசைத் தட்டிக் காண்பித்துக் கருணாகரன் முகத்தில் கரிபூசியே ஆக வேண்டும். இல்லாவிட்டால் அவனும் அவனது சகாக்களும் இன்னும் என்னென்னவோ இடைஞ்சல் செய்வார்கள். அப்புறம் நாம் தலைநிமிர முடியாது.'

உறுதியான முடிவொன்று அவனது உள்ளத்தில் தன்னம்பிக்கைச் சுடரை ஏற்றியது. பக்கத்து ஊரில் குடியிருக்கும் தமிழாசிரியர் பரமானந்தத்தின் நினைவு அவனுக்கு வந்தது. அவரிடம் சென்று வேண்டினால் உதவி செய்ய மறுக்கவே மாட்டார். அவர் தரும் குறிப்புகளை வைத்துப் போட்டிக்குத் தயார் செய்து விடலாம். முன்னமே அவரிடம் போகாமல், புத்தகங்களை நம்பி ஏமாந்து விட்டோமே' என்று வேகமாக நடந்தான்.

தமிழாசிரியர் குடியிருந்த அந்த ஊரைத் தங்கவேலு நெருங்கிய போது, மழை பிடித்து விட்டது. ஊரின் நுழைவிடத்தில் அமைந்திருந்த பெரிய சத்திரம் போன்ற அந்தக் கட்டிடம் அவன் கண்களில் பட்டது. ஓடிப் போய் அதன் வராண்டாவில் ஒதுங்கி சட்டையைக் கழற்றி, நனைந்து போன தலையைத் துவட்டிக் கொண்டான்.

அந்தக் கட்டடத்திலுள்ளிருந்து 'கலகல'வென்று நூற்றுக்கணக்கான பேச்சுக் குரல்கள் அவன் கவனத்தைக் கவர்ந்தது. உள்ளே எட்டிப் பார்த்தான். தரை விரிப்பில் இருநூற்றுக்கும் மேற்பட்டவர்கள் அமர்ந்திருப்பது தெரிந்தது. அவர்களுக்கு முன்னால் சிறு மேசை. மூன்று



ஒன்றாய்த் தந்தான்

இரண்டு கால்கள் எதற்காக?
என்றும் விரைவாய் நடப்பதற்கு
இரண்டு கைகள் எதற்காக?
என்றும் வேலை செய்வதற்கு

ஏனோ நாக்கை வாயை மட்டும்
இரண்டாய் இறைவன் வைக்காமல்
ஏனோ ஒன்றாய்த் தந்தானோ
இதன்பொருள் என்ன அறிவாயா?

இரண்டு விதமாய்ப் பேசாமல்
என்றும் உண்மை பேசிடத்தான்
இரண்டாய் அவற்றைப் படைக்காமல்
இறைவன் ஒன்றாய்த் தந்துள்ளான்


– செல்லகணபதி

நாற்காலிகள். அதில் பெரியவர்கள் இருந்தனர்.

'அங்கே ஏதோ கூட்டம் நடக்கப் போகிறது போலிருக்கிறது!' என்பதை யூகித்துக் கொண்டான் தங்கவேலு. ஆனால், ஒலிபெருக்கி எதுவும் இல்லையே!

அதே சமயம் கூட்டத் தலைவர் எழுந்து, பார்வையாளர்களைக் கையமர்த்தி அமைதிப்படுத்தி பேசத் தொடங்கினார்.

''அன்பர்களே, விவேகானந்தரின் பிறந்த தினத்தையொட்டி ஏற்பாடாகியுள்ள நமது சன்மார்க்க சங்கக் கூட்டத்தில் சுவாமி சங்கரானந்தர் அவர்கள், 'விவேகானந்தரின் தாய்நாட்டுப் பற்று' என்பது குறித்து பேசப் போகிறார்.''



'''வா'னொலிக்கு எதிர்ப் பதம் சொல்லு?''

'' 'போ'னொலி தான்!''

– இரா. ஜெயகாந்தன்.

தலைவரின் அந்தச் சொற்கள் தங்கவேலுவின் செவிகளில் தேனாகப் பாய்ந்தது. ஒருகணம் திகைத்துப் போய் நின்றான் அவன். தேடிப் போன தெய்வம் தெருவில் வரக் கண்டால்...?

தாளாத ஆனந்தத்தில் தன்னை மறந்து போன அவன், உள்ளே ஓடி முதல் வரிசையில் உட்கார்ந்தான். அவன் கைகள் இயந்திரமாக இயங்கின.

நிகழ்ச்சி முடிந்ததும் ஊர் தேடிப் புறப்பட ஆயத்தமான தங்கவேலுவைச் சுவாமி சங்கரானந்தர் சைகை காட்டி அருகில் அழைத்தார். இந்த இரண்டு மணி நேரமும் அவனது தீவிரமான எழுத்து வேலையை அவர் கண்காணித்துக் கொண்டு இருந்தது அவனுக்கு எப்படித் தெரியப் போகிறது?

தங்கவேலு கிட்ட நெருங்கிச் சுவாமிஜியை வணங்கினான். அவனைப் பற்றி அன்போடு விசாரித்தார் சங்கரானந்தர். உணர்ச்சிவசப்பட்டுப் போன தங்கவேலு, உள்ளதையெல்லாம் ஒன்று விடாமல் ஒப்புவித்தான். அவனது ஆர்வத்தை எண்ணி நெகிழ்ந்து போன சுவாமிஜி அவன் முதுகில் அன்போடு தட்டிக் கொடுத்தார். தன் கைப் பையிலிருந்து அழகான பெரிய புத்தகம் ஒன்றை எடுத்துத் தங்கவேலுவுக்கு வழங்கிய அவர், ''தம்பி உனது தன்னம்பிக்கைக்கும், விடாமுயற்சிக்கும் எனது பரிசு இது. உன் முயற்சியில் வெற்றிகிட்ட ஆசிகள்!'' என்று மனமுவந்து வாழ்த்தினார்.

'சுவாமி விவேகானந்தரின் வாழ்வும் வழியும்' என்ற அந்த நூலைப் பெற்றுக் கொண்ட தங்கவேலு, அவரைப் பக்தி சிரத்தையோடு வணங்கி விட்டு விடைபெற்றான்.

மறுநாள் மாலை தன் பள்ளியில் நடந்த செலக்ஷன் போட்டியில் மட்டுமா தங்கவேலு வெற்றி பெற்றான்? வட்ட அளவில் - மாவட்ட அளவில் இறுதியில் மாநில அளவிலான அனைத்துப் போட்டிகளிலும் அவனே முதலிடத்தில் நின்றான்! பரிசுகளும் பாராட்டுகளும், சான்றிதழ்களும் வந்து குவிந்தன. எத்தனை பத்திரிகைகளில் அவனது புகைப்படங்கள்! பள்ளிக்கான சுழற் கேடயத்தை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அவன் பெற்று வந்த போது தலைமையாசிரியர் பூரித்துப் போனார்.


பள்ளியில் தங்கவேலுவுக்குப் பெரிய பாராட்டு விழா நடந்தது. திட்டமிட்டு அவனுக்கு நூலகப் புத்தகங்கள் கிடைக்க விடாமல் சதி செய்த கருணாகரனும் அவனது நண்பர்களும் வாயடைத்துப் போய், முகத்தைக் கவிழ்த்துக் கொண்டதுதான் மிச்சம். இனியாவது அவர்கள் திருந்துவார்களா?


ஒற்றுமை என்ன? - போட்டி



















இங்கே உள்ள படங்களை நன்றாகக் கவனித்துப் பாருங்கள். இவைகளில் ஓர் ஒற்றுமை இருக்கிறது. இது என்ன ஒற்றுமை என்பதைக் கண்டுபிடித்து கூப்பனையும் பூர்த்தி செய்து அனுப்புங்கள். பரிசு இல்லாமலா? ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. வெளிநாட்டு வாசகர்கள், இந்தியாவில் தொடர்பு கொள்ள நண்பர் அல்லது உறவினர் முகவரியைத் தர வேண்டும்.





ஒற்றுமை என்ன? - போட்டி

பெயர் : ....

வயது : ....

முகவரி : ....

....

பின்கோடு : .... முடிவு தேதி : 28.2.94



நல்லா இருப்பே!

பள்ளியிலிருந்து வீடு திரும்பிய வினீத் குமார் காப்பி குடித்து விட்டு வீட்டுப் பாடங்களைச் செய்ய உட்கார்ந்தான். வீட்டுப் பாடம் அதிகமாக இருந்ததால் விளையாடுவதைக் கூட அன்று தவிர்த்து விட்டான். எழுத உட்கார்ந்தவனுக்கு திடீரென்று நினைவுக்கு வந்தது. ''கணக்குப் புத்தகம் வாங்க வேண்டுமே? அது இல்லாமல் நாளைக்கு வகுப்புக்கு வரக் கூடாது என்று ஆசிரியர் இன்றே கண்டித்து விட்டாரே? புத்தகம் வாங்க எட்டு ரூபாய் வேண்டும். அம்மாவிடம் கேட்க வேண்டாம். கண்டிப்பாக இருக்காது. நேற்றுத்தானே புது யூனிஃபாரம் வாங்கத் துணி எடுத்துக் கொடுத்திருக்காங்க? அதனால் உண்டியலில் உள்ள சேமிப்புத் தொகையை எடுத்துப் பார்க்க வேண்டியதுதான்.''

அம்மாவின் அழைப்புக் கேட்டது.

''வினீத்... பொன்னையா கடைக்குப் போய் உருளைக் கிழங்கு வாங்கிட்டு வா.''

பொன்னையா கடையில் அவர்களுக்குக் கடன் கணக்கு உண்டு. வாங்க வேண்டும் என்றால், ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகில் உள்ள மார்க்கெட்டுக்குப் போக வேண்டும்.

முதலில் மார்க்கெட்டுக்குப் போய்





விட்டு வந்து, உண்டியலை உடைக்கப் பார்க்கலாம் என்ற முடிவுக்கு வந்தான் வினீத்.

அலுவலகம் முடிந்து வீடு திரும்பும் நேரமாகையால் மார்க்கெட்டில் கூட்டம் அதிகமாக இருந்தது. பொன்னையா கடையில் கூட்டம் எக்கச்சக்கம். கையில் காசு கொடுத்து வாங்குபவர்களுக்கே முதல் சலுகை அளித்தான் பொன்னையா. அது நியாயமாகத் தோன்றியதால், வினீத் ஒரு ஓரமாக ஒதுங்கிக் கொண்டு பொறுமையாகக் காத்திருந்தான். சிறிது நேரத்திற்குப் பிறகு கூட்டம் குறைந்ததால், பொன்னையாவே வினீத்தின் பையை வாங்கி அரை கிலோ உருளைக் கிழங்கை நிறுத்துப் போட்டுக் கொடுத்தான்.

கூடையை அம்மாவிடம் கொடுத்த போது, ''நேராகக் குழாயடிக்குப் போய் கிழங்கை நன்றாக அலம்பிக் கொண்டு வா'' என்றாள். வீனித் குழாயடிக்குப் போய்ப் பையைக் கவிழ்த்தான். உருளைக் கிழங்குகளோடு வேறு ஒரு பொருளும் விழுந்தது. எடுத்துப் பார்த்தான். நான்காக மடிக்கப்பட்ட ஒரு புது பத்து ரூபாய் நோட்டு! பிரித்துப் பார்த்தான். ஏதோ மஞ்சள் குங்குமம் தடவப்பட்டிருந்தது.

இது எப்படி வந்திருக்கும்? பொன்னையா உருளைக் கிழங்கைப் போடும் போது கவனிக்காமல் எடுத்துப் போட்டிருப்பாரோ? இருக்க முடியாது. பொன்னையா தனியாக கல்லாப் பெட்டி வைத்திருந்தார். வரும் சில்லறையையும் காசையும், நோட்டையும் அதில் தான் போடுவார். அதனால் இது அவருடையதாக இருக்காது.

கடையில் உருளைக் கிழங்கோ அல்லது வேறு காய்கறியோ வாங்க வந்தவர்கள், கை தவறிப் போட்டு விட்ட நோட்டாகத்தான் இருக்க வேண்டும். பொன்னையா கவனிக்காது அள்ளிப் போட்டிருக்க வேண்டும். கடையின் முன் வரிசையில்தான் உருளைக் கிழங்கு கொட்டியிருந்தது.

இந்தப் பத்து ரூபாயை அவனாகப் போய்த் திருடவில்லை. அதுவாக, மற்றவர்களுடைய கவனக்குறைவு காரணமாக அவனிடம் வந்திருக்கிறது. அப்படியிருக்கும் போது அதை ஏன் அவனே வைத்துக் கொள்ளக் கூடாது? கணக்குப் புத்தகம் வாங்கிக் கொள்ளலாம். உண்டியலைக் கூட உடைக்க வேண்டாம்.

கமுதி.மு.ரியாசுல்லா

வினீத்குமாருக்கு, முன்பு ஒருமுறை தன்னுடைய அத்தை வீட்டிற்குச் சென்று திரும்பும் போது கால் சட்டைப் பையில் இருந்த பணம் ஓட்டை வழியாக விழுந்து விட்டதால் நான்கு கிலோ மீட்டர் தூரம் நடந்தே வீட்டுக்கு வந்தது நினைவுக்கு வந்தது. அதனால் அதைத் தனதாக்கிக் கொள்ளும் ஆசையைக் கழுவிக் கொண்டான்.

பாவம் இதைத் தவற விட்டவர் இந்நேரம் எவ்வளவு தவித்திருப்பார்? சரி, கடையருகே சென்று பார்க்கலாம். அங்கு இருக்கும் நிலவரத்திற்கேற்ப முடிவு செய்யலாம் என்று வேகமாகக் கடையை அடைந்தான் வினீத். அங்கு நான்கைந்து பேர் கும்பலாக நின்று பேசிக் கொண்டிருந்தனர். ஒரு பெண்மணி அழாக்குறையாகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''கொஞ்சம் நல்லா பாருங்க கடைக்காரரே. இங்கேதான் தவற விட்டிருப்பேன். நாலா மடிச்ச புது பத்து ரூபாய் நோட்டு. என் பேரன் பிறந்த நாளுக்கு யாரோ பரிசாத் தந்தது. வேற எந்தக் கடையிலேயும் எதுவும் வாங்கவும் இல்லே. இப்போ ரயில்ல போகக் கூட வேற பணம் இல்லையே. வீடு ரொம்ப தூரத்திலே இருக்கு. நடந்தும் போக முடியாது.''

''நான் என்னம்மா செய்யறது? காய்கறிகளுக்கு இடையில் கூட நல்லாப் பார்த்தாச்சு. கிடைக்கலியே?'' - என்று தன் இயலாமையைத் தெரிவித்தான் பொன்னய்யா.

வினீத்திற்கு அந்தப் பெண்மணியைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

''ஏம்மா, உங்க நோட்டுக்கு ஏதாவது அடையாளம் உண்டா?'' என்று கேட்டான்.

ஒரு நொடி யோசித்த பெண்மணி, ''தம்பி, புது நோட்டு நாலா மடிச்சிருக்கும். பிறந்த நாளுக்குப் பரிசாகத் தந்தவங்க அதுல மஞ்சள் குங்குமம் தடவி இருந்தாங்க. அதன் அடையாளம், வெள்ளைப் பகுதியில் இருக்கும்'' என்றாள்.

''இந்தாங்கம்மா உங்க ரூபாய். உருளைக் கிழங்கோட என் பைல வந்துட்டுது. வீட்டுக்குப் போய்த்தான் பார்த்தேன். உடனே ஓடி வந்தேன்'' என்று கூறி நோட்டைக் கொடுத்தான்.

''தம்பி, நீ நல்லா இருப்பே. ஆண்டவன் உனக்கு ஒரு குறையும் வைக்க மாட்டார்'' என்று அந்தப் பெண்மணி மிகவும் மகிழ்ந்து வினீத்தை வாழ்த்திச் சென்றாள்.

என்றும் இல்லாத மனநிறைவுடன் வீட்டுக்கு வந்து உண்டியை உடைத்து எண்ண ஆரம்பித்தான் வினீத்!

"சே...! என் தம்பிக்கு வந்த ஜுரம் எனக்கு வந்திருக்கலாம்டா!"

"ஏன்டா... தம்பி மேல உனக்கு அவ்வளவு பாசமா...?"

"ஊஹூம்; பரீட்சைக்குப் படிக்காமல் அவன் மட்டும் ஜாலியா படுத்திருக்கானே...?"

– சீர்காழி வி. ரேவதி





"கண்ணன் குசேலரை எப்படி எதிர்பார்த்திருப்பார்?"

"அவலோடு!"

- சீர்காழி வி. ரேவதி

புதிய ராஜா

சிற்பி சோமு

அடர்த்தியான காடு.

காற்றிலே ஓர் ஒற்றையடிப் பாதை. அதில் வசதியாகப் படுத்திருந்தது குள்ள நரி மாமா. அந்த வழியாக ஊர்ந்து வந்த மண்புழு ஒன்று, ''ஏய்! வழியை மறித்துக் கொண்டு சவமாய்ப் படுத்துறங்கும் தடியன் யாரடா?'' என்று வீரமாகக் கேட்டது.

நரி மாமா எழுந்து சுற்றிலும் பார்த்தார்.


அங்கே துரும்பைப் போல் நரி மாமாவைப் பார்த்தது கம்பீரமாக நின்றிருந்த மண்புழு.

''என்ன, மண்புழுவாரே! பேச்செல்லாம் ஒரு மாதிரியாய் இருக்கு...? என்ன ஆச்சு உமக்கு?'' என்று கேட்டது நரியார்.

''நரியாரே! நான் இப்போ நீர் நினைப்பது போல அற்பனல்ல, அபூர்வ சக்தி பெற்று வந்துள்ள யோகி. இதோ பாரும்...'' என்ற மண்புழு அந்த இடத்திலேயே உட்கார்ந்து வாய்க்குள் ஏதோ மந்திரத்தைச் சொல்லிக் கொண்டது. உடனே அதைச் சுற்றிலும் புகை மூட்டம் எழுந்து பின் ஒரு நொடியில் மறைந்தது. அங்கே மண்புழு நரியாக மாறி நின்றது!

''மண் புழுவாரே! நீர் உண்மையில் சர்வ வல்லமை பெற்றவர். உம்மையே இந்தக் காட்டுக்கு 'ராஜா'வாக்கப் போகிறேன்...'' என்றது தந்திரக்கார நரியார். அது தன் மனதுக்குள் மண் புழுவை ராஜாவாக்கினால் நாமே மந்திரியாக இருக்கலாம். மற்ற விலங்குகளை ஒரு ஆட்டு ஆட்டி வைக்கலாம் என்று திட்டமிட்டது.

அன்றைய தினமே நரியார், எல்லா மிருகங்களையும் அழைத்து மண்புழுவின் பெருமைகளைக் கூறி, அதை ராஜாவாக்கி விடுவதுதான் தங்களுக்குப் பாதுகாப்பு என்றும் பழைய ராஜாவான



கிழட்டுச் சிங்கத்திற்கு ஓய்வு அளித்து விடுவது என்றும் நரியார் யோசனை கூறியது. எல்லா மிருகங்களும் நரியின் யோசனையை ஏற்றன.

''பழைய ராஜாவுக்கும் புதிய ராஜாவுக்கும் உருவத்தில் ஒற்றுமை இல்லாது இருக்க வேண்டும். அதாவது மாறுபட்ட உருவமாக, பார்த்தாலே படுபயங்கரமாகக் காட்சி அளிக்கக்கூடிய ஒரு புதிய தோற்றத்தில் மண் புழுவாரைத் தோன்றச் சொல்லுங்க!'' என்று கரடியார் ஒரு திருத்தம் கூறியது. கரடியாரின் யோசனையை நரியார் ஏற்றுக் கொண்டது.

அதன்படி மண்புழு யானையின் துதிக்கை, சிங்கமுகம், புலியின் கால்களைக் கொண்ட விசித்திரமான ஒரு விலங்காக மாறியது. நரியார் அதற்கு 'புசியா' என்று பெயரிட்டது. புலி, சிங்கம், யானை ஆகியவற்றின் முதல் எழுத்தே 'புசியா' ஆனது.

ஒரு நல்ல நாளில் புசியாவுக்கு முடிசூட்டு விழா நடத்தி ராஜாவாக்கி விட திட்டமிட்டது நரியார்.

சிங்கமும் அதைச் சார்ந்த சில மிருகங்களும் முடிசூட்டு விழாவில் கலந்து கொள்ளாது வேறு இடம் போய் விட்டன.

விழாவைக் கோலாகலமாக நடத்திப் பெருமிதம் கொண்ட நரி மாமா, அன்றிலிருந்து புதிய ராஜாவுக்கு தன்னைத் தானே மந்திரியாக நியமித்துக் கொண்டார்.

புதிய ராஜா வந்த மகிழ்வில் தங்களுக்கு அதிக சௌகரியங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்த்த மற்ற விலங்குகளின் ஆசையில் மண் விழுந்தது!

நரியாரின் கெடுபிடியும், அடாவடித்தனமும் நாளுக்கு நாள் பெருகி வருவதைக் கண்டு எல்லா மிருகங்களும் கவலை அடைந்தன.

பழைய ராஜாவான சிங்கம் 'தான் உண்டு, தன் வழி உண்டு' என்று இருந்தது. ஆனால் இப்போது இந்த மண் புழுவும், நரியும் சேர்ந்து கொண்டு 'அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் கூடக் குடை பிடிப்பான்' என்பது போலத் தங்கள் நிலை மறந்து நம்மை ஆட்டி வைக்கின்றன. இதை இப்படியே விட்டால் நமது வருங்காலம் பேராபத்தாக முடிந்து விடும். ஆகவே இதற்கொரு முடிவு கட்டியே ஆக வேண்டும் என்று முடிவு செய்த சில மிருகங்கள் கரடியின் தலைமையில் பழைய ராஜாவான சிங்கத்தைப் போய்ப் பார்த்து முறையிட்டன.

சிங்கம் மௌனம் சாதித்தது. பின், ''நான் என்ன செய்ய முடியும்? நீங்களாகவே தேடிக் கொண்ட முடிவுதானே? நீங்கதான் விடுவித்துக் கொள்ள வேண்டும்'' என்று கூறி விட்டது.

மிருகங்கள் கவலையோடு திரும்பின. கரடி மட்டும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து சிந்தனையில் மூழ்கியது.

அப்போது...

அந்த வழியே ஐந்தாறு மண் புழுக்கள் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு சோகமே உருவாக ஊர்ந்து வந்தன.



''ஐயா மண்புழுக்களே. எல்லோரும் எங்கே போய் விட்டு வருகிறீர்கள்...? ஏன் இந்த சோகம்'' என்று கேட்டது கரடியார்.

''நாங்கள் எல்லோரும் எங்கள் இனத்தைச் சேர்ந்த ஒருவர் இந்தக் காட்டுக்கு ராஜாவாகப் பொறுப்பேற்றதைக் கேள்விப்பட்டு அவரை வாழ்த்தவும் எங்கள் குறைகளை முறையிடவும் வந்தோம். 'அவரோ புசியா என்ற புது விலங்காகி, எங்களைக் கண்டுகொள்ளாமலே விரட்டி அடித்து விட்டார்...' அவருக்குப் பக்க துணையாகவுள்ள நரி, 'எங்களைக் கொன்று விடுவதாக மிரட்டியது. அதான் 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று வருகிறோம்...'' என்றன.

''உங்களுக்கு என்ன குறை?'' என்றது கரடி அனுதாபத்துடன்.



''நாங்கள் வசிக்கும் குப்பத்தில் கோழி, சேவல்கள் தொல்லை தாங்க முடியவில்லை. எங்கள் இனத்தையே அழித்துக் கொண்டிருக்கின்றன. அதை முறையிடத்தான் வந்தோம்'' என்றன மண் புழுக்கள்.

கரடிக்கு ஓர் யோசனை; எண்ணம் உதித்தது. மண் புழுக்களுக்கு எதிரி கோழி. அந்தக் கோழியைப் பிடித்து வந்து போட்டால் இந்தத் திடீர் ராஜாவின் கதையும் முடிந்து விடுமே என்று மனதுக்குள் திட்டமிட்டது. ''உங்கள் கவலையை நான் போக்கி விடுகிறேன். உங்களுக்குத் தொல்லை தரும் கோழிக் கூட்டம் எங்கே உள்ளது காட்டுங்கள்?'' என்றது கரடியார்.

மண்புழுக்கள் கரடியாரை அழைத்துச் சென்றன.

மறுநாள் அதிகாலை கோழிகள் இரை தேட வந்தன. கரடியார் 'லபக்' கென்று இரண்டு சேவல்களைப் பிடித்து விட்டது. மற்ற கோழிகள் தப்பிப் போய் விட்டன. பிடிபட்ட கோழிகள் கதறின.

''கோழிகளே! உங்கள் இருவரையும் கொல்லக் கூடாது என்றால் நீங்கள் எனக்கு உதவி செய்வதாக உறுதி அளிக்க வேண்டும்'' என்றது கரடியார்.

''என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்....?'' என்று இரண்டு கோழிகளும் ஒரு குரலில் கேட்டன.

நடந்த விவரங்களை ஒன்று விடாமல் கூறிய கரடி, ''எங்களுக்குத் தலைவலியாக வந்துள்ள புதிய ராஜாவான மண்புழு புசியாவை நீங்கள் விழுங்கி எங்களுக்கு மறுவாழ்வு வழங்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டது.

''மண்புழு ராஜா, புசியா தோற்றத்தில் இருப்பதால் அதை அழிக்க எங்களால் முடியாது...! அது சுய உருவம் பெற்றால், உடனே அதன் கதையை முடித்து விடுகிறோம்!'' என்றன கோழிகள்.



''சரி, அதுக்கான ஏற்பாட்டை நான் செய்கிறேன் அதுவரை இங்கே இருங்கள்'' என்று கோழிகளைக் காட்டுக்கு அழைத்துச் சென்று ஒரு புதரில் மறைத்து வைத்து விட்டுச் சென்றது கரடியார்.

'மேல் மூச்சு, கீழ் மூச்சு' வாங்க ஓடி வந்த கரடியாரைக் கண்ட நரிமாமா... ''என்ன கரடியாரே! ஏன் இந்தப் பரபரப்பு...? என்ன வந்தது உமக்கு...?'' என்றார்.

''மந்திரியாரே! ஆபத்து, ஆபத்து! வேறு காட்டைச் சேர்ந்த இரண்டு துஷ்டர்கள் நம் காட்டில் புகுந்து நாசம் செய்கிறார்கள். அவர்களை உடனே ஒழித்து விட வேண்டும். எப்படியாவது ராஜாவிடம் கூறி ஏற்பாடு செய்யுங்கள்'' என்று அலறியது கரடியார்.

''மந்திரியாரே...! நீங்களோ நானோ போனால் துஷ்டர்கள் ஓடி விடலாம், ஆகவே, சர்வ வல்லமை படைத்த நமது ராஜாவே ஏதாவது எளிய தோற்றத்தில் சென்றால் அவர்களை அப்படியே பிடித்து அழித்து விடலாம்'' என்று கரடியார் மறுபடி கெஞ்சினார்.



கரடியின் யோசனை நல்லதாகவே பட்டது நரிக்கு. அவ்விதமே செய்யலாம் என்று கூறிய நரி, புசியாவாக இருந்த ராஜாவிடம் சென்று விவரத்தைக் கூறி, தாங்கள் உடனே சென்று அந்த துஷ்டர்களை ஒழித்து வர வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டது.

புசியா ராஜாவுக்கு உள்ளுக்குள் உதறல் எடுத்தது. தோற்றத்தில்தான் நாம் புலி, சிங்கம், யானை கலந்த புதுமை விலங்கே தவிர உண்மையில் ஒரு மண் புழுவுக்கு உரிய வலிமை தானே உள்ளது! இதை வெளியே சொன்னால் மிகவும் கேவலமாகப் போய் 'பதவி'யும் பறிபோகும். ஆகவே... போய்ப் பார்ப்போம் என்று அசட்டுத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு புறப்பட்டது.

''மகாராஜா! தாங்கள் இந்த உருவில் வந்தால் துஷ்டர்கள் தப்பிப் போய் விடுவார்கள்! ஆகவே தங்கள் எளிய உருவம் எடுத்து வந்தால் அவர்கள் கண்களுக்குத் தெரியாது. கிட்டே போனதும் திடீர் என்று வேறு உருவம் எடுத்து அவர்களை அழித்து விடலாம் அல்லது அவர்கள் உங்களைப் பார்த்து கிலி பிடித்து ஓடினாலும் ஓடி விடலாம்'' என்று யோசனை கூறியது நரி.

நாமும் தப்பிக்க இது உதவும் என்று மனதுக்குள் எண்ணிக் கொண்ட ராஜா சுயஉருவமான மண்புழுவாக மாறிப் புறப்பட்டது.


கரடியார் தந்திரமாக கோழிகள் மறைந்திருந்த புதர் பகுதிக்கு மண் புழுவை அழைத்துச் சென்றது. அருகே சென்றதுதான் தாமதம், 'விக்'கென்று புதரிலிருந்து வெளிவந்த கோழிகள் இரண்டும் பாய்ந்து மண்புழுவைக் கொத்திக் குதறி இரண்டு பங்காக்கி, ஆளுக்கொன்றாக விழுங்கி விட்டன!

காட்டுத் தீ போல் ஒரு நொடியில் புதிய புசியா ராஜாவான மண்புழு கோழிகளால் விழுங்கப்பட்ட செய்தி எல்லா விலங்குகளுக்கும் எட்டியது. கரடியாரின் புத்திசாலித்தனமான நடவடிக்கையால் தங்களுக்குப் புதுவாழ்வு மலர்ந்ததாக எல்லா மிருகங்களும் ஆனந்த மிகுதியால் துள்ளிக் குதித்தன. பின்னர், பழைய ராஜாவான சிங்கத்தை அழைத்து வந்து, காட்டை ஆளும் பொறுப்பை மீண்டும் அதனிடமே ஒப்படைத்தன. அத்துடன் துரோகத்துக்கு துணை போன குள்ள நரியாரைச் சிறையிலிட்டு சித்திரவதை செய்ய வேண்டும் என்றும் எல்லா விலங்குகளும் சிங்க ராஜாவிடம் முறையிட்டன.

''தவறு செய்தவர்களைத் தண்டிப்பதை விட, மன்னிப்பதே மாண்பு தரும். தாங்கள் செய்த தவறை உணர்ந்து அவர்கள் நல்லவர்களாக மாற வழி வகுக்கும். அதனால், குள்ளநரியாரை மன்னித்து, அதை ஒரு வருடத்திற்குக் காடு கடத்தி விட உத்தரவிடுகிறேன்!'' என்று சிங்க ராஜா ஆணை பிறப்பித்தது.

ராஜாவின் தீர்ப்பை அனைவரும் ஏற்றுக் கொண்டு, குள்ளநரியை காடு கடத்தின. இப்போது அந்தக் காடு அமைதிப் பூங்காவாக மாறி விட்டது.

இரத்தம் ஏன் சிவப்பாக இருக்கிறது?



✱ வி. ஸ்ரீராம், திருமங்கலம்.

? இரத்தம் ஏன் சிவப்பாக இருக்கிறது?

! இரத்தத்தில் பல அணுக்கள் உள்ளதை அறிவியல் பாடத்தில் நீ படித்திருக்கிறா யல்லவா? அந்த அணுக்களில் ஒன்று - சிவப்பணுக்கள் (Red Blood Cells). இந்த சிவப்பணுவில் 'ஹீம்' (HAEM) என்ற இரும்புச் சத்துப் புரதம் உள்ளது. இது சிவப்பு நிறமுடையது. 100 மி.லி. இரத்தத்தில் 20 மி.கி. 'ஹீம்' உள்ளது. இத னால்தான் ரத்தம் சிவப்பு நிறமாக இருக்கிறது.

✱ க. முருகேசன், அந்தமான்.

? மனிதருக்கு மனிதர் குரல் வேறுபாடு இருப்பது ஏன்?

! குரல் தரும் ஒலிப்பெட்டியான 'லேரிங்க்ஸ்' (LARYNX) எனும் குரல் வளையின் அளவும் அமைப்பும் மனிதருக்கு மனிதர் வித்தியாசப்படுவதால், குரலில் வேறுபாடு உள்ளது.

✱ ச. மணிவேலன், வெட்டுவாணம்.

? டாக்டர்! நாம் உண்ணும் உணவில் எதிர் பாராமல் உட்செல்லும் சிறு கற்கள் உடம்பில் எந்த பாகத்தில் தங்குகிறது? அதன் விளைவு என்ன?

! பொதுவாக சிறு கற்கள் உணவுடன் சென்றால் அது மலத்தில் வெளியேறி விடும். பெரிய கற்களாக இருந்தால் சிறு குடலிலும், பெருங்குடலிலும் தங்கும். அதுவும் சில நாட்களில் மலத்தில் வெளியேறி விடும். அதிகமான கற்கள் இருந்தால் அவை மொத்தமாக ஒரு கட்டி போல் திரண்டு கொள்ளும். அப்போதுதான் பிரச்னைகள் தலைதூக்கும். வயிற்று வலி, வாந்தி, சாப்பிட இயலாமை, மலச்சிக்கல், வயிற்றுப் போக்கு, வயிற்று அடைப்பு போன்ற தொந்தரவுகள் வரக்கூடும். என்றாலும் பயமில்லை, மணிவேலன்! 'எனிமா' கொடுத்தால் கற்கள் வெளியேறி விடும்.

✱ என். ராஜலட்சுமி, மேலப்பாதி.

? மூளையின் இடது பக்கம் உடம்பின் வலது பக்கத்தையும், வலது பக்க மூளை உடம்பின்

கேட்கட்டுமா டாக்டர்?



டாக்டர் கு. கணேசன்

இடது பக்கத்தையும் இயக்குவதாகக் கூறுகிறார்களே, உண்மையா?

! உண்மைதான், சகோதரி! காரணம் சொல்கிறேன். மூளையின் இடது பக்கத்திலிருந்து கிளம்பும் நரம்புகள் உடம்பில் வலது பக்கம் உள்ள உறுப்புகளுக்கு வருகின்றன. மூளையின் வலது பக்கத்திலிருந்து புறப்படும் நரம்புகள் இடது பக்க உடல் உறுப்புகளுக்கு வந்து சேர்கின்றன. அதனால்தான் அந்தக் கூற்று அறிவியல் ரீதியாகவே உண்மையாகிறது.

✱ ச. முத்துமணி, புதுக்கோட்டை.

? பிறக்கப் போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்று கண்டறிய 'ஸ்கேன்' எடுப்பதின் மூலம் அந்தக் கதிர்களால் குழந்தை பாதிக்கப்படுமா?

என் அக்காவுக்கு இப்படி ஸ்கேன் எடுத்தார்கள். இதனால் பாதிப்பு இருக்கும் என்று பெரியவர்கள் பயப்படுத்துகிறார்கள். இது உண்மையா?

! பாதிக்காது. பிறக்கப் போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்று கண்டறியப் பயன்படும் கருவியின் பெயர் அல்ட்ரா சவுண்டு ஸ்கேனர் (Ultra Sound Scanner). இதில் எக்ஸ் கதிர்கள் (X-RAYS) உற்பத்தியாவதில்லை. கேளா ஒலி அதிர்வு அலைகள் (Ultra Sounds) மட்டுமே உற்பத்தியாகின்றன. இவை உடம்புக்குள் சென்று திரும்பும் போது உடல் உறுப்புகளை வரைபடமாக, அந்தக் கருவியில் இணைக்கப்பட்டுள்ள கம்ப்யூட்டர் திரையில் காண்பிக்கிறது. இந்தக் கேளா ஒலி அதிர்வுகளால் தாய்க்கோ, குழந்தைக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை. பெரியவர்களுக்கு இது பற்றி அதிகமாக தெரியாததால் இப்படி பயப்படுகிறார்கள். அந்தத் தேவையே இல்லை. நீங்களே இதை அவர்களுக்கு கூறித் தெளிவு படுத்தலாம்.

✱ எஸ். நந்தகுமார், தானே.

? இரத்தம் விருத்தி அடைய உதவும் மருந்தின் பெயர் என்ன? அது என்ன வைட்டமின்?

! இரத்தம் விருத்தி அடைய உதவும் மருந்தின் பெயர் 'HAEMATINIC' இது மருந்துக் கடைகளில் பல வியாபாரப் பெயர்களில் கிடைக்கிறது. உதாரணத்திற்கு சில : GLOBAC, HAEMUP, HEPP FORTE, HB RICH. இரத்த விருத்தி மருந்தில் முக்கியமாக இருப்பது இரும்புச்சத்து (IRON). அதனுடன் வைட்டமின் பி-12, ஃபோலிக் அமிலம், ரிபோபிளேவின், தையமின் போன்ற பல வைட்டமின்களைச் சேர்த்திருக்கிறார்கள்.

> கேட்கட்டுமா டாக்டர் பகுதிக்குக் கேள்வி கேட்போர் தங்கள் முழு முகவரியையும் தர வேண்டும். கேட்ட கேள்விகளையே திரும்பத் திரும்பக் கேட்காதீர்கள். ஒரு கடிதத்தில் ஒரு கேள்வியை மட்டும் கேளுங்கள். பதில் அளிக்க இது வசதியாக இருக்கும்.


✱ ஸ்ரீராம்பாபு, இராமச்சந்திரபுரம்.

? நாங்கள் மழை நீரைத்தான் குடிநீராகப் பயன்படுத்துகிறோம். இதனால் பாதிப்பு ஏற்படுமா?

! மழை நீரைக் காய்ச்சிக் குடித்தால் பாதிப்பில்லை பாபு! அப்படியே குடித்தால் சளி, ஜலதோஷம், வயிற்றுப் போக்கு போன்ற உபாதைகள் வரக் கூடும்.

✱ எஸ். நாகராஜன், மேலப்பாதி, மற்றும்




GOKULAM
The monthly magazine for children
Story for Gokulam
AN ISSUE FOR YOUNG WRITERS!
February '94 Issue!
96 PAGES FOR JUST Rs. 3/-
BUY YOURSELF A COPY TODAY!
GOKULAM, EKKADUTHANGAL, MADRAS - 600 097

பேரழகி பத்மினி

கதை : குமரன்

படம் : லலிதா




ஒரு கலைஞன் லக்ஷ்மணசிங்கின் ஓவியம் தீட்டினான்.
அற்புதம்!
என் பரிசு!
வியாபாரிகளும் கலைஞர்களும், வேறு அரச சபைகளுக்குப் போகும்போது...
சித்தூர் கோட்டையைத் தகர்க்கவும் முடியாது; பத்மினியின் அழகை வெல்லவும் முடியாது.
பத்மினியின் அழகு பற்றி மன்னன் அலாவுதீன் கேள்வியுற்று...
நீ நேரில் பார்த்திருக்கிறாயா, ஓவியனே? வரைந்து காட்டுவாயா?
ஓ!
எனக்கு அவர் பரிசு கொடுத்தபோது சில கணங்கள் பார்த்தது. அந்த நினைவில்...
பத்மினியின் ஓவியம் உருவாயிற்று...
ஞாபகத்திலிருந்து வரைந்தேன்! நேரில் இன்னும் அழகாயிருப்பார்!
ஆ!


இந்தப் பேரழகு ஒரு சக்ர-வர்த்திக்கே சொந்தமாக வேண்டும்!
பத்மினியின் உள்ளம் அவர் புற அழகை விட எழிலானது... வணக்கத்துக்குரியது!
வேண்டாம் மன்னா, இது தவறு!
எனக்கா உபதே-சிக்கிறாய்? யார் அங்கே! இந்த தீவியனைச் சிறையில் தள்ளு!
அலாவுத்தீன் பெரும்படையுடன் சித்தூரை அடைந்தான்...
பத்மினியை எனக்கே சொந்தமாக்கிக் கொள்வேன்...
சித்தூர் கோட்டை தாக்கப்பட...
ஒவ்வொரு அம்பும் ஒரு எதிரியை வீழ்த்தட்டும்!
வெற்றி அல்லது வீர மரணம்!


கற்கள் உருண்டன; வெந்நீர் அருவி கொட்டிற்று.
ஆ!!
ஐயோ!
மன்னா! சித்தூர் கோட்டையைத் தாக்கி வெல்லவே முடியாது!
முற்றுகை இடுங்கள்! பட்டினி போட்டுப் பணிய வைப்போம்!
ஆனால் சித்தூரில் நீண்ட காலத்துக்கு உணவு சேமித்து வைக்கப் பட்டிருந்தது...
எல்லோரும் ஒரு வேளை உண்போம். உணவை இரு மடங்கு காலத்துக்கு நீடிக்கச் செய்வோம்...!
அலாவுத்தீன் அலுத்துப் போய்...
தூதனே! நீ சென்று பத்மினியை ஒப்புவித்தால் முற்றுகையைக் கைவிடுவதாகச் சொல்!
பீம்சிங் செய்தி கேட்டுச் சிரித்தான்...
மனைவியை அடகு வைக்கும் அளவுக்கு மானங்கெட்டவனில்லை இந்த பீம்சிங்! போ! போ!!


விடை கேட்டு அல்லாவுதீன் ஆத்திரமடைந்தபோதிலும், தந்திரமாக...
தூதனே! பத்மினியின் பேரழகு பூட்டி வைக்கப் பட வேண்டியதல்ல; பார்த்து ரசிக்க விரும்புகிறான், மாமன்னன் அல்லாவுதீன் என்று போய்ச் சொல்லு!
தூதன் சென்று...
அரசி பத்மினியை அல்லாவுத்தீனிடம் ஒப்புவிக்க வேண்டாம்; பார்க்க அனுமதித்தால் போதும்; முற்றுகை உடனே விலக்கிக் கொள்ளப்படும்!...
பத்மினி சீற்றத்துடன்...
தூதனே! பத்மினி ஒரு காட்சிப் பொருள் அல்ல! ரஜபுத்திரர்கள் மரணத்துக்கு அஞ்சாதவர்கள்! முற்றுகை நீடிக்கட்டும்; கவலை இல்லை!
பெரும் ஏமாற்றமடைந்தான் அல்லாவுத்தீன்!
ஆச்சர்யம்! தன் அழகு பற்றிய கர்வம் கூட அவளுக்கு இல்லையா...! சரி, நீ மறுபடியும் போய்...
தூதன் பீம்சிங்கிடம்...
ராணி பத்மினியை நேரில் பார்க்க முடியாவிட்டால், பிரதி பிம்பத்தையாவது நிலைக் கண்ணாடியில் காண விரும்புகிறார் எங்கள் மன்னர். ரஜபுத்திரரின் விருந்தோம்பலை அனுபவிக்க ஆசைப்படுகிறார்...


தூதனை தாமதிக்கச் செய்து பீம்சிங் மந்திராலோசனை—
பத்மினி! நேசக்கரம் நீட்டும் மன்னனைப் புறக்கணிப்பது பண்பல்லவே!
இது ஏதோ சூழ்ச்சி!
பத்மினியின் மாமன் கோரா, மருமகன் படால்...
சூழ்ச்சி இருந்தால் என்ன? நமக்கு முறியடிக்கத் தெரியாது?
யுத்தத்தை— உயிர்ச் சேதத்தைத் தவிர்க்க முடியுமானால் நல்லது தானே!
பத்மினி அரைமனத்துடன் இணங்க...
அல்லாவுதீன் நிராயுத-பாணியாகத் தனியே வந்தால் வரவேற்கத் தயார். அவன் விருப்பமும் நிறைவேறும்!
அல்லாவுதீன் மகிழ்ந்து...
சபாஷ்! தூதனே இந்தா, பரிசு!
அரசே! தனியே நீங்கள் செல்வதா?
அல்லாவுதீன் ரகசியக் கட்டளையிட்டான்...
ரஜபுத்திரப் பண்பு விருந்தாளிக்குத் தீங்கு இழைக்கத் துணியாது. மேலும்...


அல்லாவுதீன் தன் காவலரை கோட்டைக்கு வெளியே நிறுத்தி...
தனியனாக வருகிறேன்!
ராஜ மரியாதையுடன் வரவேற்கிறேன்!
உபசரிப்பை ஏற்றான்.
சித்தூர் அரசன் லக்ஷ்மண் சிங் சார்பில் நட்பு உடன்படிக்கை கோருகிறேன்!
அளித்தேன்!
அல்லாவுதீனின் விருப்பம் நிறைவேறியது...
ஆகா! நான் கேள்விப் பட்டது குறைவு. இந்தப் பேரழகுக்கு இணை ஏதுமில்லை!
அல்லாவுதீனை வழியனுப்பக் கோட்டை வாசலுக்கு வந்தான் பீம்சிங்...
போய் வாருங்கள் நண்பரே!
வருகிறேன்!
கோட்டை வாசலில் நின்ற அல்லாவுதீனின் மெய்காப்பாளர்கள் கணப்பொழுதில் பாய்ந்து...
அ



ரஜபுத்திரர்கள் இன்னது நடக்கிறது என்று அறியுமுன்...
பத்மினி பயந்தபடியே சூழ்ச்சி நடத்தி விட்டான் அல்லாவுதீன். நம்பிக்கைத் துரோகி!
அல்லாவுதீன் கூடாரத்தில்...
ஹஹ்ஹ ஹா...! தூதனே! பத்மினியைத் தந்தால் பீம்சிங் விடுதலை பெறுவான் என்று போய்ச் சொல்! போர் தொடுத்தால் பலியாகும் முதல் உயிர் பீம்சிங்குடையது!
பத்மினி செய்தி கேட்டுத் துடிக்க, கோராவும், படாலும்...
ஏமாந்தோம்! எங்களைத் தண்டித்து விடு!
உங்களைத் தண்டித்தால் பீம்சிங் திரும்பி வரவா போகிறார்?
கணவனைப் பிரிந்து என்னால் வாழ முடியாது. இதோ புறப்படுகிறேன்!
பத்மினி! யோசித்துப் பார்! ரஜபுத்திரப் பெண்மணிகள் கற்புக்கரசிகள்...
என் கற்புக்குப் பங்கம் நேராது! என் கணவர் சிறை மீண்டதும் இந்த விஷம் அருந்துவேன்! இது செயல்படத் தாமதமானால் இந்தக் கத்தி என் உயிர் குடிக்கும்!


கோராவும் படாவும் யோசனை கூறினர்...
அல்லாவுத்தீனிடம் நீ வரச் சம்மதிப்பதாகவும் ஆனால் அவன் படை-யினரிடம் அவமானப் பட விரும்பவில்லை என்றும்...
...அதனால் படைகள் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்றும் நிபந்தனை போடு!
உன் அந்தஸ்துக்கு ஏற்ப தோழிகள் பலருடன் வருவதாகச் செய்தி அனுப்பு!
உன்னை அடையும் ஆசையில் எதற்கும் சம்மதிப்பான்!
என்ன பயன்?
பயனில்லாமலா? அது தானே நம் ரகசியத் திட்டம்?
தூதனை வரவேற்ற அல்லாவுத்தீன்...
ஹஹ்ஹாஹா! பத்மினி என் வசம்! தூதனே! நிபந்தனையை ஏற்கிறேன். படைகள் பின் வாங்கும். காவலர் மட்டுமே இருப்பர்...!
தூதன் சென்றதும்...
படைகள் விலகி இருக்கட்டும்; ஆனால் வெகுதூரம் சென்று விட வேண்டாம்! பத்மினியுடன் சித்தூர் கோட்டையும் நம் வசப்படும்!
திட்டம் புரிகிறது!


தோழியர் பலருடன் 700 பல்லக்குகளில் புறப்பட்டாள் பத்மினி. பல்லக்குத் தூக்கிகளும் பெண்களே!
அல்லாவுத்தீனை நம்ப முடியாது... எச்சரிக்கை தேவை...
அலாவுத்தீனின் முகாமை அடைந்ததும்...
வருக! பேரழகுப் பெட்டகமே! வருக!
முதலில் என் கணவர் நலமா-யிருக்கிறாரா என்று நேரில் பார்த்து உறுதி செய்து கொள்ள விருப்பம்!
அரைமணி அவ-காசம் தருகிறேன்.
தோழியர் புடைசூழ காவலிலிருந்த கணவரைக் காணச் சென்றாள், பத்மினி.
பத்மினி!
பிரபோ!
திடீரென்று தோழியர் மேலங்கிக-ளைக் களைய...
ஆ! ராஜபுத்திர வீரர்கள்! தப்பி ஓடுங்கள்!


பீம்சிங்கின் விலங்குகள் தகர்க்கப்பட...
பத்மினி! வஞ்சனையை வஞ்சனையால் வென்றாய்! சபாஷ்!
காவலரிடமிருந்து பறிக்கப் பட்ட இரு குதிரைகள் தயார்!
சீக்கிரம்! குதிரை ஏறித் தப்பி, சித்தூர் நோக்கிப் பறக்கலாம்!
நம் வீரர்களைக் கைவிட்டு விட்டா?
அவர்களுக்குத் தலைமை தாங்க கோரா இருக்கிறார். சிறையில் வாடிய நீங்கள் இப்போது போரிடும் நிலையில் இல்லையே! புறப்படுங்கள்!
பத்மினியும் பீம்சிங்கும் சித்தூர் கோட்டை நோக்கி விரைகிறார்கள்.
அலாவுத்தீனுக்கு செய்தி எட்டும் போது...
ரணகளம் தான்!
அவ்வாறே நடந்தது...
பத்மினி! என்னையா ஏமாற்றினாய்? எனக்கும் ஏமாற்றத் தெரியும்! நம் படையினருக்குச் சமிக்ஞை செய்யுங்கள்!



பெரும்படை பாய்ந்து வந்து ராஜ-
புத்திரர்களைத் தாக்க...
பெண் வேடத்தில் பல்-
லக்குகளில் வந்திருந்த
ராஜபுத்திரர்கள், வேஷம்
களைந்து...
வெற்றி அல்லது
வீரமரணம்!
புரவிகள் இல்லாததால், ராஜபுத்திரர்களால்
தாக்குப் பிடிக்க முடியவில்லை.
கோரா வீழ்ந்து
விட்டார்!
திரும்பி ஓடுங்கள் கோட்டைக்கு
அல்லாவுதீன் அட்டகாசமாகச்
சிரித்து...
தோற்று ஓட்டம்
பிடித்தார்கள்!
மன்னா! மன்னிக்க வேண்டும்!
நம் பக்கத்துக்கும் சேதம்
அதிகம்!..
நாமும் திரும்பி விடுவதே
விவேகம்!
பத்மினியை
அடையாமலா...?
சித்தூரை விட்டு
விடவா?
வேறு வழி
இல்லை...!


அக்கால வழக்கப்படி கோராவின் மனைவி...
கணவனைப் பிரிந்து என்னால் வாழ முடியாது. இந்த நெருப்பு என்னை ஏற்றுக் கொண்டு மறு உலகில் என் கணவரிடம் சேர்ப்பிக்கட்டும்...
பத்மினியும் பீம்சிங்கும் மிக வருந்திய போதிலும்...
அல்லாவுத்தீன் திரும்பிப் போய் விட்டான்...
சித்தூருக்கு வந்த பேராபத்து நீங்கியது...
காலம் சென்றது...
பத்மினி! நாடாள்வது எனக்கு அலுப்பைத் தருகிறது. பொறுப்பிலிருந்து விடுபட விரும்புகிறேன்...
பொறுங்கள்! லக்ஷ்மண் சிங்குக்குப் பட்டம் சூட்டும் காலம் நெருங்குகிறது!
அந்த நாளும் வந்திட...
லக்ஷ்மண் சிங்! இனி நீயே நாட்டை முழுப் பொறுப்பேற்று ஆள்வாய்! எனக்கு விடுதலை!
உங்கள் பேருதவி-களை என்றும் மறவேன்!
ஆனால் பீம்சிங் நீண்டகாலம் நிம்மதியாக வாழமுடியவில்லை!
அரசே! ஆபத்து!
என்ன! என்ன?


அல்லாவுத்தீன் தனக்கு ஏற்பட்ட அவமானத்துக்குப் பழிவாங்கப் பெரும் படையுடன் வருகிறான்!
ஆ! நம் உளவுப் படை என்ன செய்து கொண்டிருந்தது? ஏன் முன்பே செய்தி வரவில்லை?
லக்ஷ்மண் சிங், பீம்சிங்கை அணுகி...
மாமா! இந்த இக்கட்டான நிலையில் நீங்கள் தான் உதவ வேண்டும்!
நிச்சயமாக!
மந்திராலோசனை...
உளவுப் படை ஏமாந்தது இருக்கட்டும்; கோட்டை பலமாக உள்ளதா? போதிய உணவுப் பொருள்கள் கைவசம் இருக்கிறதா?
உளவுப் படையை ஊக்குவிக்காதது போலவே இவற்றிலும் கவனக் குறைவாக இருந்து விட்டேன்.
அழிந்தான்!
மேலும் விசாரித்ததில் மந்திரிகள்...
அல்லாவுதீன் முழுப் பலத்துடன் தாக்கினால், கோட்டை இரு தினங்களில் சரிந்து விடும்!
ஒரு வேளை கோட்டை நின்றாலும் எல்லாரும் பட்டினியால் சாக வேண்டியதே!


பீம்சிங் யோசித்து—
வேறு வழியில்லை; நான் கோட்டையை விட்டு ஒரு பகுதி படையுடன் வெளியேறிப் போராடு-கிறேன். முடிந்த வரை அல்லாவு-தீனைத் தாமதப் படுத்துகிறேன்!
... அதற்கிடையில் நீ கோட்டையைப் பலப்படுத்தி, உணவுப் பொருள்களையும் சேமிக்க ஏற்பாடு செய்!
நன்றி, மாமா!
சில நாட்கள் சாகசமாகப் போரிட்டு தாமதப் படுத்தினான் பீம்சிங்...
மால்தேவ் என்ற சிற்றரசன் துரோகியாக மாறி...
மகாராஜ்! இங்கே நீங்கள் தாமதிக்கிறீர்கள்! அங்கே, கோட்டை பலப் படுத்தப் படுகிறது!
என்ன யோசனை?
படையை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதியை என்னுடன் அனுப்-புங்கள். அதோடு எனது சிறு படையையும் இணைத்து, வேறு திக்காகப் போய், சித்தூரை இன்னொரு பக்கத்தில் தாக்குகிறேன்!


கான்! யாரும் சந்தேகிக்காதவாறு காரியம் நடக்கட்டும்!
ஹி... ஹி... சித்தூரை வென்றாலும் என்னைக் கவனித்துக் கொள்ளுங்கள்!
அல்லாவுதீனுடன் உக்கிரமாகப் போரிட்ட பீம்சிங் வீரமரணம் அடைந்தான்!
தொலைந்தான் பீம்சிங்! முன்னேறுங்கள்! கோட்டையைத் தாக்குங்கள்!
இருபுறமும் தாக்கப்பட்ட கோட்டை வீழ்ச்சி அடைய, சித்தூருக்குள் புகுந்த படைகளுடன் லக்ஷ்மண் சிங்கும் ராஜபுத்திரர்களும் வீரத்துடன் போரிட்டு...
ஆ!
ஜெய்! காளி மாதா!
ராணி பத்மினியும், லக்ஷ்மண் சிங் மனைவியும் இன்னும் பல ராஜபுத்திரப் பெண்களும் தீக்குழிகளில் வீழ்ந்து...
எதிரியால் தீண்டப்பட விரும்பாத எங்களை மரணம் அணைக்கட்டும்!
ஏமாற்றமும் ஆங்காரமும் மிக சித்தூரைத் தரைமட்டமாக்கிய அல்லாவுதீன்...
மால்தேவ்! இனி சித்தூர் உனக்கே! போய் வருகிறேன்! ஹ... ஹ்... ஹா!
ஆம்! என் துரோகத்துக்குச் சரியான பரிசுதான்!



அழகியின் அட்டிகை

8. புதிய செய்திகள்

பொன்னுசாமி அன்பு இல்லத்திற்கு வரும்போதே வழியில் தீபனை ஏற இறங்கப் பார்த்து விட்டுத்தான் வந்தார். அபிராமி வணக்கம் கூறியதும், அபிராமியின் கன்னத்தைச் செல்லமாகத் தட்டி, ''வணக்கம்மா. நல்லாயிரு நல்லாயிரு சக்கரவர்த்தி ஐயா இருக்காரா?'' என்று கேட்டுக் கொண்டே நடந்தார்.

''உள்ளேதான் இருக்கிறார் ஐயா!'' என்று பணிவாகப் பதில் சொன்னாள் அபிராமி.

''அப்படியா? சரி'' என்று சொல்லிக் கொண்டே சக்கரவர்த்தியின் அறைக்குள் சென்றார் பொன்னுசாமி.

''வாங்க... வாங்க. என்ன திடீர்னு?'' - சக்கரவர்த்தி கேட்டார்.

''எல்லாப் பிள்ளைகளுக்கும் சீருடைக்குத்துணி எடுக்கணுமே? அது விஷயமாத்தான் பேசலாம்னு வந்தேன்'' என்று சொல்லிக் கொண்டே வந்த பொன்னுசாமி சக்ரவர்த்தியின் மேஜை மேலிருந்த நகைப் பெட்டியைப் பார்த்துவிட்டு, ''என்ன இது! நகைப் பெட்டி மாதிரி இருக்கே?'' என்று ஆவலுடன் கேட்டார்.

''இது நகைப் பெட்டியேதான். நம்ம அபிராமிக்குச் சேர வேண்டியதுன்னு தீபன்கறவர் கொண்டு வந்து கொடுத்தார்.''

''நான் வரும் போது, எதிரிலே ஓர் ஜிப்பா மனிதர் தோள்லே பை ஒன்னை மாட்டிக் கொண்டு போனாரே? அபிராமி கூட வழியனுப்பிச்சுதே? அவரா? அவர் எப்படி அபிராமிக்கு...?''

''அபிராமிக்குப் பாதுகாவலர் என்று அவர் போலீஸிலே எழுதிக் கொடுத்ததாலே, அபிராமி வீட்டிலே கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களிலே இந்த நகைப் பெட்டி கிடைச்சதுன்னு போலீஸ் கொடுத்திருக்காங்க. அதை அபிராமியிடம் சேர்த்திடுங்கன்னு கொடுத்து விட்டுப் போனார்'' என்று சொன்னார் சக்கரவர்த்தி.

''நகைப் பெட்டியிலே நகை இருக்கா? அதைப் பார்த்தீங்களா?'' என்று கிண்டலாகக் கேட்டார் பொன்னுசாமி.

''என்ன அப்படிக் கேட்டுட்டீங்க! இதோ பாருங்க, நவரத்னக் கற்கள் பதிச்ச அட்டிகை'' என்று நகைப்

கூத்தபிரான்

பெட்டியைத் திறந்து காண்பித்தார் சக்ரவர்த்தி.

பொன்னுசாமி அசந்து போனார். அட்டிகையின் வேலைப்பாடும் அமைப்பும் அவரை அயரவைத்தன! அவர் கண்களையே அவரால் நம்ப முடியவில்லை! அட்டிகையைக் கையில் எடுத்து, "பழங் காலத்து அட்டிகை மாதிரியில்ல இருக்குது! என்ன வேலைப்பாடு! எப்படி ஜொலிக்குது!" என்று அப்படியும் இப்படியுமாகப் பலமுறை புரட்டிப் பார்த்துக் கொண்டே இருந்தார்.

"தெய்வாம்சம் பொருந்தியதா, விலைமதிக்க முடியாததாத்தான் தோணுது. இதைப் பத்திரமாகக் காப்பாற்றி, சரியான நேரம் வரும் போது அபிராமிகிட்டே கொடுக்கிற வரைக்கும் பெரிய பொறுப்பு!" என்று கூறிய சக்கரவர்த்தி, "பிள்ளைகளுக்குச் சீருடை எடுக்கிற விஷயமா பேசணும்னு சொன்னீங்களே...?" என்று பொன்னுசாமிக்கு, அவர் வந்த விஷயத்தை ஞாபகப்படுத்தினார்.

"ஆமாம், ஆமாம். எடுக்கணும், தைக்கக் கொடுக்கணும். நேரா மில்லுக்கே போயி மொத்தமா எடுத்தா விலையைக் கொஞ்சம் குறைப்பாங்க!" என்று சொன்ன பொன்னுசாமி, அட்டிகையை மீண்டும் மீண்டும் திருப்பித் திருப்பிப் பார்த்தார். பிறகு, பெட்டியிலே வைத்து மூடி "பத்திரம் பத்திரம்; பாங்க் லாக்கர்லே வைச்சு கவனமாப் பூட்டுங்க" என்று கூறிவிட்டு எழுந்தார். பிறகு, ஏதோ திடீரென்று நினைவு வந்தது போல, "ஆமாம், அபிராமிக்கு அட்டிகை விஷயம் தெரியுமா?" என்று கேட்டார்.

"தெரியும். நீபனே சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன். ஆனா, அபிராமி அட்டிகையை இன்னும் பார்க்கலே" என்று சொன்னார் சக்கரவர்த்தி.

"முதல்ல அபிராமியைக் கூப்பிட்டு அதோட அட்டிகையைக் காட்டுங்க. சந்தோஷப்படும்" என்று கூறிவிட்டுக் கிளம்பினார் பொன்னுசாமி.

"சீருடைக்குத் துணிமணிகள் எடுக்கிற விஷயம்?"



"அப்புறம் பார்த்துக்கலாம்" என்று என்னவோ போலப் புறப்பட்டார் பொன்னுசாமி.

வெளியே பொன்னுசாமியைப் பார்த்துப் பேச வேண்டும் என்றே அபிராமி காத்திருந்தாள்.

அவரைக் கண்டதும், "ஐயா, ஒரு நிமிஷம்" என்று வணங்கினாள். ஆனால், அவளைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் பொன்னுசாமி வேகமாக நடந்தார்.

பொன்னுசாமியின் போக்கு அபிராமிக்குப் புதுமையாகப் பட்டது. இருந்தாலும் வேகமாகப் பின்தொடர்ந்து, "ஐயா! உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்" என்று சற்று உரக்கவே சொன்னாள்.

ஆனால், பொன்னுசாமி அவளுடைய வேண்டுகோளைக் காதில் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லை. பேசாமல் போனார்.

"கும்பகர்ணனின் நல்ல குணம் எது?"

"யார் சொல்லையும் காதில் வாங்காது அசந்து தூங்குவது"

– காழி. ஆர். சேதாராமன்

"லிட்டர் படில அளந்து தந்தா எதுவும் வாங்கக் கூடாதுடா?"

"ஏண்டா?"

"லிட்டர் படின்னா, தலையைத் தட்டித்தான் தருவாங்களாம்!"

- சீர்காழி. வி. ரேவதி

இதைக் கவனித்துக் கொண்டிருந்த சக்கரவர்த்தி, "என்னம்மா?" என்று கேட்டார்.

"பொன்னுசாமி ஐயாவிடம் கொஞ்சம் பேசணும்னு கேட்டுப் பார்த்தேன். ஆனா, அவர் பதிலே சொல்லாம போயிட்டாங்க ஐயா" என்று அபிராமி வருத்தப்பட்டுக் கொண்டே சொன்னாள்.

"அவருக்கு ஏதாவது அவசர வேலையாயிருக்கும்."

"இல்லீங்கய்யா. எத்தனை வேலையிருந்தாலும், என்னைக் கண்டா வழக்கமா அவரே கூப்பிட்டுப் பேசுவாரு. இப்ப நானா கேட்டுக்கிட்டும் கூட, இப்படிப் பாராமுகமா போறார்னா மனசு கேட்க மாட்டேங்குது" என்று மனவேதனைப்பட்டாள் அபிராமி.

"என்னோட ரொம்ப முக்கியமான விஷயம் பேசணும்னுதான் வந்தாரு. ஆனா, பேசிக்கிட்டே இருந்தவர் அப்புறம் பார்க்கலாம்னு சொல்லி, திடீர்ன்னு புறப்பட்டுப் போயிட்டார். நமக்கு ஒரு கவலைதான். ஆனால், அவருக்கு ஆயிரம் கவலைகள், பொறுப்புகள். இதைவிட முக்கியமானது ஏதாவது சட்டென்று நினைவுக்கு வந்திருக்கும் அதுக்காக நாம் வருத்தப்பட முடியுமா? தப்பா நினைக்க முடியுமா?" என்று கேட்டார் சக்கரவர்த்தி.

"வரும் போது கூட என் கன்னத்திலே செல்லமாத் தட்டி, 'நல்லாயிருக்கியா'ன்னு கேட்டாரே!"

"பின்னே என்ன, உன் மேலே கோபமோ வெறுப்பா இருந்தா அப்படிச் செய்வாரா?"

"வரும் போது சரியாயிருந்த அவர் மனசு, திரும்பிப் போகும் போது அதே மாதிரியில்லையேன்னுதான் யோசிக்கிறேன்" என்று அபிராமி தன் மனத்தில் பட்டதைச் 'சட்'டென்று சொன்னாள்.


"அது போகட்டும். நீ பனையைப் பார்த்தியே, என்ன சொன்னார்?" என்று பேச்சை வேறு திசைக்குக் கொண்டு வந்தார் சக்கரவர்த்தி.

"பேசினேனய்யா. அவர் எவ்வளவு நல்லவர்! சுற்றுலா சென்று திரும்பிய அன்னிக்கு அவர் மட்டும் எனக்கு ஆதரவு தர முன்வரலேன்னா நான் என்னாவாயிருப்பேனோ?" என்று தன் பழங்கதை நினைவுக்கு வரக் கலங்கினாள் அபிராமி.

"உங்க வீட்டிலே கொள்ளையடிக்கக் கிட்டுப் போன பொருட்களிலே, ஒரே ஒரு நகை மட்டும் கிடைச்சதுன்னு கொண்டு வந்து கொடுத்துட்டுப் போயிருக்கார். அதை நீ பார்க்க வேண்டாமா?" என்று கேட்டார் சக்கரவர்த்தி.

"வேண்டாம் ஐயா! எதுவாயிருந்தாலும் உங்ககிட்டேயே பத்திரமா இருக்கட்டும். அதைப் பார்த்தா என் மனது தாங்காது. என் அப்பா, அம்மாவுக்கு நான் ஒரே பொண்ணா, செல்லமா வாழ்ந்தது எல்லாம் ஒவ்வொண்ணா, நினைவுக்கு வந்து என்னைச் சங்கடப்படுத்தும்."

"அதுக்கில்லே அபிராமி! அது உங்க வீட்டு நகைதானான்னு நீ பார்க்க வேண்டாமா? அதுக்காகச் சொல்றேன். என்



னோடு வா. நீபன் என்னிடம் கொடுத்திருக்கும் நகைப் பெட்டியிலே இருக்கிற நகையைப் பாரு'' என்று அபிராமியை அழைத்துக் கொண்டு தன் அறைக்குள் போனார் சக்கரவர்த்தி. மேஜை மேலிருந்த நகைப் பெட்டியை எடுத்து அபிராமியிடம் கொடுத்தார்.

அபிராமி நகைப் பெட்டியைத் திறந்து பார்த்தாள். ''ஆ! அட்டிகை! நவரத்தின அட்டிகை! ஐயா, இது எங்க நகையேதான். எங்கப்பாவும், அம்மாவும் இந்த அட்டிகையை எவ்வளவு பத்திரமா பயபக்தியோடு பாதுகாத்து வந்தாங்க தெரியுமா? இந்த அட்டிகைக்கு எங்க வீட்டிலே ஆடி வெள்ளி, தை வெள்ளிக் கிழமை நாட்களிலே சாமிக்கு பூஜை செய்யற மாதிரியே பயபக்தியோட செய்வாங்க. நான் பாத்திருக்கேன்'' என்றாள்.

''அப்படியா!''

''ஆமாம் ஐயா. ரொம்ப விசேஷமா நடக்கும்! ஏன்? எதுக்குன்னு எனக்குத் தெரியாது. ஒரு சமயம் இந்த அட்டிகையை நான் கழுத்திலே போட்டுக்கணும்னு ஆசையா கேட்டேன். அதுக்கு எங்கப்பா, 'இது வேண்டாம்மா. இதே மாதிரி வேற வாங்கித் தரேன் போட்டுக்க. இது நம்ம குலதெய்வம் மாதிரி. கண்ணிலே ஒத்திக்கணும். பூஜைக்குரிய பொருள்' என்று மட்டும் சொன்னார்!''

''அப்படியா!''

''ஆமாமய்யா. அதோட இதை நான், அவர் காலத்துக்குப் பிறகும் பத்திரமா பாதுகாத்து வரணும்னும் சொன்னாரு. 'எதுக்கு'ன்னு கேட்டேன். 'காலம் வரும் போது சொல்றேன்'னு சொன்னார். ஆனால், காலம் வரவில்லை. காலன்தான் வந்தான். எதுவும் சொல்லாமலேயே போயிட்டார்'' என்று கண் கலங்கச் சொன்னாள் அபிராமி.

''மற்ற நகைகளெல்லாம் கிடைக்காமல் போய், இது ஒன்று மட்டும் குறிப்பாக் கிடைச்சிருக்கே! அதை நினைத்து நீ மகிழ்ச்சியடையணும்மா. உங்க அப்பாவே உன்னைப் பாதுகாக்க வந்திருக்கிறார்னு எண்ணி மனதைத் தேற்றிக்கம்மா'' என்றார் சக்கரவர்த்தி.

''இதை இப்போதைக்கு நீங்களே வைச்சுக்குங்க. இந்த அட்டிகையை இப்ப வெச்சுக்கிட்டு நான் என்ன செய்யப் போறேன்?'' என்றாள் அபிராமி.

''உங்கப்பா, அம்மா மாதிரி நீயும் இதைப் பூஜை செய்து வழிபடலாமில்லையா?''

''அதுக்கு இன்னும் காலம் வரவில்லை ஐயா. அதுவரை உங்களிடமே இருக்கட்டும்.''

''அதுவும் சரிதான்'' என்று பேச்சை முடித்த சகரவர்த்தி, ''அபிராமி, விடுதியிலே இருக்கிற பெண் குழந்தைங்களுக்குப் பாவாடை, மேல் சட்டைக்குப் பெயர் எழுதி, சரியான அளவு குறித்துக் கொடுக்கணும். அதே போல விவேகானந்தன், கணபதிகிட்டேயும் சொல்லி



அவங்க விடுதிப் பையன்களுக்கும், நிஜார், மேல் சட்டைக்குச் சரியான அளவு எடுத்துக் கொடுக்கச் சொல்லுங்க. உடனே இதைக் கவனியுங்க'' என்றார்.

''சரி ஐயா'' என்று தலையாட்டி விட்டுப் புறப்பட்டாள் அபிராமி.

விடுதியை நெருங்கியவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. செந்தில், செண்பகத்தை ஒரு பெரிய கூட்டம் குண்டுக் கட்டாகத் தூக்கிச் செல்லத் தயாராக வந்திருந்தது!

''மருவாதையா வீட்டுக்கு வந்திடுங்க. நீங்க படிச்சது போதும். அலையாம சோறு தண்ணி கிடைக்குதுன்னு வந்து புகுந்துகிட்டீங்களா?'' என்று கூச்சலிட்டான் மாரிமுத்து. அவன் உரிமையோடுசத்தம்போட்டதிலிருந்தே அவன் தான் செந்தில், செண்பகம் ஆகியோரின் அப்பா என்பது புரிந்தது அபிராமிக்கு.

''நாங்க இனிமே ஊட்டுக்கே வர மாட்டோம். இங்கேதான் இருந்து நல்லா படிச்சு முன்னுக்கு வரப் போறோம். அதான் அன்னிக்கே கண்டிஷனா சொல்லிப் புட்டோமில்லே? அப்புறம் வந்து ஏன் வம்பு கொடுக்கிறே?'' என்று செந்திலும், செண்பகமும் அழுத படி கேட்டார்கள்.

''அப்படிச் சொல்லிட்டா விட்டுட்டுப் போடுவோமா? பொல்லாத படிப்பு. நீங்க படிக்கலேன்னு இப்போ யாரு அழு தாங்க?''

''நான் அழறேன். எங்களை மாதிரி வயசுப் பிள்ளைங்க படிக்காமே, படிப்பு வாசனையே அறியாமே மாடுங்க மாதிரி இருக்கிறது சகிக்காமே நான் அழறேன்''



என்று அவர்கள் முன்னே வந்து நின்றாள் அபிராமி.

''இவங்களைப் படிக்க விடாம ஏன் தடுக்கறீங்க?''

''இவங்க படிச்சு என்னாகப் போவுது?''

''எழுதப் படிக்கக் கத்துக்கிட்டா அவங்களுக்கும் நல்லது. நம்ம நாட்டுக்கும் நல்லது.''

''நல்லது கெட்டது எதுங்கறதை எங்களுக்கு நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம்'' என்று கடுகடுத்த மாரிமுத்து, ''டேய்! என்னடா பார்த்துக்கிட்டு பேசாமே நிக்கிறீங்க? ரெண்டு பேரையும் குண்டுக் கட்டாத் தூக்குங்கடா!'' என்று ஆவேசம் வந்தவனைப் போலக் கத்தினான்.

இந்தச் சமயத்தில் செண்பகம், ''இவங்ககிட்டே என்னா பேச்சு? நீங்க போலீஸைக் கூப்பிடுங்க! அப்புறம் என்ன நடக்குதுன்னு பார்க்கலாம்'' என்று சொல்ல, உடனேயே எங்கிருந்தோ போலீஸ் விசில் சத்தம் ஒலித்தது!

அவ்வளவுதான்! மாரிமுத்து கோஷ்டி மாயமாய் ஓடி மறைந்து விட்டது!

அபிராமிக்கு எதுவும் புரியவில்லை! விழித்தாள். 'போலீஸ்னு சொன்னதும் ஏன் இப்படி எல்லாரும் ஓடிட்டாங்க! போலீஸ் விசில் சத்தம் வேற கேட்டுதே! போலீஸ் வந்திருக்குதா?' என்று அவள் குழம்பினாள்.

''அபிராமி அக்கா, என்ன இப்படிப் பார்க்கிறே? இதெல்லாம் நாங்க ஏற்கெனவே பேசி வெச்சு நடத்திய நாடகம் தான். எங்கப்பாருக்குப் போலீஸ்னாலே பயம்! அவரு இங்கே வந்து எங்களை இட்டுக்கினு போக ஏதாவது வம்பு, தும்பு, கலாட்டா செய்வாருன்னு நினைச்சேன்! அதுனால போலீஸ்னு சொல்லி மிரட்டவும், அதுக்கு ஏத்தாப் போல விசில் ஊதவும் குயிலுதான் ஏற்பாடு செஞ்சுது'' என்று சிரித்தபடி செண்பகம் கூறினாள்.

''ஆமாம், அபிராமி. இதோ பாரு ஸ்கவுட் விசில்'' என்று குயில் மீண்டும் ஊதிக் காண்பிக்க, அபிராமி அவளையும் அறியாமல் வாய் விட்டு நெடுநாட்களுக்குப் பிறகு சிரித்தாள். குலுங்க குலுங்கச் சிரித்தாள்.

அந்தச் சமயத்தில் பொன்னுசாமி வீட்டு வேலையாள் வந்து, சக்கரவர்த்தியை அழைத்துக் கொண்டு போனான். காரணம் இன்றி அபிராமி கலங்கினாள். ஏதோ தீங்கு வரப் போகிறது என்று அவளுடைய உள்ளுணர்வு எச்சரித்தது!


(தொடரும்)

பாராட்டுகிறோம்!


குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவினால் பண்படுத்தப்பட்டு தயாரான எண்ணற்ற சீடர்களுள், முதல் வரிசையில் இருக்கும் சிறப்பைப் பெற்றவர் கவிஞர். செல்ல கணபதி. கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர். கணபதி, கவிஞர் மட்டுமல்ல; பண்பட்ட குழந்தை எழுத்தாளர்; நாடக ஆசிரியர் எல்லாம். சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்காக ஆண்டுதோறும் இவர் அளித்து வருவதுதான் குழந்தை எழுத்தாளர் சங்க சார்பில் வழங்கப்படும் ''செல்லப்பன் பரிசு''. பல பரிசுகளையும், பாராட்டையும் பெற்றிருந்தாலும் ஆரவாரமில்லாமல் சிறுவர் இலக்கியத் தொண்டாற்றி வரும் இவரது தொண்டினைப் பாராட்டும் வகையில் கோவை வடக்கு லயன்ஸ் கிளப் இவருக்கு அண்மையில் ''சிறுவர் இலக்கிய மாமணி'' என்ற பட்டத்தை அளித்துப் பெருமை தேடிக் கொண்டது. ''சிறுவர் இலக்கிய மாமணி''யையும், பாராட்டத்தக்க செயலைச் செய்துள்ள கோவை வடக்கு லயன்ஸ் கிளப்பையும் குறிப்பாக அதன் தலைவர் பூவண்ணனையும் பாராட்டுகிறோம்.



எந்த விலங்கு எதை உண்ணும்?



நகைச்சுவைப் போட்டியில் பரிசு பெற்றவை



முதலில் நாம் இந்தியர்!



மு.சாயபு மரைக்காயர்

காட்சி - 1

(அமுதாவின் இல்லம். மீனாட்சி அம்மாள், அமுதா, மதர் மார்க்கரெட்)

அமுதா : அம்மா! நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வரேன்.

மீனாட்சி அம்மாள் : அமுதா! காலையிலிருந்து நானும் உன்னைக் கவனிச்சுக்கிட்டு இருக்கேன். சீக்கிரமா குளிச்சுட்டு, ஏதோ பண்டிகைக்கு உடுத்துற மாதிரி புத்தாடை உடுத்திக்கிட்டு எங்கே புறப்படுறே?

அமுதா : இன்னைக்குப் பக்ரீத் பண்டிகைம்மா! என் தோழி ஆயிஷாவுக்கு வாழ்த்து சொல்றதுக்காக அவங்க வீட்டுக்குப் போறேன். உடனே வந்திடுவேன்.

மீனாட்சி : நில்லுடி! நீ அங்கே எல்லாம் போகக் கூடாது!

அமுதா : என்னம்மா சொல்றே நீ? நானும் ஆயிஷாவும் ஒரே வகுப்பில் படிக்கிறவங்க மட்டுமில்லே! என்னுடைய உயிர்த் தோழியே அவதான்! நம்ம வீட்டிலே பொங்கல், தீபாவளி கொண்டாடும்போதெல்லாம் ஆயிஷாதான் நமக்கு முதல் வாழ்த்து சொல்லுவாள். நம்முடைய மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வாள். அப்படிப்பட்ட ஆயிஷாவின் வீட்டில் இன்றைக்குப் பெருநாள்! நான் போய் வாழ்த்த வேண்டாமா? நான் போகலேன்னா ஆயிஷா வருத்தப்படுவாள். நல்ல நாளும் அதுவுமா அவள் கவலைப் படலாமா? என்னைப் போக விடும்மா!

மீனாட்சி : நீ சொல்றதெல்லாம் உண்மைதான்! ஆனால் அந்தக் காலம் மாறிப் போச்சு! இப்போ அவங்க எல்லாம் நமக்கு எதிரிங்க! யாரோ சிலர் செய்த தப்பாலே இப்ப இந்த ஊரே இரண்டாகிப் போச்சு! எந்த நேரத்திலே பெரிய கலவரம் வருமோன்னு பயமா இருக்கு! அதனாலதான் சொல்றேன்... இப்ப நீ அவங்க தெரு பக்கம் போக வேண்டாம்.

மதர் மார்க்கரெட் : (வந்து கொண்டே) என்ன மீனாட்சியம்மா, சௌக்கியமா? அமுதாவை எங்கே போக வேண்டாம்னு தடுக்கிறீங்க?

மீனாட்சி : (வியப்புடன்) அடடே! வாங்க மதர் உள்ளே வாங்க! உட்காருங்க! உங்களைப் பார்த்து எவ்வளவு நாளாச்சு! நல்லா இருக்கீங்களா?

மார்க்கரெட் : கர்த்தர் அருளாலே எனக்கொரு குறைச்சலும் இல்லே! இந்தக் கோடை விடுமுறையிலே கல்கத்தாவுக்குப் போயிருந்தேன். மதர் தெரசாவின் ஆசிரமத்திலே தங்கி, என்னால முடிந்த சேவையைச் செய்து விட்டு மன அமைதியோடும், மகிழ்ச்சியோடும் திரும்பினேன். இங்கே வந்த பிறகுதான் நம்ம ஊரிலே நடந்த, விரும்பத்தகாத விஷயங்களைக் கேள்விப்பட்

டேன். மனசுக்கு கவலையா இருக் கும்மா!

அமுதா : ஆமாம் மதர்! நீங்க ஊரில் இல்லாத நேரத்திலே நடக்கக் கூடாத தெல்லாம் நடந்து போச்சு! இரண்டு பக்க மும் மனம் விட்டுப் பேசி, அமைதியை ஏற்படுத்துறதுக்குப் பெரியவங்க யாரும் முயற்சி பண்ணலே! ஒருத்தரை ஒருத்தர் எதிரியாகவே பார்க்கிறாங்க!

மார்க்கரெட் : நம்ம ஊரா இப்படி மாறிப் போச்சுன்னு எனக்கே ஆச் சரியமா இருக்கும்மா! இந்து, முஸ்லிம், கிறிஸ்தவங்கன்னு வேறுபாடு இல்லாம ஒரு தாய் மக்கள் போல, பாசத்தோடும் நேசத்தோடும் பழகின நம்ம ஜனங்களா மாறிப் போயிட்டாங்க? கர்த்தரே இது என்ன சோதனை?

மீனாட்சி : சோதனைதான் மதர்! இப்படி ஊரே இரண்டுபட்டுக் கிடக்கும் போது, ஆயிஷா வீட்டுக்குப் போவேன்னு இவ அடம் பிடிக்கிறாள். நீங்களாவது போகக் கூடாதுன்னு இவ ளுக்குப் புத்தி சொல்லுங்க மதர்!

மார்க்கரெட் : நீங்க சொல்றது தப் பும்மா! இரண்டு பக்கத்திலேயும் யாரோ சிலர் செய்த தப்புக்காக, ஒரு ஊரே பிளவு பட்டு நிக்கிறது என்ன நியாயம்? உங் களை மாதிரி பெரியவங்களே பேதம் பேசினால் ஒற்றுமை எப்படி வரும்? அமுதாவும், ஆயிஷாவும் உயிருக்குயிரா பழகுறது உங்களுக்குத் தெரியாததா? அந்தப் பிஞ்சுகள் நெஞ்சிலே நஞ்சை விதைக்காதீங்க... அவங்க நட்பைக் கெடுக்காதீங்க!

மீனாட்சி : இப்ப என்னை என்ன செய்யச் சொல்றீங்க மதர்?

மார்க்கரெட் : அமுதாவைத் தடுக் காதீங்க! அவள் ஆயிஷா வீட்டுக்குப் போய் வரட்டும். பக்ரீத் வாழ்த்து சொல்ல நானே அவளை ஆயிஷா வீட் டுக்கு அழைச்சுட்டுப் போறேன்.

அமுதா : *(மகிழ்ச்சியுடன்)* உங்க ளுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியலே மதர்!

மார்க்கரெட் : ஆண்டவன் உங்க ளைக் காக்கட்டும். அப்போ நானும் அமுதாவும் ஆயிஷா வீட்டுக்குப் போயிட்டு வர்றோம், மீனாட்சியம்மா!

மீனாட்சி : உங்க இஷ்டப்படியே செய்யுங்க மதர்!

(மதர் மார்க்கரெட்டும், அமுதாவும் செல்கிறார்கள்)



காட்சி - 2

(ஆயிஷாவின் இல்லம். ஆயிஷா, கதீஜா, அமுதா, மதர் மார்க்கரெட். வானொலியில் இஸ்லாமியப் பக்திப் பாடல் ஒலித்துக் கொண்டிருக்கிறது.)

கதீஜா : *(தொழுகை முடித்து விட்டு வரும் தன் மகள் ஆயிஷாவை உச்சிமோந்து)* ஈத் முபாரக் ஆயிஷா!

இந்த உடை உனக்கு எவ்வளவு அழகா இருக்குது! என் கண்ணே பட்டுவிடும் போலிருக்கு! அது சரி ஆயிஷா...! பெருநாள் தொழுகையை முடிச்சுட்டு அல்லா



விடம் நீ என்ன வேண்டிக்கிட்டே?

ஆயிஷா : நம்ம வீட்டிலே மட்டும் இல்லாமல் இந்த நாட்டிலே வாழற எல்லாரையும் ஒற்றுமையா, மகிழ்ச்சியா வாழச் செய் அல்லா அப்படீன்னு வேண்டிக்கிட்டேன் அம்மா! ஆனாலும் மனசுக் குள் ஒரு குறை...

கதீஜா : என்னம்மா?

ஆயிஷா : எல்லாப் பெருநாளுக்கும் என் தோழி அமுதா, ஒருநாள் முன்னாடியே நம்ம வீட்டுக்கு வந்துடுவாள்! ஆனால் இந்த வருடம் அவள் ஏனோ வரலே! மனசுக்குக் கஷ்டமா இருக்கு! அதனாலே இந்த இனிப்பையெல்லாம் எடுத்துக்கிட்டு, நானே அமுதா வீட்டுக்குப் போயிட்டு வந்துடலாம்னு நினைக்கிறேன்.

கதீஜா : நீ அங்கே எல்லாம் போகக் கூடாது ஆயிஷா! பள்ளிவாசலுக்குப் போயிருக்கிற உன் வாப்பா இன்னும் கொஞ்ச நேரத்திலே தொழுதிட்டு வந்திடுவாங்க! நீ அமுதா வீட்டுக்குப் போயிருக்கிற செய்தி தெரிந்தால், உன் மேலே கோபிப்பாங்க! பெருநாளும் அதுவுமா உன் வாப்பா கோபத்துக்கு ஆளாகாதே!

ஆயிஷா : அமுதாவும் எனக்கு ஒரு மகள் மாதிரின்னு சொல்லுவிங்களேம்மா? நீங்களா என்னைத் தடுக்கிறீங்க? கொஞ்சம் நினைச்சுப் பாருங்கம்மா! ரமலான் மாதத்திலே அமுதாவும் என்னோடு சேர்ந்து எத்தனையோ முறை நோன்பு பிடித்திருக்கிறாள். அவளுடைய பாசத்தையும், நட்பையும் நீங்களே பலமுறை பாராட்டி இருக்கீங்க! நம்ம குடும்பத்தில் ஒருத்தியா பழகின அவளுக்கு நான் இனிப்பு கொடுப்பது தப்பா?

கதீஜா : தப்பில்லே ஆயிஷா! ஆனால், பெரியவங்களே பிரிந்து விட்ட பிறகு, உங்களுக்குள்ளே என்ன உறவு வேண்டிக்கிடக்கு? அதனாலதான் சொல்றேன்... அமுதா வீட்டுக்கு நீ போகக் கூடாது!

ஆயிஷா : என்னை மன்னிச்சிடுங்க அம்மா. உங்களுடைய கோபத்துக்கு ஆளாவதைப் பற்றி எனக்கு வருத்தம் தான். எல்லாரையும் நேசிக்கச் சொல்கிற அல்லாவுக்கு என் செயல் பிடிக்கும்னு நம்புறேன். இந்த இனிப்போடு அமுதா வீட்டுக்குப் போயிட்டு வர்றேன்.

(போகிறாள். மதர்மார்க்கரெட்டும், அமுதாவும் எதிரே, வீட்டுக்குள் வருகிறார்கள். வீதியில் கூச்சலும் குழப்பமும் சத்தம் கேட்கிறது.)

கதீஜா : மதரா! உள்ளே வாங்க மதர்! அட அமுதா கூட! வா அமுதா!

மார்க்கரெட் : அன்புக் குழந்தைகளே. ஈத் முபாரக்.

அமுதா : ஈத் முபாரக் ஆயிஷா!

(அமுதாவும் ஆயிஷாவும் கட்டித் தழுவிக் கொள்கின்றனர்)

கதீஜா : (பதட்டத்துடன்) ஆ...! என்ன மதர் இது? உங்க நெற்றியிலே காயம்? அமுதா தலையிலிருந்தும் இரத்தம் கொட்டுதே!

ஆயிஷா : (அதிர்ச்சியுடன்) அமுதா! என்னடி இது?

மார்க்கரெட் : பதட்டப்படாதீங்க! எங்களுக்கு ஒன்னுமில்லே! உங்களுக்கெல்லாம் பக்ரீத் வாழ்த்து சொல்றதுக்காக நாங்க வந்துகிட்டிருந்தோம். வர வழியிலே இரண்டு கோஷ்டிகளுக்கு இடையிலே சண்டை நடந்துக்கிட்டிருந்தது! அவங்க வீசின கற்கள் எங்க தலையிலே பட்டது. அதிலே ஏற்பட்ட காயந்தான்...

கதீஜா : மதர்! இந்த மருந்தைக் காயத்திலே போடுங்க...! அமுதா நீயும் போட்டுக்கம்மா!

(அமுதா மயங்கி விழுகிறாள்)

ஆயிஷா : அமுதா...! அல்லாஹ், நான் என்ன செய்வேன்? அமுதா மயங்கி விழுந்துட்டாளே?

மார்க்கரெட் : கவலைப்படாதேம்மா! கர்த்தர் காப்பாற்றுவார்! இப்ப உடனடியா ஆஸ்பத்திரிக்குப் போகணும்!

கதீஜா : மதர்! அதோ...! ஆயிஷாவுடைய அப்பாவும் வந்துட்டாங்க! நம்ம காரிலேயே ஆஸ்பத்திரிக்குப் போயிடலாம்.

(அமுதாவைத் தூக்கிக் கொண்டு, எல்லாரும் காரில் மருத்துவமனைக்குப் போகின்றனர்)

காட்சி - 3

(ஊர் மன்றம். தியாகி கண்ணப்பா, டாக்டர் அப்துல் காதர், மதர் மார்க்கரெட் மற்றும் பலர்)

கண்ணப்பா : அனைத்து மதங்களையும் சார்ந்த என் அருமைப் பொது மக்களே! அனைவருக்கும் என் வணக்கம். கடந்த சில நாட்களாக நம் ஊரில் நடந்த கசப்பான சம்பவங்கள் இந்திய ஒருமைப்பாட்டில் அக்கறை கொண்ட எல்லாருக்கும் மனவேதனையைத் தந்துள்ளன. பக்ரீத் பெருநாள் அன்று நடைபெற்ற கலவரத்தில் ஏராளமானோர் காயம் அடைந்துள்ளனர். நல்லவேளையாக யார் உயிருக்கும் ஆபத்து ஏற்படவில்லை.

எல்லா மதப் பெரியவர்களையும் சந்தித்து அனைவரையும் இணைக்கும் வகையில் ''திருவருட் பேரவை'' என்ற இந்த அமைப்பை மதர் மார்க்கரெட் ஏற்படுத்தியுள்ளார். அன்னை தெரசாவைப் போல் அமைதிப் பணியில் ஈடுபட்டுள்ள மதர் மார்க்கரெட்டைப் பெரிதும் பாராட்டுகிறேன். நமக்குள் எந்தப் பிரச்னை வந்தாலும், இந்தப் பேரவையின் மூலம் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். வன்முறையில் ஈடுபடு



''காகத்துக்கு தற்பெருமை அதிகமா.... எப்படி?''

''எப்பவும் தன் பெயரைத் தானே சொல்லிக்குதே.....?''

– சீகாழி வி. ரேவதி.

வோர் யாராயினும் அவர்கள் இந்த நாட்டின் துரோகிகள் ஆவர். ''ஈஸ்வர அல்லா தேரே நாம்'' என்று கூறிய நம் தேசத் தந்தை காந்தியடிகள் மறைந்த இந்த நாளில் மத ஒருமைப்பாட்டை வளர்க்கும் ''திருவருட் பேரவை''யைத் தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அடுத்து, நம்ம ஊர் பஞ்சாயத்துத் தலைவராகிய டாக்டர். அப்துல் காதர் பேசுவார்.

டாக்டர் அப்துல்காதர் : இந்தக் கூட்டத்தின் தலைவர் தியாகி கண்ணப்பா அவர்களே! ஊர்ப் பெரியவர்களே! அனைவருக்கும் என் அஸ்ஸலாமு அலைக்கும். நம் ஊரில் கலவரம் ஏற்பட்ட அன்று, இருதரப்பிலும் எண்ணற்ற பேர் காயமடைந்தார்கள். நான் தான் அன்றைக்கு மருத்துவமனையில் டாக்டராக இருந்தேன். உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த எத்தனையோ முஸ்லிம் சகோதரர்களுக்கு இந்துக்களும், இந்து சகோதரர்களுக்கு முஸ்லிம்களும் இரத்ததானம் கொடுத்த காட்சியைக் கண்ணால் கண்டேன். அதிலும் குறிப்பாக உயிருக்கு ஆபத்தான நிலையில் துடித்துக் கொண்டிருந்த அமுதா என்ற சிறுமியைக் காப்பாற்ற அவள் தோழி ஆயிஷா, ரத்ததானம் கொடுத்ததும் அமுதாவின் இரத்த குரூப்புக்கு, ஆயிஷாவின் இரத்த குரூப் பொருந்தியதும், அமுதாவுக்கு நினைவு திரும்பும் வரை, ஆயிஷா தவித்ததும் நெகிழ்ச்சியான நிகழ்ச்சி! இறைவனால் படைக்கப்பட்ட மனிதர்கள் அனைவரும் ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று திருக்குர்ஆன் கூறுகின்றது. ''மக்கள் சமுதாயம் ஓர் உடல் போன்று இருக்க வேண்டும்; உடலில் ஓர் உறுப்பு அனுபவிக்கும் வேதனையை மற்ற உறுப்புகளும் உணர்வதைப் போல், பிறர் துன்பத்தைத் தம் துன்பமாக உணர வேண்டும்'' என்று நபிகள் நாயகம் சொல்லியிருக்காங்க! இதை நாம் அனைவரும் உறுதிமொழியாக எடுத்துக் கொண்டு, ஒற்றுமையாக வாழ்வோம் என்று கூறி விடைபெறுகிறேன்.


கண்ணப்பா : இதுவரை பேசிய டாக்டர் அப்துல்காதர் அவர்கள், ஒற்றுமையின் அவசியத்தை அழகாக எடுத்துரைத்தார்கள். இதைத்தான் மகாகவி பாரதியார், ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே! - நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே'' என்று பாடினார். ஆகவே, நாம் அனைவரும் ஒன்றுபடுவோம்; உயர்வு பெறுவோம். அடுத்து, நம் அனைவரின் மதிப்புக்கும் உரிய மதர்மார்க்கரெட் அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

மதர் மார்க்கரெட் : தலைவர் அவர்களே! என் அன்பிற்குரிய பொது மக்களே! எல்லாருக்கும் என் வணக்கம். எல்லா மதங்களும் மனிதனை மனிதன் நேசிப்பதற்காகவும், ஒருவருக்கொருவர் உதவுவதற்காகவும், ஒழுக்கமாக வாழ்வதற்காகவும் உண்டானவையே. ஆனால், அவற்றுக்குள் வேறுபாடுகளும், மாறுபாடுகளும், பகைமையும் வளர்த்துக் கொள்வது மனித இனத்

''நீ எழுதியிருக்கிற ஜோக்கு வேற பத்திரிகையிலிருந்து வரிக்கு வரி விடாம காப்பியடிச்சது!''

''இருக்காதே! கடைசியிலே என் பெயரைப் போட்டு மாத்தியிருப்பேனே?''

- ஏ.வி. இளங்கோ.



துக்கே நல்லதல்ல! ஒரே இடத்திற்குப் போய்ச் சேருவதற்கான பல வழிகளே மதங்கள்! அடையப் போகும் லட்சியம் ஒன்றாக இருக்கும் போது, நமக்குள் சண்டையிடலாமா? சிந்தித்துப் பாருங்கள்! எல்லாரிடமும் அன்பாய் இருங்கள்! என்றுதான் இயேசுநாதர் சொல்கிறார். பைபிள், குர்ஆன், பகவத்கீதை இவற்றில் எதன் மூலம் நோக்கினும் நமக்குக் கடவுள் ஒருவரே! மனிதாபிமானத்தோடு அனைவரிடமும் பழக வேண்டும். ஒருவரையொருவர் நேசிப்பதற்கு உருவான மதத்தை, ஒருவரையொருவர் வெறுப்பதற்குப் பயன்படுத்தக் கூடாது. இந்தியா ஒரு நாடு! நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள்; நாம் அனைவரும் சகோதரர்கள்! நமக்குள் எவ்வித வேற்றுமையும் கூடாது என்ற எண்ணம் வலுப்பெற வேண்டும். இந்த ஒருமைப்பாட்டு உறுதிமொழியை நாம் அனைவரும் எடுத்துக் கொண்டு, நம் நாட்டின் முன்னேற்றத்துக்குப் பாடுபடுவோமாக!கர்த்தர் நம் அனைவருக்கும் நல்லருள் புரியட்டும். நன்றி. வணக்கம்.

கண்ணப்பா : அற்பக் காரணங்களுக்காகச் சமயச் சண்டைகள் தோன்றி, நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கக் கூடாது என்ற நல்ல கருத்தை மதர் மார்க்கரெட் அவர்கள் நம் உள்ளங்களில் பதியுமாறு அழகாக விளக்கிச் சொன்னார்கள். சமூகப் பற்றை விட நாட்டுப் பற்றுதான் மிகவும் பெரிது! இந்த முறையில் முதலில் நாம் இந்தியர்கள்; பிறகுதான் இந்துக்கள், முஸ்லீம்கள், கிறித்துவர்கள் என்று அண்ணல் காந்தியடிகள் ஒருமுறை சொன்னார். அவர் இரத்தம் சிந்திய இந்த நாளில் நாம் அனைவரும் இந்தக் கருத்தை ஏற்றுச் செயல்படுவோம். நமக்குள் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் திருவருட்பேரவை மூலம் பேசிப் போக்கிக் கொள்வோம். வேற்றுமைகளை மறந்து இந்தக் கூட்டத்துக்கு ஒற்றுமையோடு வந்த உங்கள் அனைவருக்கும் நன்றி! வாழ்க பாரதம்! வளர்க ஒருமைப்பாடு!!



மரம்

பச்சை இலைப் பந்தலிட்டுப்
பலமரங்கள் நிழல் கொடுக்கும்
உச்சி வெயில் அனல் தணிக்க
உயர்ந்த மரம் குடைபிடிக்கும்.


களைப்பு மிகும் நேரத்தில்
கவரிவீசிக் களைப்பாற்றும்.
அலுப்பு மிகும் நேரத்தில்
அமுதம் போல் குளிர்ச்சி தரும்.

வாழை மரம் இலை போடும்,
வருக்கைப் பலா கனிபோடும்.
தாழை மரம் பூச்சொரியும்
தரையெல்லாம் தமிழ் மணக்கும்.

மரத்தை வெட்டியச் சாய்ப்பவர்
மனித வாழ்வை அழிப்பவராம்.
மரத்தின் வளர்ச்சி மழைகொடுக்கும்,
மழையால் உயிர்கள் வாழ்ந்திடுமே.

– சுசீந்திரம் வ. நீலகண்டன்.

புலி இளவரசன்



விஜயபுரி மன்னருக்கு நீண்ட கால மாகக் குழந்தைகள் இல்லை. மன்னர் பெரிய கொடுங்கோலர். தாங்க முடியாத அளவுக்கு வரி விதித்து, மக்களைக் கொடுமைப்படுத்தி வரி வசூலித்தார். மக்களெல்லோரும் மன்னரை மனத்திற்குள் திட்டினர். 'இந்தப் பாவி எப்பொழுது போவானோ' என்று சாபமிட்டனர்.

தனக்குக் குழந்தை இல்லாததை எண்ணி மிகவும் வருந்திய மன்னர், காட்டில் தவம் செய்து வந்த ஒரு முனிவரைப் பணிந்து தன் குறையைக் கூறினார். முனிவர் சிரித்தார்.

''மக்களைக் கொடுமைப்படுத்தி அவர்களைக் கண்கலங்க வைக்கிறாய். எல்லோரும் உன்னை சபிக்கிறார்கள். அந்தச் சாபத்தின் விளைவுதான் இது. முதலில் மக்களின் அன்பைப் பெறுவதற்கு அவர்களுக்கு நன்மை செய்'' என்று முனிவர் கூறினார்.

அரசருக்கு வந்ததே கோபம். ''என்னுடைய குறையைத் தீர்த்து வைக்க முடியாத உங்களுக்கு முனிவர் என்று எதற்குப் பட்டம்? இத்தனை காலமாகத் தவம் செய்து வருகிறீர்கள். இதைக்கூட உங்களால் செய்ய முடியாதா?'' என்று மரியாதை இல்லாது கடிந்து கொண்ட மன்னர், தனது சேவகர்களை விட்டு முனிவரை சாட்டையால் அடிக்கச் சொன்னார்.

முனிவரால் சாட்டையடியைத் தாங்க முடியுமா? அவர் துடித்தார். ஆனால், அந்த நிலையில் கூட அவர் மன்னரை சபிக்கவில்லை. சாட்டையடி தொடர்ந்தது. வேறு வழியில்லாமல் சாட்டையடியை நிறுத்த வேண்டினார் முனிவர். ஒரு மாம்பழத்தை மன்னரிடம் கொடுத்தார்.

''மன்னா, இந்த மாம்பழத்தை ராணியிடம் கொடுங்கள். ஒரு இளவரசன் பிறப்பான். ஆனால் ஒன்று. உங்களுக்கு மக்களின் சாபம் நிறைய இருக்கிறது. அதற்கு எதிராக என்னுடைய சக்தியால் உங்களுக்கு நன்மை செய்ய முடியாது'' என்று எச்சரித்தார்.

அடுத்த ஆண்டே ராணிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. மனிதக் குழந்தைகளைப் போலவே குழந்தைக்கு உடல் இருந்தாலும், முகம் மட்டும் புலியின் முகமாக இருந்தது. முனிவர் கூறியது உண்மையாகி விட்டது.

மன்னருக்கு அப்பொழுதுதான் தனது கொடுங்கோன்மையின் விளைவு எத்தனை பயங்கரமானது என்பதை உணர முடிந்தது. மறுபடி முனிவரைத் தேடிக் கொண்டு காட்டுக்குப் போனார். முனி வர் அங்கு இல்லை. அவர் வேறு இடம் தேடிப் போய்விட்டிருந்தார்.

புலி இளவரசன் வளர்ந்தான். முகம், புலியாக இருந்தாலும் இளவரசனின் குணம் அருமையாக இருந்தது. நல்ல குணங்களுக்கெல்லாம் அவன் உறைவிடமாக விளங்கினான். இத்தனை நல்ல குணமுடைய இளவரசனுக்கு இப்படிப் புலி முகம் அமைந்துவிட்டதே என்று மக்கள் வருந்தினர்.

சின்னபாபு

இளவரசன் வளர்ந்து பெரியவனானான். மகனுக்கு ஏற்ற இளவரசியைத் தேடித் திருமணம் செய்து வைக்க மன்னர் முயன்றார். எந்த இளவரசியும் புலி இளவரசனைத் திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லை. இளவரசியாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை. சாதாரணக் குடும்பத்தில் பிறந்த ஏழைப் பெண்ணையாவது திருமணம் செய்து வைக்கலாம் என்று மன்னர் முயன்றார். எந்தப் பெண்ணும் அதற்கும் முன்வரவில்லை. மன்னர் செய்வதறியாது கவலையில் மூழ்கினார்.

''எனக்குத் திருமணமாகாததைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். மக்களுக்கு நன்மை புரிந்து, அவர்களுக்கு எந்தக் குறையும் இன்றி ஆட்சி புரிவதிலேயே நான் மகிழ்ச்சியாக இருப்பேன்'' என்றான் புலி இளவரசன்.

இளவரசன் ஒரு நாள் வேட்டையாடக் காட்டுக்குப் போனான். புலிகள் அவனைக் கண்டு பயந்து ஓடின. சிங்கமும் யானையும் மருண்டு ஓட்டம் பிடித்தன. ஆடிக் கொண்டிருந்த மயில் கூட்டம் ஆட்டத்தை நிறுத்தி விட்டு ஒளிந்தது.

இளவரசன் வருத்தம் மேலிட ஒரு குளக்கரையில் வந்து அமர்ந்தான். தன்னுடைய நிலையை எண்ணிய போது அவன் கண்கள் கலங்கின. கண்ணீர் திரண்டு வழிந்து குளத்து நீரில் விழுந்தது. விழுந்த அடுத்த கணமே அவை வெண் முத்துக்களாக மாறி ஒளி வீசி மிதந்தன! இளவரசனுக்கே அது புதுமையாக இருந்தது.

உடனேயே அங்கே ஓர் அதிசயம் நடந்தது. குளத்து நீர் சலசலத்தது. அதே பழைய முனிவர் தவம் செய்த நிலையில் மேலே வந்தார். புலி இளவரசன் உண்மையான பணிவு, பக்தியுடன் முனிவரை வணங்கிப் பணிந்தான்.

கண் விழித்துப் பார்த்தார் முனிவர். இளவரசன் யார் என்பது அவருக்குத் தெரிந்து விட்டது.

''முனிவர் பெருமானே, என் தந்தை செய்த குற்றங்களுக்காக எனக்கு இப்படி ஒரு தண்டனையா? குழந்தைகளிலிருந்து கொடிய காட்டு விலங்குகள் வரை எல்லாம் என்னைக் கண்டதும்





அரண்டு ஓடுகின்றனவே?'' என்று கண்ணீர் விட்டான்.

இளவரசன் விட்ட கண்ணீர், கன்னத்தில் விழுந்து குளத்து நீரில் விழுந்து முத்துக்களாக மாறி ஒளி வீசி மிதந்தன!

''இளவரசே உங்கள் முகம் கொடிய புலியின் முகமாக இருந்தாலும், உங்கள் உள்ளம் தூய்மையானது. அதனால்தான் நீங்கள் விடுகின்ற கண்ணீர் இப்படி வெண் முத்துக்களாகி ஒளி வீசுகின்றன. நீங்கள் ஒரு புனிதமான பிறவி'' என்றார் முனிவர்.

''என்ன புனிதம் இருந்து என்ன பயன்? எந்தப் பெண்ணும் என்னை மணம் செய்து கொள்ள மறுக்கிறாளே?'' என்று மனம் வருந்தினான் இளவரசன்.

''கவலை வேண்டாம் இளவரசே. இந்தக் காட்டில் ஒரு வேடன் இருக்கிறான். அவனுக்கு ஒரு பெண் இருக்கிறாள். பவளவல்லி என்று பெயர். நல்ல குணவதி. அழகியும் கூட. ஆனால், அவளுக்குப் பார்வை கிடையாது. இந்தக் காரணத்தால் அவளுக்கு இன்னும் திருமணமாகவில்லை. அவள் உங்களை மணக்கச் சம்மதிப்பாள்'' என்றார் முனிவர்.

''என்னுடைய குறை தீராதா? எனக்குப் புலி முகம் மறைந்து மனித முகம் கிடைக்காதா?''

''கண்டிப்பாகக் கிடைக்கும். நீங்கள் ஒரு மாபெரும் தியாகத்தைச் செய்வீர்கள். அது உங்களுக்கு மனித முகத்தைக் கொண்டு தரும். பவளவல்லியை மணந்து கொண்டு மகிழ்ச்சியாக வாழுங்கள் இளவரசே'' என்று வாழ்த்தினார் முனிவர்.

பார்வை இல்லாத பவளவல்லிக்கும், புலி இளவரசனுக்கும் மிகச் சிறப்பாகத் திருமணம்



நடைபெற்றது. இருவரும் ஒருவரை யொருவர் அன்புடன் நேசித்து மகிழ்ச்சி யாக வாழ்ந்தனர். ஒருநாள் இருவரும் முனிவரைக் காண வந்தனர். வணங்கிப் பணிந்தனர்.

மகிழ்ச்சியடைந்த முனிவர், ''இள வரசே நான் உங்களுக்கு ஒரு வரம் தர விரும்புகிறேன். என்ன வேண்டும் கேளுங்கள்?'' என்று கேட்டார்.

ஒருகணம் யோசித்த புலி இளவர சன், ''முனிவர் பெருமானே... என் மனைவி பவளவல்லிக்குப் பார்வை கிடைக்க அருள்புரியுங்கள். அது போதும்'' என்றான்.

''இளவரசே! இந்த வரத்தைக் கொண்டு உங்கள் புலி முகத்தை மனித முகமாக மாற்றிக் கொள்ளலாமே? அதை விட்டு விட்டு, பவளவல்லிக்குப் பார்வை கேட்கிறீர்களே? இது புத்தி சாலித்தனமா?'' என்று கேட்டார் முனி வர்.

''பவளவல்லி என் மனைவியாக இருந்தாலும், அவளும் எனது நாட்டுக் குடிமக்களுள் ஒருத்திதான். குடிமக்க ளின் குறையைப் போக்குவது மன்ன னின் முதல் கடமை. இந்த வரத்தைக் கொண்டு எனக்கு நன்மை தேடிக் கொள் வது சுயநலம். நான் அதற்குத் தயாராக இல்லை'' என்றான் இளவரசன்.

''மீண்டும் நன்றாக எண்ணிப் பாருங்கள் இளவரசே. பவளவல் லிக்குப் பார்வை கிடைத்தால் அவள் உங்கள் புலி முகத்தைப் பார்த்து உங் களை வெறுக்க ஆரம்பிக்கலாம் இல் லையா?''

இளவரசன் ஒருகணம் யோசித்தான். பிறகு, ''அப்படி அவள் என் உருவத் தைக் கண்டு வெறுப்பாள் என்பதற்காக என்னுடைய கடமையை நான் செய் யாது இருப்பது துரோகமல்லவா? அப் படி அவள் வெறுத்தால், அதை ஏற்கவும் நான் தயாராக இருக்கிறேன். பவளவல் லிக்குப் பார்வை கிடைக்க அருள்புரி யுங்கள்'' என்று வேண்டினான்.

''அப்படியே ஆகட்டும்'' என்றார் முனிவர்.

அங்கே உடனேயே ஓர் அதிசயம் நிகழ்ந்தது. பவளவல்லிக்குப் பார்வை வந்தது! இளவரசனின் புலி முகம் மறைந்து அழகான மனித முகம் வந் தது!

''உங்கள் ஒப்பற்ற தியாகத்திற்குக் கிடைத்த பரிசு இளவரசே. மக்களுக்கு நன்மை செய்து நெடுங்காலம் மகிழ்ச்சி யாக வாழுங்கள்'' என்று வாழ்த்தினார் முனிவர்.

எங்கள் ஆசிரியர்



எங்கள் பள்ளி ஆசிரியர்
எல்லாம் தெரிந்த ஆசிரியர்!
பங்கம் இல்லா ஆசிரியர்
பாடம் நடத்தும் ஆசிரியர்!

காலை வகுப்புத் தொடங்கியதும்
கணக்கு அறிவியல் புவியியலும்
மாலை மற்றப் பாடங்கள்
மகிழ்வாய்க் கற்றுத் தந்திடுவார்!

ஒழுக்கம் குன்றா அறவழிகள்
ஓதி உளத்தே திருத்திடுவார்;
முழுக்க முழுக்கத் தமிழமுதம்
முறையாய் எமக்கு வழங்கிடுவார்!

தங்கம் போன்ற ஆசிரியர்
தயவு காட்டும் ஆசிரியர்;
எங்கள் பள்ளி ஆசிரியர்
எல்லாம் தெரிந்த ஆசிரியர்!

– ச. ஆ. கேசவன்



கார்ட்டூன்களை பத்திரிகைகளிலும் தொலைக்காட்சியிலும் பார்க்கிறோம். மனம் விட்டு வாய் விட்டுச் சிரிக்கிறோம். இந்த கார்ட்டூன்கள் என்னும் கேலிச் சித்திரங்கள் எப்பொழுது வெளிவரத் தொடங்கின?

முதலில் 1885-ஆம் வருடம்தான் அமெரிக்கப் பத்திரிகை ஒன்றில் 'THE YELLOW KID' என்ற தலைப்பில் உலகின் முதல் கார்ட்டூன் வெளியானது. மக்களைப் பெரும் அளவுக்கு இவை கவர்ந்து விற்பனையும் கூடியதால் எல்லாப் பத்திரிகைகளுமே கார்ட்டூன்ககளை வெளியிடத் தொடங்கின. 1990ல் வெளியான 'Bringing up father' எனும் கார்ட்டூன் மிகவும் பிரபலமான ஒன்றாகும். இதில் வந்த பாத்திரங்களான மாகியும் ஜிக்ஸ ும் அமெரிக்க மக்களின் மனத்தில் நீங்காத இடம்பிடித்த கற்பனைப் பாத்திரங்கள். இவை The Funnies எனும் செல்லப் பெயரையும் பெற்றன.

அமெரிக்க மக்களின் மனங்கவர்ந்த மற்ற கார்ட்டூன் பாத்திரங்கள் 1930ல் வெளியான 'Terry and the Pirats, Buck Rogers, 'Super Man' என்ற சாகச கற்பனை வீரர்களாகும்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்தான் கார்ட்டூன்கள் இந்தியாவிற்கு வந்தன. அச் சமயம் நம் நாட்டில் வெளியான Pogo, Peanuts எனும் சிறுவர்கள் மற்றும் Snappy, எனும் நாய் ஆகியோர் சேர்ந்து வழங்கிய கார்ட்டூன்கள் சிறுவர்கள் மனத்தில் பெருமளவிற்கு இடம்பிடித்தன.

நம்மை விட அமெரிக்க மக்கள் கார்ட்டூன்களில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். அவர்களை கார்ட்டூன்கள் ஆட்டிப் படைக்கின்றன என்றால் கூட அது மிகையில்லை. கற்பனைக் கார்ட்டூன் கதாநாயகர்கள் ஒரு பொருளை விரும்பிச் சாப்பிடுகின்றனர் அல்லது பயன்படுத்துகின்றனர் என்று விளம்பரம் வெளிவந்து விட்டால் அப்பொருளுக்கு அமோக ஆதரவு; பயங்கர விற்பனை கூடுகிறது! ஒரு சமயம் ஒரு பத்திரிகையில் கற்பனைப் பாத்திரமான குத்துச் சண்டை வீரர் ஜோ பலூக்கோ வெண்ணையை விரும்பிச் சாப்பிடுவார் என்று வெளியானதும் வெண்ணெய் விற்பனை பல மடங்கு பெருகியது! தமிழ் மொழியில், அரசியலைக் கார்ட்டூனாக முதன் முதலில் வழங்கிய பெருமை பாரதியாரையே சாரும்.

இந்திய கார்ட்டூனிஸ்ட்களில் சிறப்பான இடம்வகித்தவர் சங்கர். குழந்தைகளுக்காக உலக அளவில் ஓவியப் போட்டி நடத்தி வரும் பெருமை இவரையே சாரும். சிறுவர்களுக்காக முழு கார்ட்டூன் சினிமாவும் தமிழில் வெளிவந்திருக்கிறது. கல்வி கோபால கிருஷ்ணன் எழுதிய 'மிட்டாய் பாப்பா' என்ற அறிவியல் நாவல் இப்படி கார்ட்டூன் சினிமாவாகத் தமிழில் வெளிவந்திருக்கிறது.

கார்ட்டூன்கள் எனப்படும் இந்த கேலிச் சித்திரங்களுக்கு இன்று 109 வயதாகிறது! இவை புதிய புதிய உத்திகளைக் கொண்டு மக்களின் பேராதரவைப் பெற்று வருகின்றன. உலக மொழிகள் எல்லாவற்றிலும் கார்ட்டூன்கள் இல்லாத பத்திரிகையே இன்று இல்லை.

– பா. ஜெயக்குமார்





என்ன இனம்?

அந்த மேல்நிலைப் பள்ளி விழாக் கோலம் கொள்ளத் தயாராக இருந்தது. பள்ளிச் சுவர்கள் வெள்ளைப் பூசி, கதவுகள் வண்ணம் தீட்டிக் கொண்டிருந்தன.

நாளை மறுநாள் அமைச்சர் அப் பள்ளிக்கு வருகை புரிய இருக்கிறார். ஐம்பது வயதைக் கடந்து விட்ட அந்தப் பள்ளியின் பொன் விழாக் கொண்டாட்டங்களைத் துவக்கி வைக்கவும், சிறப்பு மர நடு விழாவில் கலந்து கொள்ளவும் வருகிறார்.

அமைச்சரின் வருகை சிறப்பாக அமைய வேண்டும் என்பதற்காக விழாக் குழுவினரும், மாவட்ட ஆட்சித் தலை வரும் சட்டம்-ஒழுங்கு காக்கும் காவல் துறை அதிகாரிகளும் தலைமை ஆசிரியர் அறையில் கலந்து ஆலோசித்தனர்.

காவல் துறை அதிகாரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லிக் கொண்டிருந்தார், ''அமைச்சர் முப்பது நிமிடங்கள் இங்கு தங்குகிறார். அவருடன் அதிகாரிகள் பிரமுகர்கள் ஆகியோரது கார்களும் நிறைய வரும் என எதிர்பார்க்கிறோம். அத்தனை வாகனங்களையும் பாதையில் நிறுத்தினால் போக்குவரத்து பாதிக்கும். ஆகையால், பள்ளியின் திறந்த மைதானத்தில் அவைகளை நிறுத்த வேண் டும்.''

''அப்படியே செய்து விடலாம்'' என்றார் மாவட்ட ஆட்சித் தலைவர்.



''அப்படி நிறுத்துவதற்கு மைதானத்திலுள்ள சில மரங்கள் இடையூறாக இருக்கும். வலது பக்கத்திலுள்ள சில பூவரக மரங்களையும், ஒரு தூங்குமூஞ்சி மரத்தையும் வெட்டிச் சமப்படுத்தினால் தான் கார்களை நிறுத்த முடியும்.''

''வெட்டி விடுவோம்'' விழாக் குழுவினர் ஒப்புதல் அளித்தனர்.

''வேண்டாம் சார்... இந்தக் கருத்தை மறுத்துப் பேசுவதற்காக என்னை மன்னிக்க வேண்டும். இந்த மரங்கள் இருபது முப்பது வயதானவை. இவைகளை வெட்ட அனுமதிக்க மாட்டோம். அமைச்சர் பொன் விழாக் கொண்டாட்டத்தின் நினைவாக ஒரு மரக் கன்றும் நட இருக்கிறார். இருக்கும் வயதான மரங்களை வெட்டியா பொன் விழா மரக் கன்றை நடுவார்கள்? இது நியாயம் அல்ல. யோசித்துப் பாருங்கள்'' - தலைமை ஆசிரியர் தன் கருத்தை உறுதியாகச் சொன்னார்.

''சட்டம்-ஒழுங்கு பாதுகாப்பை மட்டும் காப்பது எங்கள் கடமையல்ல. கூட்டத்திற்கு வருகைதரும் அமைச்சரைப் பாதுகாப்பதும் எங்கள் கடமை. சாலையில் வாகனங்களை நிறுத்தினால் போக்கு வரத்து முப்பது நிமிடங்களுக்கு மேல் பாதிக்கும்...'' என்றார் போலீஸ் அதிகாரி.

''முப்பது நிமிடங்கள் போக்குவரத்துப் பாதிப்பது பெரிதா? முப்பது வருடங்களுக்கு மேல் வளர்த்துக் காத்த மரங்களை வெட்டி வீழ்த்துவது பெரிதா? யாரோ வைத்த மரங்களை வெட்ட நமக்கு என்ன உரிமை இருக்கிறது? முடிவெடுங்கள். மரங்களை வெட்டத்தான் வேண்டும் என்றால் அமைச்சர் இந்த விழாவில் கலந்து கொள்ளாமல் இருப்பதுதான் நலம். நான் போய் இந்த விழாவுக்கு நீங்கள் தான் வர வேண்டும் என்று அமைச்சரை அழைக்கவில்லை. அவரே தான் தானே வருவதாக எழுதினார். எனக்கு அமைச்சரின் வருகையை விட மரங்களே முக்கியம்'' என்று உறுதியாகக் கூறினார் தலைமை ஆசிரியர்.

முடிவில் மரங்களை வெட்டாமல் போக்குவரத்து சிறிது நேரம் பாதித்தாலும் பரவாயில்லை என்று சாலையில்

வாகனங்களை நிறுத்தலாம் என முடிவெடுக்கப்பட்டது.

அமைச்சர் வருகை புரிந்தார்.

மரநடு விழாவை முடித்துக் கொண்டு பொன் விழாவைத் தொடங்கி வைத்த அமைச்சர் பேசத் தொடங்கினார்.

''மாணவர்களே! நீங்கள் எதிர்காலச் சிற்பிகள். ஒரு சிலரால் மட்டுமே கல்வி நிலையங்களை உருவாக்க இயலும். ஓரிருவரால் மட்டுமே ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும். ஆனால், எல்லோராலும், ஏன் உங்கள் அனைவராலும் மரங்களை வளர்த்து உருவாக்க முடியும். நீங்களெல்லாம் வீட்டில், வீதிகளில், இப் பள்ளியில் மரங்களை நட்டுப் போற்றுங்கள். அப்படி இயலாவிட்டால் இருக்கும் மரங்களையாவது பாதுகாக்கத் தொடங்குங்கள். என் வருகையை முன்னிட்டு இந்த மைதானத்தில் இருந்த வயதான மரங்களை வெட்ட முயற்சி எடுக்கப்பட்டதாகவும், தலைமை ஆசிரியர் உறுதியாக இருந்து அதைத் தடுத்து நிறுத்தினார் என்றும் கேள்விப்பட்டேன். எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது. ஏன் தெரியுமா? பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு இதே பள்ளியில் படித்த மாணவன் என்ற பெருமை எனக்கு உண்டு. பிற்பகலில், கடுமையான கோடை காலத்தில், இதே மரங்களின் நிழலில் அமர்ந்து நான் தயிர்சாதம் சாப்பிட்ட மகிழ்ச்சியான நாட்களை என்னால் மறக்கவே முடியாது. இவை மட்டும் வெட்டப்பட்டு இருந்தால் என்னால் அந்தத் துயரைத் தாங்கவே முடியாது. இதில் உறுதியாக இருந்த தலைமை ஆசிரியரை நான் பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட நல்ல உறுதியான முடிவெடுக்கும் ஆசிரியர்கள் பலர் நமக்குத் தேவை. அவருடைய பழைய மாணவன் என்பதால் நான் அவரைப் பற்றிப் பெருமைப்படுகிறேன்'' என்று மேடையிலேயே தலைமை ஆசிரியரின் கால்களில் பெருமையோடு விழுந்தார் அமைச்சர்.

– சாரதா நாகரத்தினம்



அட்லஸ்

ஒரு நாட்டின் இயற்கை அமைப்பு, நதிகள், மலைகள் ஆகியவற்றை வரைபடத்தின் மூலம் விளக்கும் முறையை முதலில் எகிப்தியர்கள்தான் கண்டுபிடித்தனர்.

இப்போது காகிதத்தில் தேசப்படம் குறிக்கப்படுகிறது அல்லவா? காகிதம் கண்டுபிடிப்பதற்கு முன்னால் களிமண்ணே உபயோகத்தில் இருந்தது.

4000 ஆண்டுகளுக்கு முன் மன்னர்கள் தங்கள் நாட்டின் எல்லைகளை வரையறுக்கவும், நிலச் சொந்தக்காரர்கள் தங்கள் நிலப் பரப்பைக் குறிப்பிடவும், பச்சைக் களிமண்ணில் எழுதி, பிறகு அவற்றை நெருப்பில் சுட்டு உறுதியாக்கிப் பயன்படுத்தினர்.

பூமியின் அமைப்பு, தோற்றம் ஆகியவை பற்றி அந்தக் கால மக்களுக்குத் துல்லியமாகத் தெரியாததால் வெகு தொலைவில் உள்ள இடங்களைக் குறிக்க முடியாமல் திணறினர்.

கி.மு. 276-ல் ஏரோடாதனிஸ் என்னும் கிரேக்க அறிஞர் பூமியின் சுற்றளவை அறிந்தார். ஹிப்பார்சஸ் என்பவர் பூமி உருண்டையின் மீது அட்சரேகை, தீர்க்க ரேகை ஆகிய கற்பனைக் கோடுகளை வரைந்தார். தாலமி இக் கோடுகளை தேசப் படத்தில் ஏற்றி, தூரத்தைக் கணக்கிட்டார்.

கொலம்பஸ், மெகலன் ஆகியோர் புதிய இடங்களைக் கண்டறிந்ததால் தேசப் படங்களைப் பயன்படுத்தும் பழக்கம் விரிவாக வளர்ந்தது. பூமி உருண்டையின் மேல் இருந்த வளைகோடுகளை ஜெராடஸ் மெர்க்காடர் என்பவர் நேர் கோடுகளாக வரைந்து தேசப் படத்தைத் தயாரித்தார். இவர் தனது புத்தக அட்டையில் அட்லஸ் என்ற அரக்கனின் படத்தை வரைந்திருந்தார். இதனாலேயே பிற்காலத்தில் தேசப் படங்களின் தொகுப்பு 'அட்லஸ்' என்ற வியாபாரப் பெயரைப் பெற்று வெளிவர ஆரம்பித்தது.

– வேணு சீனுவாசன்



★ சர். ஆர்தர் கானன் டாய்ல் உருவாக்கிய ஷெர்லக் ஹோம்ஸ் என்ற புகழ் பெற்ற துப்பறியும் கதாநாயகன் உயிருள்ள மனிதர் ஒருவரை வைத்தே உருவாக்கப்பட்டது என்று எனது நண்பன் கூறுகிறான். இது உண்மையா? – மு. செல்லமுத்து, சிங்கப்பெருமான் கோயில்.

உண்மையே. கானன் டாய்லுக்கு டாக்டர் ஜோசப் பெல் என்று ஆசிரியர் ஒருவர் இருந்தார். இவரை வைத்தே ஷெர்லக் ஹோம்ஸ் பாத்திரத்தை கானன் டாய்ல் உருவாக்கினார்.



★ முதல் பெண் போலீஸ்காரர் யார்? – து. ரீடா, வேளாங்கண்ணி.

முதல் பெண் போலீஸ்காரர் என்ற பெருமையை பெறுபவர் திருமதி ALICE STEPHINGS WELLS என்பவர். அமெரிக்காவின் லாஸ் ஏஞ்ஜெல்ஸ் போலீஸ் பிரிவில் இவர் சேர்ந்தார். ஆண்டு 1910.

★ அதிக ஆண்டுகள் ஒரே பத்திரிகையின் ஆசிரியராக இருந்த பெருமை யாருக்கு உண்டு? – வெ. சூர்யநாராயணன், கல்லிடைக்குறிச்சி.

மைசூரில் இருந்து வெளிவந்த ''சத்கவாடி'' என்ற கன்னடப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த திரு எம்.எஸ். கிருஷ்ணாராவ் என்பவரே இந்தச் சிறப்பைப் பெறுபவர். இவர் காலம் 1895-1981. இவர் இப் பத்திரிகையின் ஆசிரியராக 1917 செப்டெம்பர் முதல், 1981 மார்ச் 28 வரை (இறக்கும் வரை) ஆசிரியராக இருந்தார் (63 ஆண்டுகள்!).

சேரநம்பி



* ஷெர்லாக் ஹோம்ஸ்

★ ஆங்கிலத்தில் and என்பதற்கு "&" என்ற குறியைப் பயன்படுத்துகிறார்களே, இதை யார் கண்டுபிடித்தார்கள்? – வெ. சுந்தரபாபு, கரூர்.

இதைக் கண்டுபிடித்த பெருமைக்கு உரியவர் மோரீஸ் டிரையோ என்பவர். இவரது காலம் கி.மு. 63. இவர் ரோம் நகரைச் சேர்ந்த ஓர் ஓவியர்.

★ ஒரு தலை முடிச் சுருளைக் கொண்டு அதற்குரிய பெண்ணின் உருவத்தை ஓவியமாக வரைந்ததாகக் கதைகளில் வருகிறதே. இது நடக்கக் கூடியதுதானா? – எஸ். அம்பிகா, நாகர்கோவில்.

சமீப காலம் வரை இதை 'ரீல்' என்றே எண்ணி வந்தோம். ஆனால் அண்மையில் தடய அறிவியல் (FORENSIC) கண்டுபிடிப்புகளின்படி, ஒரு தலை முடியைக் கொண்டு அதற்கு உரியவர் ஆணா பெண்ணா, அவரது வயது, எந்த இனம் என்பதைக் கண்டுபிடிக்க முடியும் என்கிறார்கள். யார் கண்டது எதிர்காலத்தில் உருவத்தையும் கண்டுபிடித்து விடலாம்.

★ எகிப்திய எழிலரசி கிளியோபாட்ரா தினமும் கழுதைப் பாலில் குளித்ததாகப் பலரும் சரடு விடுகிறார்களே! இதற்கு என்ன ஆதாரம்? – வ. தேவராஜ்பூத், திருச்சி – 3.

இப்படிக் கூறுபவர்களிடம் கேட்க வேண்டிய கேள்வி இது. கிளியோ பாட்ரா கழுதைப் பாலில் குளித்தது உண்மையோ பொய்யோ தெரியாது. ஆனால் பிரெஞ்சு மன்னர் 14-ஆம் லூயி, பாலாடையும் ஒயினும் கலந்த நீரில் குளித்ததாக வரலாறு கூறுகிறது!

★ முதல் "இஸ்லாமியக் குடியரசு" நாடு எது? பாகிஸ்தான் எப்பொழுது இந்தப் பட்டியலில் இடம்பெற்றது? – மா. விஷ்ணு பிரசாத், தூத்துக் குடி, கி. மதனகோபால், தூத்துக்குடி. வெ. பர்னர்ண்டஸ், தூத்துக் குடி மற்றும் பல தூத்துக்குடி வாசகர்கள்.

என்ன இது! தூத்துக்குடியில் இருந்து இவ்வளவு பேரும் இதே கேள்வியைக் கேட்டிருக்கிறீர்கள்! ஏதாவது பொது வினாடி வினா போட்டியா? உலகின் முதல் இஸ்லாமியக் குடியரசு பாகிஸ்தான்தான். 1956 மார்ச் மாதம் இதற்கான அறிவிப்பைப் பாகிஸ்தான் வெளியிட்டது.

★ கிரிக்கெட் ஆட்டத்தில் பௌண்டரி முறை தொடக்கத்தில் இருந்தே இருந்ததா? – மு. புவனா சகோதரிகள், மதுரை.

தொடக்கத்தில் பௌண்டரி முறை இல்லை. 4 ரன் அனுமதிக்கும் பௌண்டரி வழக்கம் 1866 ஆம் ஆண்டுதான் லார்ட்ஸ் கிரௌண்டில் அறிமுகமானது.



★ அதிக நாட்கள் ஆடப்பட்ட கிரிக்கெட் மேட்ச் எது? – வெ. தங்கதுரை, தஞ்சை.

இங்கிலாந்துக்கும், ஆப்பிரிக்காவுக்கும் இடையே டர்பனில் நடைபெற்ற கிரிக்கெட் மேட்சே அதிக நாள் நடந்த பெருமை பெறுகிறது. இது 1939 ஆம் ஆண்டு மார்ச் 3-ஆம் நாள் முதல் 14-ஆம் நாள் வரை 12 நாட்கள் நடைபெற்றது.

* தரையில் முடிவு

★ உணவை நன்கு சுவைத்துச் சாப்பிடக் கூடிய விலங்கு எது? - கா. பந்தலு, கர்ண சமுத்திரம்.

விலங்குகளில் உணவை நன்கு சுவைத்துச் சாப்பிடும் வசதி பெற்றிருப்பது பன்றிதான்! உணவு சுவைக்கக் காரணமாக இருப்பவை நாக்கில் உள்ள சுவை அரும்புகள்தான். மனிதனுக்குக் கூட 3000 சுவை அரும்புகள்தான் நாக்கில் உள்ளன. பன்றிக்கு 5500 சுவை அரும்புகள் உள்ளன!

★ மீனைத் தரையில் போட்டதும் இறந்து விடுகிறதே. என்ன காரணம்? - வெ. வள்ளியப்பன், கோட்டையூர்.

மீனுக்கு நீருக்குள் சுவாசிக்க அதன் செவுள்கள் உதவுகின்றன. இதன் உதவியால்தான் அது நீரில் உள்ள பிராண வாயுவை கிரகித்துக் கொள்கிறது. காற்றில் உள்ள ஆக்ஸிஜனை நம்மைப் போல் கிரகித்துக் கொள்ள அதனால் முடியாது. அதற்கு நுரையீரல்கள் இல்லை. தரைக்கு வந்ததும் மீன் மூச்சு முட்டி இறந்து விட இதுவே காரணம். ஆமாம், மூன்றாம் வகுப்புப் பாடப் புத்தகத்தில் கூட இந்த விளக்கம் இருக்கிறதே! இதைப் போய் ஆறு மாதமாகத் தொடர்ந்து கேட்டு வருகிறீர்களே! என்ன காரணம்?

★ வைரத்தை விட உறுதியான பொருள் இருக்கிறதா? - து. கனகவல்லி, சிதம்பரம்.

இயற்கை அளித்துள்ள கொடைகளில் உறுதியான பொருள் வைரம்தான். சந்தேகத்திற்கு இடமே இல்லை. ஆனால் BORAZAN என்று ஓர் இரசாயனப் பொருளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது BORON, NITROGEN ஆகியவற்றின் கூட்டு. இது வைரத்தை விட உறுதிமிக்கது. ஏன், வைரத்தைக் கூட அறுக்கும் வலிமையும் உறுதியும் மிக்கது. ஆனால், இதை ஏழை நாடுகள் செய்ய முடியாது. காரணம் இதற்குத் தனி உலை அவசியம். அதோடு ஏராளமான செலவும் கூட.

★ இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் வண்ணப்படம் எது? இது எந்த மொழியில் வெளிவந்தது? - வி. பொன்தல்லி, திருத்தணி.

''கிஸான் கன்யா'' என்ற இந்தித் திரைப் படம்தான் இந்தியாவில் தயாரிக்கப் பட்ட முதல் வண்ணத் திரைப்படம். க. இராணி என்பவர் இதன் தயாரிப்பாளர். இது பம்பாயில் தயாரானது.

★ சர்வாதிகாரி இட்லரின் மனைவி பெயர் என்ன? - மா. இராஜாமணி, திருவண்ணாமலை.

இவா பிரௌன் (IVE BROWN) என்பவர் தான் சர்வாதிகாரி இட்லர் சட்டப்படி மணந்து கொண்ட மனைவியின் பெயர்.

★ பாபா பிளாக்ஷிப் என்ற பிரபலமான இங்கிலீஷ் நர்சரி பாடல் எப்பொழுது எழுதப்பட்டது? - வெ. தவமணி, பாளையம்கோட்டை.

'டாமி தம்ப்ஸ் சாங்' என்ற நர்சரி தொகுப்பில் இந்த இறவாவரம் பெற்ற பாடல் இருக்கிறது. இந்தத் தொகுப்பு 1744-ஆம் ஆண்டு, மார்ச் மாதம் திருமதி மேரிகூப்பர் என்பவரால் வெளியிடப் பட்டது.



"பக்கத்திலே இருக்கிற பையன்களையெல்லாம் கிள்ளிக் கிட்டே இருக்கியே! உம் பேர் என்ன?"

" 'கிள்ளி' வளவன் சார்!"

- தஞ்சை இரா. ஆதி



நில நடுக்கம் ஏற்படுவது ஏன்?

பூபாரம் குறைக்க வேண்டித் தானோ என்னவோ, நம் மண் மாதா மராட்டிய மாநிலத்தில் கொடுமையாக விளையாடி விட்டாள்! அரக்கத்தனத் தோடு பல்லாயிரம் உயிர்களைப் பலி கொண்டு விட்டாள்!

செப்டம்பர் 30-ல் நம்மையெல்லாம் குலைநடுங்கச் செய்த அந்த நிலநடுக்கத் தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண் டாமா? அது எப்படி, ஏன் ஏற்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண் டாமா?

வருடத்தில் லட்சக்கணக்கான நில நடுக்கங்கள் ஏற்படுகின்றன! ஆனால், அவை எல்லாமே வெறும் சிலிர்ப்புகள் தான்! நம்மால் உணர முடியாதவை. கருவிகளில் மட்டுமே பதிவாகக்கூடிய அளவு இலேசானவை.


உலகத்தில் நிலநடுக்கங்கள் அதிகம் ஏற்படும் பகுதிகள் ஜப்பான், இந்தோ னேஷியா, மத்திய தரைக்கடலை அடுத் துள்ள நிலப்பரப்பு, கலிபோர்னியா பகு தியை ஒட்டிய சான் ஆண்ட்ரூஸ் ஆகி யவை. இந்த இடங்களில் நிலநடுக்கம் கடுமையாக இருக்கும்!

நிலத்தடியில் அதிர்ச்சி அலைகள் பரவுவதால்தான் நிலநடுக்கம் ஏற்படு கிறது! புவியிலுள்ள கண்டங்கள், கடல் கள் எல்லாமே பல பாறைப் பாளங்களின் மேல் அமைந்திருக்கின்றன! இவைகள் எப்போதும் நகர்ந்து கொண்டேயிருக் கின்றன! புவியின் புறத்தோற்றத்தின் அடியில் ஏற்படும் அழுத்தம் ஒரு குறித்த எல்லையை அடையும் போது, இதைத் தாங்கி நிற்கும் பாளங்கள் ஒன்றை யொன்று நெருங்கி உராய்கின்றன! இந்த உராய்வினால் புவியின் மேற்பரப்பில் சிலிர்ப்புகள் ஏற்படுவதுண்டு!

சில சமயங்களில் ஒரு பாளம் இன் னொரு பாளத்தின் மீதே ஏறி விடும்! அப்போது மேற்பரப்பில் பெரும் பிளவு ஏற்படுகிறது! இந்த மோதல் அல்லது உராய்வினால் ஏற்படும் அதிர்ச்சி அலை கள் ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்கள் பரவி நிலநடுக்கத்தை உண்டுபண்ணுகின் றன!

பூமிக்கடியில் அழுத்தம் காரணமாகப் பாறைகள் நகர்ந்ததுதான் அண்மையில் மகாராஷ்டிர மாநிலத்தில் பெரும் நில நடுக்கம் ஏற்படக் காரணமாக இருந்தது என்று திருவனந்தபுரத்திலுள்ள புவியி யல் ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது!

பூமியின் மேற்பரப்பில் செயற்கை யாக ஏற்படுத்தப்படும் மிகப் பெரிய நீர்த் தேக்கங்கள் போன்றவை பூமிக்கு கீழ் நோக்கி அழுத்தத்தை கொடுத்து நிலச் சமன் நிலையை பாதிக்கிறது என்பதை யும் மகாராஷ்டிர மாநில பூகம்பத்திற்கு



ஒரு காரணமாகக் கூறுகிறார்கள். இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் தமிழ்நாடு வரை வந்துள்ளது.


பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் இமயமலைப் பகுதி கடலாக இருந்தது! இந்திய துணைக்கண்டம் வடக்கு நோக்கி நகர்ந்தபடி இருந்தது! இந்தியா படிப்படியாக நகர்ந்து வட பகுதியில் இருந்த நிலப்பகுதி மீது மோதியது! அப்போது ஏற்பட்ட அழுத்தம் காரண மாகத்தான் இமயமலை உருவானது!


அதன் பிறகும் கூட இன்னமும் இந்தியா வடக்கு நோக்கி நகர்ந்து கொண்டேயிருக்கிறது! ஆண்டுக்கு 2 முதல் 5 செ.மீ. வரை இந்தியா நகர்ந்து கொண்டேயிருக்கிறது! இதன் காரணமாக இந்தியாவில் பூமிக்கு அடியில் அடர்த்தி அதிகம் ஆகி, அது பூமி அதிர்ச்சியாக வெளிப்படுகிறது! இப்போதும் இதனால் தான் நம் மகாராஷ்டிர மாநிலத்தில் கடுமையான பூமி அதிர்ச்சி ஏற்பட்டது!

பெரும் சேதம் விளைவித்த நில நடுக்கம் 1906-ஆம் ஆண்டு சான்பிரான்ஸிஸ்கோவில் ஏற்பட்டதுதான்! 1964-ல் அலாஸ்காவில் ஏற்பட்டதும் மிகப் பெரிய நிலநடுக்கம்தான்! 1914-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ஆம் தேதி பீஹாரின் வடபகுதியில் இருந்து நேபாளம் வரை ஏற்பட்ட நிலநடுக்கம் தான் உலகத்திலேயே பெரிய கடுமை யான நிலநடுக்கம்! அதிக அளவிலான உயிர்களைப் பலிகொண்ட நிலநடுக்கம் 1978-ஆம் ஆண்டில் சீனாவில் ஏற்பட்ட பூகம்பம்தான். இதில் மாண்டவர் தொகை ஆறு இலட்சத்திற்கும் மேல்.

இவ்வளவு பூகம்பங்களில் குறிப்பிடத்தக்க ஓர் அம்சம் காகம், குருவிகள் போன்றவை எவ்வித சேதமுமின்றி தப்பித்துக் கொண்டதுதான். இதன் காரணமாக காகம், குருவி போன்றவைகளுக்கு பூகம்பத்தை முன்கூட்டியே அறியும் திறன் உள்ளது என்பது வியப்புக்குரியது. அறிவியல் உலகம் இதற்கு விடை காணும் நாள் தொலைவில் இல்லை.

- அ. சுப்பையன்





பிருந்தாவனக் கதையரங்கம்

வல்லவன்

அந்த நரிக்கு இரண்டு நாட்களாக உணவு கிடைக்கவில்லை. எல்லா இடங்களிலும் அலைந்து பார்த்து விட்டு ஒரு குளக் கரைக்கு வந்தது.

குளக்கரையில் நிறைய முதலைக் குட்டிகள் விளையாடிக் கொண்டிருந்தன. மெதுவாக ஒரு முதலைக் குட்டியிடம் சென்றது நரி.


''முதலைத் தம்பி! முதலைத் தம்பி! உன் பெரியப்பா உன்னைப் பார்க்க ஆவலாய் இருக்கிறார். என்னை அழைத்து, 'டேய், என் தம்பி மகனை அழைத்து வா' என்று உன் பெரியப்பா கூறினார்'' என்று நரி பொய் சொன்னது.

இதை நம்பி விட்டது முதலைக் குட்டி.

''நீங்கள் கூறுவது உண்மைதான். எங்க பெரியப்பாவைப் பார்க்க எனக்கும் ஆசை. என் தம்பிமார்களையும் அழைத்துப் போகலாமே?'' என்றது முதலைக் குட்டி.

''இல்லை, நாமிருவரும் முதலில் செல்வோம். உன்னை விட்டு விட்டுப் பிறகு உன் தம்பியை நானே வந்து அழைத்து வருகிறேன்'' என்றது நரி.

முதலைக் குட்டியும் சரி என்று கூறி நரியோடு சென்றது. பாதிக் காட்டுக்குள்



சென்றதும் நரி சிரித்தது. ''முதலைக் குட்டியே! உன்னை நான் கொன்று தின்னப் போகிறேன்'' என்றது வஞ்சக நரி.

முதலைக் குட்டி முதலில் பயந்தாலும் பின், ''நரியாரே என்னைத் தின்னப் போவதை நினைத்து நான் பயப்படவில்லை. ஆனால், நானோ துளியூண்டு குட்டி. உமக்கு வயிறு நிறையாதே என்பதை நினைத்துத்தான் வருந்துகிறேன்'' என்றது.

''எனக்கு நிறைய உணவு வேணுமே?'' என்றது நரி.

''நான் இன்னும் காலை உணவு கூடச் சாப்பிடவில்லை. என்னைக் குளத்தில் கொண்டு விடு. நான் நிறையச் சாப்பிட்டு என் வயிறைப் பெரிதாக்கிக் கொள்கிறேன். அப்போ என்னைத் தின்றால் உன் பசி அடங்கும்'' என்றது முதலை. நரியும் சம்மதித்து மீண்டும் முதலைக் குட்டியைக் குளத்தில் கொண்டு விட்டது.

குளத்துக்குள் சென்ற முதலைக் குட்டி, நரியைப் பார்த்துச் சிரித்தது. ''ஏய் நரியே, நீதான் புத்திசாலியா? அடுத்தவர்களை ஏமாற்றி எப்பொழுதும் பிழைக்கலாம் என்று நினைத்து விடாதே. வல்லவனுக்கு வல்லவன் உலகில் உண்டு'' என்று கூறிவிட்டு குளத்தின் மையப் பகுதிக்குச் சென்றது முதலைக் குட்டி.

எல்லோரையும் ஏமாற்றும் நம்மை ஒரு சிறிய முதலைக் குட்டி ஏமாற்றி விட்டதே என்று நினைத்துக் கொண்டு பசியால் வாடியது நரி. பின் காட்டுக்குள் ஓடி மறைந்தது.

- செ. ஜின்னா, பூலாங்குடியிருப்பு.

சண்டை எதற்கு?

பணக்காரன் ஒருவன் ஒருமுறை 'கால்பந்தாட்டம்' பார்க்க வந்தான். அவன் இதற்கு முன்பு அவ் விளையாட்டைப் பார்த்ததே இல்லை. அதைப் பற்றி அவனுக்கு எந்த விதிமுறைகளுமே தெரியாது. ஆனால், அதிக பணம் கொடுத்து, முதல் வரிசையில் இருக்கை ஒன்றில் போய் அமர்ந்து கொண்டான்.



சிறிது நேரம் கழித்து ஆட்டம் ஆரம்பம் ஆகியது. இரு அணியினரும் பந்தை உதைத்து கோல் போட முற்படுவதைப் பார்த்த பணக்காரன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்து விட்டு ஆட்டத்தின் நடுவில் எழுந்து நின்று கொண்டு, ''நானும் பல மணி நேரமாகப் பார்க்கிறேன், நீங்கள் இந்த ஒரு பந்துக்காகவே சண்டை போட்டுக் கொண்டு இருக்கிறீர்களே! தயவு செய்து சண்டையிடுவதை நிறுத்துங்கள். உங்கள் அனைவருக்கும் என் செலவிலேயே தலா ஒரு பந்து வாங்கித் தர ஏற்பாடு செய்கிறேன்!'' என்றானே பார்க்கலாம்! சுற்றியிருந்த அனைவரும் அவன் முட்டாள்தனத்தை அறிந்து சிரித்தனர்.

- கிரு. சிவா, சென்னை - 116.

கல்

ஓர் ஊரில் ஒரு ஜோதிடர் இருந்தார். அவருக்கு ஜோதிடம் ஏதும் தெரியாது. ஆனாலும் பலே கில்லாடி. திறமையான புளுகர். அவருடைய பிழைப்பே அவரது திறமையில்தான் நடந்து வந்தது.

ஒருமுறை அவர் ஒரு வீட்டுக்கு ஜோதிடம் சொல்லப் போயிருந்தார்.



அந்த வீட்டுப் பையன் நோய்வாய்ப்பட்டிருந்தான். அவனைப் பார்த்த ஜோதிடர் அவ்வீட்டாரிடம் ஒரு சிறிய கல்லைக் கொடுத்து விட்டுப் போய் விட்டார். பக்கத்து ஊரிலும் இதே போல் ஒரு பையன் நோய்வாய்ப்பட்டிருந்தான். அங்கும் ஜோதிடர் இதே போல் ஒரு கல்லைக் கொடுத்து விட்டுப் போய் விட்டார்.

இரண்டு வீட்டாருக்கும் ஜோதிடர் கல்லைக் கொடுத்ததன் காரணம் புரியவில்லை.


ஒரு மாதத்துக்குப் பிறகு ஜோதிடர் முதலாவதாகக் கல் கொடுத்த வீட்டுக்குப் போனார். ஜோதிடரைக் கண்டதும் அவர்கள் கதறி அழுதனர். ''பையன் போயிட்டான் ஜோதிடர் ஐயா!'' என்று அவர்கள் அழுது புலம்பினர். அந்த வீட்டுப் பையன் இறந்து விட்டான் என்பதை அறிந்து கொண்ட ஜோதிடர், 'உங்கள் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டு விட்டுப் போய் விடுவான்' என்பதை மறைமுகமாக உணர்த்துவதற்காகத்தான் நான் கல்லைக் கொடுத்து விட்டுப் போனேன். இப்போது புரிகிறதா? என்றார். ஜோதிடரின் தீர்க்கதரிசனத்தை உணர்ந்து எல்லோரும் அங்கே அவரைப் பெரிதும் பாராட்டினர்.

பிறகு ஜோதிடர், பக்கத்து ஊரில் கல் கொடுத்த வீட்டுக்குப் போனார். அந்த வீட்டார் அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அவர் புண்ணியத்தால் பையன் பிழைத்துக் கொண்டான் என்றனர்.

அதைக் கேட்ட ஜோதிடர், ''பார்த்தீர்களா! அவன் ஆயுள் கல் போல் கெட்டியானது என்பதை மறைமுகமாக உணர்த்தவே நான் கல்லைக் கொடுத்து விட்டுப் போனேன். பையனும் கல் மாதிரி உயிரோடு இருக்கிறான் பாருங்கள்!'' என்றார்.

அனைவரும் ஜோதிடரின் அறிவை மெச்சினர்.

– ஆர். ஆமினா பீவி, நீடூர்.



''அவன் கன்னத்திலே இரண்டு அறை வைடான்னா, ஏன்டா நாலு வைச்சே?''

''நாலரை ரெண்டுதானே சார்!''

– எஸ். ஜானகி.

''போன மாதம் என் வாட்ச்சை இந்த ஆற்றில் போட்டுட்டேன். ஆனால் இன்னும் ஓடிக்கிட்டே இருக்கு!''

''என்னது வாட்ச்சா?''


''இல்லே, இந்த ஆறுதான்!''

– ஒரு. சிவா.



மருத்துவத்தில் கடல் பிராணிகள்


ஆழி



கடல்வாழ் உயிரினங்களிலிருந்து சுமார் 125 ரசாயனப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ரசாயனப் பொருள்கள், பாக்டீரியாக்களையும், வைரஸ் கிருமிகளையும் அழிக்கக் கூடியவை




சோர்வுற்ற தசைகளைத் தூண்டக்கூடிய மருந்துப் பொருளை நட்சத்திர மீனிலிருந்து தயாரிக்கிறார்கள்!




ஷ்ரிம்ப் என்னும் ஒருவகை இராலிலிருந்து, பெனிஸிலினை விட சக்திமிகுந்த நுண்கிருமிக் கொல்லி தயாரிக்கப்படுகிறது.

வாலில் கொடுக்குப் போன்ற கூர் முள்ளைக் கொண்டது 'ஸ்டிங் ரே' என்னும் திருக்கை மீன். இந்த முள்ளில் உள்ள விஷத்தை மருத்துவத்தில் மனிதனுக்குப் பயன்படுத்தும்போது, வெகு வேகமாகப் படபடக்கும் இருதயத்தை அமைதிபடுத்திவிடும்! இருதய அறுவைச் சிகிச்சையில் இந்த விஷம் பயன்படுகிறது!






'போர்த்துக்கீசிய போர்வீரன்' என்னும் ஒருவகை ஜெல்லிமீன் வெளிவிடும் விஷம் உட்புண்களையும்; இருதய நோய்களையும் தீர்க்கக் கூடியது என்று மியாமி பல்கலைக் கழக விஞ்ஞானி டாக்டர் சார்லஸ் லேன் கண்டுபிடித்திருக்கிறார்.





கடல்பஞ்சில் காச நோயைக் குணப்படுத் தக்கூடிய மருந்து இருப்பதாக ஆராய்ச்சி யாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

தேரை மீனின் உடலில் உண்டாகும் ஒருவித ரசாயனப் பொருள், இரத்தத்தில் உள்ள சர்க்கரையை அழித்து விடுகிறது. இதனால், நீரிழிவு நோயாளிகளுக்கு இந்தப் பொருளைப் பயன் படுத்தலாம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.




கடல் வெள்ளரி என்பதும் ஒரு பிராணிதான். சாம்பல் நிறத்தில், வெண்புள்ளிகளோடு வெள்ளரிக்காய் போலத் தோன்றும். இதன் விஷத்திலிருந்து 'புரோஸ்டா கிளாண்டின்ஸ்' என்னும் மருந்து தயாரிக்கப் படுகிறது. இது புற்று நோயைக் குணமாக்குகிறது. இதை நியூயார்க் டாக்டர் 'ரோஸ் நிக்ரெலி' என்பவர் கண்டுபிடித்திருக்கிறார். அறுவை சிகிச்சைக்குப் பிறகு ஏற்படும் வலி தெரியாமல் இருக்கவும் இந்த விஷம் மருந்தாகப் பயன்படுகிறது.






ஆக்டோபஸ்ஸின் உமிழ்நீர் விஷம்தான். ஆனால், இதன் உமிழ்நீரைக் கொண்டு இருதய நோயைக் குண மாக்கலாம் என்று கண்டு பிடித்திருக்கிறார் கலிபோர்னியாவில் உள்ள டாக்டர் 'புருஸ் ஹால்ஸ் டெட்'. இந்த உமிழ்நீர் இரத்தம் உறையாதபடி செய்கிறது; இருதயத் துடிப்பைச் சீராக்குகிறது.


சிப்பி மீன் வெளிவிடும் 'பவ்லின்' என்னும் பொருளிலிருந்து இளம்பிள்ளை வாதம், இன்ஃபுளுவென்ஸா நோய்களுக்கு மருந்து தயாரிக்கப் படுகிறது. சிப்பி மீனின் உடலி லிருந்து, இரத்த உறைவைத் தடுக்கும் மருந்தும், அறுவை சிகிச்சைக்குத் தேவை யான ஒரு மயக்க மருந்தும் தயாரிக்கப்படு கின்றன. இந்த மயக்க மருந்து, வழக்கமான மயக்க மருந்தைவிட லட்சம் மடங்கு சக்தி வாய்ந்தது!







கடல் நத்தையிலிருந்து நோயை எதிர்க்கக் கூடிய 'ஆன்ட்டி பயாடிக்' மருந்து தயாரிக்கப் படுகிறது.

கடல் முள்ளெலியிலிருந்து எடுக்கப்படும் விஷம், வளரும் புற்றுநோய்ச் செல்களை வளராதபடி செய்கிறது!




வெப்பக் கடல் பகுதிகளில், பல நிறங்களுடன் கூடிய 'ட்ரங்க் பிஷ்' என்னும் மீன்கள் இருக்கின்றன. ட்ரங்க் பிஷ் மீனிலிருந்து, கைகால் வலிப்பு, மற்றும் நரம்பு சம்பந்தமான நோய்களுக்கு மருந்து தயாரிக்கப் படுகிறது. தவிர, இதிலிருந்து, இரத்த அழுத்தத்தைக் குறைக்கக் கூடிய மூச்சுக் குழல் அடைப்பு போன்ற நோய்களைத் தணிக்கக்கூடிய மருந்து ஜப்பானில் தயாரிக்கப் படுகிறது.







'காட்' என்னும் மீனின் கல்லீரலிலிருந்து ஏ, டி, ஈ போன்ற வைட்டமின்கள் தயாரிக்கப்படுகின்றன.

'டூனி' மீன்களிலிருந்து நீரிழிவு நோயைக் குணப்படுத்தும் இன்சுலின் தயாரிக்கிறார்கள். தரையில் வாழும் பிராணிகளிலிருந்து பெறப்படும் இன்சுலினை விட இது பலமடங்கு அதிக சக்தி வாய்ந்தது.



‘கடல் பவளம்’ என்பது ஒரு பிராணிதான். இதிலிருந்து கிடைக்கும் ‘புரோஸ்டா கிளான்டின்ஸ்’, ஹார்மோன்களுக்கு இணையானது; கடுமையான நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கப் பயன்படுகிறது. தவிர, எலும்புகளில் சிதைவு ஏற்பட்டால், மற்றவர்களின் உடம்பிலிருந்து எலும்புகளை எடுத்துச் சிதைவுப் பகுதிகளில் பொருத்துவது வழக்கம். ஆனால், இப்போது, எலும்பைப் போலவே சுண்ணாம்புப் பொருளாலான பவளப் பாறைகளைத் தகுந்தபடி வெட்டிச் சிதைவுகளில் பொருத்துகிறார்கள்.






கடல்வாழ் உயிரினமான ‘கடல் விசிறி’யின் உடலிலிருந்து எடுக்கப்படும் மருந்துப் பொருள், குடல் புண்களைக் குணமாக்கவும், இயங்கு தசையை முடுக்கிவிடவும், உடல் வெப்பத்தைச் சீர்படுத்தவும், ஆஸ்துமா, இரத்த அழுத்தம் முதலிய நோய்களைக் குணப்படுத்தவும் பயன்படுகிறது.

கடல் பாம்பின் விஷம், நாகப்பாம்பின் விஷத்தைப்போல 50 மடங்கு தீவிரமுள்ளது! இந்த விஷத்தைப் பக்குவப்படுத்தினால் மருந்தாகிறது. இதன் மூலம் இரத்தத்தை விரைவில் உறைய வைக்கலாம். அறுவை சிகிச்சை, விபத்து முதலிய சமயங்களில் ஏற்படும் இரத்த நஷ்டத்தை இதனால் தடுத்துவிடலாம்.








திமிங்கிலத்தின் உடலிலிருந்தும் இன்சுலின் மருந்து தயாரிக்கப்படுகிறது.



பஃப்பர் என்னும் மீன், தன் உடலில் உள்ள கூரிய முள் போன்ற பகுதிகளிலிருந்து ஒருவித ரசாயனப் பொருளை வெளியிடுகிறது. மனிதனின் வலியை மறக்கச்செய்ய இந்த மீனின் இந்தப் பொருளைப் பயன் படுத்துகிறார்கள்.



புறா நீரை எப்படிக் குடிக்கும்?

ரேவதி

கோபி அடித்த பந்து பொன்னன் வீட்டில் போய் விழுந்து விட்டது.

''வாடா எடுத்துத் தரேன்'' என்று பொன்னன் கோபியை அழைத்து வந்தான்.

பரந்த முற்றத்தில் பந்தைக் காண வில்லை.

''ஒருவேளை தோட்டத்தில் விழுந்திருக்கும் வா பார்க்கலாம்'' என்று மூங்கில் கதவைத் திறந்து கொண்டு கோபியை அழைத்துக் கொண்டு போனான் பொன்னன்.

தோட்டத்தில் வாழையும் முருங்கையும், அவரையும் நிறைந்திருந்தன. நடுவிலே ஒரு கிணறு. முருங்கை மரத்தை விட உயரமாக பருத்த சவுக்குக் கம்பம் ஒன்று, உச்சியில் கயிறு மாட்டிய கொடிச் சக்கரத்துடன் காணப்பட்டது.

''பொன்னா, உங்க வீட்டுல கொடி கூட ஏத்துவீங்களா?'' என்று ஆவலாகக் கேட்டான் கோபி.

''இது கொடி ஏத்தற கொடிமரம் இல்லேடா. புறாவை ஏத்தற புறா மரம். மூங்கில் சட்டம் போட்ட சதுரமான தட்டியை அல்லது மரப்பலகையை இதுல ஏத்து வாங்க. புறாங்க வந்து இதுல உட்கார்ந்துக்கும்.''

கோபி அப்பொழுதுதான் கவனித்தான். முருங்கை மரங்களுக்குப் பின்னால் வரிசை வரிசையாகக் கம்பி வலைக் கூண்டு அலமாரிகள். சிலவற்றில் புறாக்கள் இருந்தன. சில ''உக்கும்'' சத்தத்தோடு கூண்டுக்குள்ளேயே சுற்றிக் கொண்டிருந்தன. முழு வெண்மை, சிமெண்ட் வண்ணம், காப்பிப் பொடி வண்ணம், புள்ளிக் கறுப்பு என்று பல வண்ணங்களில் புறாக்கள்.

கோபியின் ஆவலைப் புரிந்து கொண்ட பொன்னன் ''இதெல்லாம் எங்க அண்ணன் வளர்க்கும் புறாக்கள்'' என்றான்.

''அப்படின்னா, உங்க அண்ணன் புறா மாமிசம் சாப்பிடுவாரா?''

''புறா வளர்க்கிறவங்க எல்லோருமே, மாமிசத்துக்காகத்தான் வளர்க்கிறாங்க என்பது தப்பான எண்ணம். ஆனா, மாமிசத்துக்காகவே வளர்க்கிற புறாக்களும் உண்டு. எங்க அண்ணன் பந்தயத்துக்காகப் புறாக்களை வளர்க்கிறார். இவை எல்லாம் பந்தயப் புறாக்கள்.''

''எல்லாப் புறாக்களும் பார்க்க ஒரே

மாதிரிதானே இருக்கு?''


''நீ சொல்வது உண்மைதான். மாடப் புறா, மணிப்புறா, பந்தயப் புறா, தவிட்டுப் புறா, கொலம்பா புறான்னு எத்தனையோ ஜாதி இருக்கு. எல்லாமே பார்க்க அழகா, ஒரே மாதிரி மொழு மொழுன்னுதான் இருக்கும். இவைகளின் வால் பக்க சிறகுகளை வைத்துத்தான் வித்தியாசத்தைக் கண்டுபிடிக்க முடியும்'' என்றான் பொன்னன்.

''எனக்குக் கூட புறான்னா ரொம்பப் பிடிக்கும். எங்க வீட்டுல பெரிய தோட்டம் கூட இருக்கு. புறா வளர்க்க எனக்கு ரொம்ப ஆசை. 'ஆனால், அம்மாதான், புறா இருந்தால் பாம்பு வரும். ஆபத்து. வேண்டாம்ன்னு கண்டிப்பா தடுத்துட்டாங்க'' என்று வருத்தப்பட்டான் கோபி.

''புறாவின் எச்சத்திற்கு ஒரு வாடை உண்டு. எல்லாப் பறவைகளுக்குமே இது பொதுதான். இந்த வாடை இருக்கும் இடத்தில் புறா இருக்கும்; புறா முட்டை இருக்கும்னு பாம்புங்க மோப்பம் பிடித்து வரும். இது இயற்கைதான். அதுக்காகத் தான் இறுக்கமான கம்பி வலையால் புறாக் கூண்டைச் செய்வாங்க. அதோட அடிக்கடி கூண்டைச் சுத்தம் செய்து விட்டால் எந்தப் பிரச்னைக்கும் இடமே இல்லை.''

''எங்கம்மாவிடம் நான் மறுபடி சொல்லிப் பார்க்கிறேன்'' என்று கூறிய கோபி, ''புறாக்களின் ஜோடிகளில் ஒன்று இறந்து விட்டால் மற்றொன்று பட்டினி கிடந்து உயிர் விடும் என்கிறாங்களே? இது உண்மைதானா?'' என்று கேட்டான்.

''இது தவறான எண்ணம். பறவைகளில் புறா மிகவும் ஒற்றுமையாகக் குடும்பம் நடத்தும் பறவை என்பது உண்மை. சண்டை போட்டுக் கொள்ளாமல் அன்புடன் வாழும். விபத்து அல்லது வேறு ஏதாவது காரணமாக ஜோடிகளில் ஒன்று இறந்து விட்டால் மற்றொன்று சிறிது காலம் வரை துக்கமாக இருக்கும். பிறகு வேறு ஜோடி சேர்த்துக் கொண்டு உண்மையான



அன்புடன் குடித்தனம் நடத்தும். குடித்தனம் நடத்துவதில் ஆண்புறா, பெண் புறாவுக்கு மிகவும் உதவியாக இருக்கும். ஆண் புறா குச்சி, பஞ்சுகளைக் கொண்டு வந்தால், பெண் புறா ஒப்புக்கு ஒரு கூட்டைக் கட்டும். ஒரு முறைக்கு இரண்டு முட்டைகளைப் பெண் புறா இடும். முட்டைகளை ஆண், பெண் இரண்டுமே மாறிமாறி அடைகாக்கும். சுமார் பதினாறு நாட்களில் குஞ்சு வெளிவரும். அப்போ அதைப் பார்க்க ரொம்ப விகாரமா இருக்கும். குஞ்சுகளை வளர்ப்பதில் இரண்டுமே பங்கு கொள்ளும். புறாவின் தீனிப்பையில் பால் போன்ற ஒரு உணவு சுரக்கும். இதைப் புறா தன் வாய்க்குள் கொண்டு வரும். குஞ்சுகள், அலகை அவற்றின் வாய்க்குள் வைத்து இதைப் பருகும். ஒரு மாதத்தில் குஞ்சுகள் அழகாக வளர்ந்து விடும். அதுவரை அம்மாவும் அப்பாவும் இப்படிப் பாலைக் கொடுத்துக் குஞ்சுகளை வளர்க்கும்.''

''ஆண் பறாவுக்குக் கூடாவா இப்படிப் பால் சுரக்கும்! அதிசயமாக இருக்கிறதே!'' என்று வியந்தான் கோபி.

''புறாக்களை அமைதியின்; நம்பிக்கையின் சின்னமாக உலகெங்கும் மதிக்கிறார்கள். பிரளயம் வந்த கதையை பைபிளில் படித்திருக்கிறாய் இல்லையா? நோவாஸ் என்று ஒருவர், ஆண்டவனின் அன்புக்குப் பாத்திரமானவர். அவரை அழைத்த இறைவன், ''உலகம் அழியப் போகிறது. எல்லா உயிர்களிலும் ஒவ்வொரு ஜோடியை ஒரு படகில் வைத்துக் கொள்'' என்று கூறுகிறார். நோவாஸ் பெரிய படகைத் தயாரிக்கிறார். எல்லா உயிரினங்களிலும் ஒரு ஜோடியை எடுத்துப் படகில் வைக்கிறார். பிரளயம் ஏற்படுகிறது. உலகமே நீரில் அழிய, நோவாஸின் படகு மட்டும் மிதக்கிறது. நீர் வடிந்து விட்டதா என்பதை அறிய நோவாஸ் புறா ஒன்றைப் பிடித்துப் பறக்க விடுகிறார். புறா, ஒரு ஆலிவ் இலைத் துளிருடன் திரும்புகிறது. நீர் வடிந்து ஜீவராசிகள் வாழ நிலம் பக்குவமாகி விட்டது என்ற நம்பிக்கையைப் புறா அளித்தது.''

''ஓ! அதானா வாயில் ஆலிவ் இலைத் துளிருடன் அமைதிப் புறாவை வரைகிறார்கள்?'' என்று வியந்தான் கோபி.

''இந்த அமைதிப் புறாவை முதலில் இப்படி வடிவமைத்த பெருமை உலகப் புகழ் பெற்ற பிகாஸோ என்ற ஓவியரையே சாரும்.''



''ஆமாம், புறாவை எத்தனை தொலைவில் விட்டாலும் அது மறுபடி ஒழுங்காக வளர்ந்த இடத்திற்கே வந்து விடுகிறதே! இது எப்படி?''

''எல்லாம் நாம் பழக்குகிற மாதிரியில்தான் இருக்கு. எங்க அண்ணன் புறாக்களைப் பழக்குவதை நானே பார்த்திருக்கேன். முதலில், நாலு தெரு தாண்டிக் கொண்டு விடுவார். தவறாது வீட்டுக்கு வந்து கொடித் தட்டில் உட்கார்ந்து விடும். இப்படி ஒரு வாரம். பிறகு ஊர் எல்லையில். அப்படி ஒரு வாரம். பிறகு பக்கத்து ஊரில். அதற்குப் பிறகு அடுத்த ஊரில் இப்படி முறை வைத்துப் பழக்குவார். உட்கார விடாது மணிக்கணக்கில் பறக்கப் பயிற்சி அளித்த பிறகே இப்படிச் செய்ய முடியும். எங்க அண்ணனோட புறாக்கள், இந்தச் சுற்று வட்டாரத்தில் இருபத்தைந்து கிலோ மீட்டர் வரை எங்கே கொண்டு போய் விட்டாலும் திரும்ப வந்து விடும். எங்க

அண்ணன் நிறைய பதக்கங்கள், கோப்பைகள் எல்லாம் வாங்கியிருக்கிறார்'' என்று பெருமையோடு கூறினான் பொன்னன்.

''என்னங்க, பொன்னன் தன் நண்பரிடம் நம்மைப் பற்றிப் புகழ்வதைக் கேட்டீங்களா?'' என்று கேட்டது கூண்டில் இருந்த பெண் புறா.

''கேட்டுக்கிட்டுத்தானே இருக்கேன். எனக்கு எத்தனை பெருமையா இருக்கு தெரியுமா? திருமண வாழ்த்து அட்டைகளில் நம்ம படத்தைப் போடறதுக்கு என்ன காரணம்னு இப்பத்தான் தெரிஞ்சுது'' என்றது ஆண் புறா.

ஒரு குழிந்த பீங்கான் தட்டை எடுத்து வந்து வைத்த பொன்னன், அது நிறையத் தண்ணீரை விட்டு கூண்டைத் திறந்தான். இரண்டு புறாக்களும் அழகாக ஆடி அசைந்து நடந்து வந்து தட்டை நெருங்கின.

''இது முந்தா நேற்றுத் தண்ணீர். வாடை அடிக்குது. இந்தப் பொன்னன் பய ஓக்கு, கிணற்றில் இருந்து புதுத் தண்ணீரை இழுத்து வர சோம்பேறித்தனம். இந்தப் பழைய நாற்றத் தண்ணீரைத் தொடாதே'' என்றது ஆண் புறா. இரண்டும் பொன்னனை நிமிர்ந்து பார்த்து நின்றன.

''என்ன பொன்னா! இதுங்க இரண்டும் தண்ணீரைக் குடிக்காம உன்னையே பார்க்குதே?'' என்று கேட்டான் கோபி.

''அதானே!'' என்று யோசித்த பொன்னன், ''கோபி, இப்பப் புரிஞ்சு போச்சு. இந்த சொம்புத் தண்ணீர் மூன்று நாள் பழைய தண்ணீர். அதான் இதுங்க குடிக்காம நிற்குது. புறாங்க ரொம்ப சுத்தமானவை. நீர், உணவு, கூண்டு எல்லாமே சுத்தமா இல்லைன்னா அதுங்க ஒத்துழைக்காம சத்தியாக்கிரகம் பண்ணும்'' என்று கிணற்றில் இருந்து பக்கெட்டில் புதிய நீரை இழுத்து, தட்டில் ஊற்றினான்.

இரண்டு புறாக்களும் நீரில் அலகை வைத்து உறிஞ்சின. இரண்டே நிமிடத்தில் தட்டு காலி!

''என்னடா பொன்னா! என்னமோ ஸ்ட்ரா போட்டு நம்பளை மாதிரியே இதுங்க நீரை உறிஞ்சிக் குடிக்குதே!'' என்று வியந்தான் கோபி.

''பறவைகளில் புறா ஒன்றுதான் நம்மை மாதிரி நீரை உறிஞ்சிக் குடிக்கும். மற்றவை எல்லாம், அலகில் நீரை அள்ளி, அண்ணாந்து பார்த்துத்தான் குடிக்கும்'' என்றான் பொன்னன்.

புறாக்கள் இரண்டும் பெருமையுடன் சிறகடித்தன.

அறிவியல் உண்மைகள்

- புறா, பறவைகளில் 'கொலம்பிடி' என்னும் குடும்பத்தைச் சேர்ந்தவை. 300 இனங்கள் உண்டு.
- பெரிதாக இருப்பதை பிஜன் என்றும், சிறி தாக இருப்பதை டவ் என்றும் குறிப்பிடுகிறார்கள்.
- துருவப் பிரதேசம் தவிர உலகின் எல்லாப் பகுதிகளிலும் புறாக்கள் உள்ளன.
- அமைதியான, நம்பிக்கையான இல்லறத்திற்குப் பெயர் போனவை. அன்பு காட்டுவதில் ஈடுஇணை இல்லாதவை.
- குடும்பப் பொறுப்பை (கூடு கட்டுவது, அடை காப்பது, குஞ்சுகளை வளர்ப்பது எல்லாவற்றையும்) ஆண் பெண் இரண்டும் சரிசமமாகப் பகிர்ந்து கொள்கின்றன.
- சுத்தமான நீரையே பருகும். நீரை மனிதர் மாதிரி உறிஞ்சிக் குடிக்கும் பறவை இது ஒன்றே.
- எங்கு சென்று, விட்டாலும் தவறாது திரும்பி வருவது பெரிய புதிர். தலைக்குள் இருக்கும் காந்தப்புலனே (கப்பலில் திசை அறியும் காந்த முள் மாதிரி) இதற்குக் காரணம் என்று உணரப்பட்டாலும், அறிவியல் அடிப்படையில் இது உறுதி செய்யப்படவில்லை.



கரும்புச் சாறு

இரும்புச் சக்கரம் சுழன்று
இனிய கரும்பைப் பிழியும்
விருப்பத் தோடு நம்மை
வாங்கிக் குடிக்க வைக்கும்

வெல்லம் சர்க்கரை கல்கண்டு
விதம் விதமாய் மிட்டாய்கள்
எல்லாம் செய்ய உதவிடும்
எல்லார் நாக்கிலும் இனித்திடும்!

மஞ்சள் காமாலை நோயை
மருந்தாய் மாறி விரட்டும்
கொஞ்ச நஞ்சம் இல்லை
கரும்புச் சாறின் பெருமை!

- அ. முகம்மது நிஜாம்,
நெல்லிக்குப்பம்.


பன்ரொட்டி

பஞ்சு போன்ற பன்ரொட்டி
பட்டின் மென்மை பன்ரொட்டி
பிஞ்சுக் குழந்தை விரும்பிடும்
பக்குவம் செய்த பன்ரொட்டி

பல்லுப் போன பாட்டியும்
பார்வை இல்லாத் தாத்தாவும்
எல்லா வயதினர் எளிதாக
ஏற்க வைக்கும் பன்ரொட்டி

செல்வர் ஏழை பேதமின்றி
சாப்பிட வைக்கும் பன்ரொட்டி
நல்ல சுவையாம் பன்ரொட்டி
நன்மை செய்யும் பன்ரொட்டி

- எம். சேக் உசேன்,
வடகரை.




தெருவிளக்கு

அரசு போட்ட விளக்கு
அடியேன் படிக்கும் விளக்கு
இருளை விரட்டும் விளக்கு
அறிவைப் புகட்டும் விளக்கு

நிமிர்ந்து நிற்கும் விளக்கு
நாங்கள் போடா விளக்கு
எம்மைப் போன்றே எவர்க்கும்
என்றும் உதவும் விளக்கு!

வண்ண வண்ண விளக்கு
வழிப்பறி நீக்கும் விளக்கு
கம்பியில் எரியும் விளக்கு
கல்லெறி வாங்கும் விளக்கு!

- பி.ஜி. கதிரவன்,
மதுரை - 16.





★ 'ஹஜ்ரத்பால்' கட்டுரையில் ''வணக்கத்திற்குரிய முகமது நபி'' என்று வந்துள்ளது தவறு. முஸ்லிம்களாகிய நாங்கள் ஒரே இறைவனை (அல்லாஹ்) வணங்குகிறோம். முகமது நபி(ஸல்) அவர்கள் இறைவனால் அனுப்பப்பட்ட கடைசி தூதுவர். - நாகூர் எஸ். அஸ்கர் அலி.

★ வீரன் ரோமுலஸ் தீரன் ரீமஸ் ரோமின் வரலாற்றைத் தெரிந்து கொள்ளப் பெரிதும் உதவியது. எத்தனை காலமானாலும் நெஞ்சில் பசுமையாக இருக்கும். - நெல்லிக்குப்பம் மா. பரசுராமன், சித்தாலபுரம் சுந்தரபால், சீர்காழி சம்பந்தமூர்த்தி மற்றும் பலர்.

★ அம்பிகாவின் துணிச்சல் எங்களுக்கு வழிகாட்டி. கோகுலத்தில் அட்டைப்படமாக வருவதற்காகவாவது துணிவோடு சாதனை புரியத் தூண்டுகிறது! - பொள்ளாச்சி. சி. மாணிக்கம், விசலூர் ஜி.ஜி. கிருஷ்ணன், அம்மையார்குப்பம் மா. வே. கிருஷ்ணன், சிவக்கொல்லை ஆர். பாஸ்கரன், கொண்டசம்பாளையம் எஸ். பெருமாள் நண்பர்கள், திருவாரூர் கமலதியாகராஜன், மேலப்பாதி என். ராஜலட்சுமி, காரட்டை ஆர். சக்திவேல் மற்றும் பலர்.

★ 'எனக்கு ஜுரம்' பொய் கூறுபவர்களுக்கு நல்ல படிப்பினை. - சாத்தூர் மதனகோபால், பட்டீச்சுரம் பி. கல்யாணசுந்தர் மற்றும் பலர்.

★ அபிராமியின் அட்டிகையை ஏன் 6 பக்கம் மட்டும் போடுகிறீர்கள்? ஆவலைத் தூண்டி வேடிக்கை பார்க்கிறீர்களே! நியாயமா? - கணபதிபுரம் லட்சுமிபதி, சின்னாளப்பட்டி நா. முத்துலட்சுமி, பட்டீஸ்வரம் கே. கருப்பையன், சங்கர், பி. சுந்தர் மற்றும் பலர்.

★ ஹஜ்ரத்பால் மசூதியைப் பற்றி இத்தனை தெளிவாக எந்தப் பத்திரிகையும் எழுதவில்லை! - மேட்டூர்அணை செந்தில் ராஜா, நவநீதன், சின்னகோவில் பி. சுந்தர், விசலூர் சுரம்பக்குடி சுரேஷ் ஐயப்பன், அபர்ணா, அய்யனார் மற்றும் பலர்.

★ தங்கவால் குரங்கு, சின்னப் பிள்ளைகள் பகுதி ஆரம்பமாகி விட்டதைக் காட்டுகிறது. நல்ல செயல். நிறுத்தி விட வேண்டாம். - சமயபுரம் சி. முத்துப்பாண்டியன், தாம்பரம் ஆர். வெங்கடேஷ்.

★ ''பசுபாலிக்குப் பெருவிழா'' - டீ.வி. நிகழ்ச்சியைப் பார்த்த போது ரசிக்க பெரிதும் உதவியது - பெரியபாளையம் க. குண்டுமணி, தாராபுரம் பா. ராசப்பன், சித்தூர் வெ. பவானந்தம், தூக்கணாம்பட்டி வேம்பு, மற்றும் பலர்.

★ 'ஆழ்கடலின் அதிசயங்கள்' டாக்குமெண்டரி படத்தைப் பார்த்த பிரமிப்பை ஏற்படுத்தியது - திருவண்ணாமலை சூ. வெற்றிவேல், திருக்கோயிலூர் மு. கண்ணப்பன், விருதுநகர் கே. நாகபூஷணம், மஞ்சக்குப்பம், வி. ராதாமணி திருப்பராய்த்துறை ஆர். சி. ராஜா, ஈரோடு என். சண்முகம், பொள்ளாச்சி வெ. பிரவீன்குமார், ஆனைகல்மேடு சி. மகேஸ்வரன், ஆர். புனிதா தஞ்சாவூர், எம். வேல்முருகன், எலவானாசூர்கோட்டை சுஜிதா மற்றும் பலர்.

★ ''பிளேடு எப்படி உருவானது?'' புதிய தகவல்களின் அரிய தொகுப்பு. - வைத்தீஸ்வரன் கோவில் து. பாலாஜி, பூம்புகார் வி. பூபதி, கர்ணசமுத்திரம் வெங்கபதி, குடியாத்தம் எம். ஐஸ்வர்யா மற்றும் பலர்.

★ டிசம்பர் இதழில் வெளியான கடைமடையன் துணுக்கு ஏற்கெனவே பல பத்திரிகைகளில் வெளிவந்தது. தூங்காது விழிப்புடன் பரிசீலியுங்கள் சார்! - கல்பனாபுரம் து. வெம்பு, கார்காத்தசிவனூர் மு. மருதுராஜா, பரமக்குடி என். ஹரிஹரன் மற்றும் பலர்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி. ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 360/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் ரூ. 180/-.

REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka

